# ஐக்கிய நாடுகள் தாபனம்

பற்றிய

அடிப்படைத் தகவல்கள்



ஐக்கிய நாடுகள்

THE UNITED NATIONS FAMILY (TAMIL)

பொதுசனத் தகவல் திணைக்களம்

# ஐக்கிய நாடுகள் தாபனம்

## பற்றிய அடிப்படைத் தகவல்கள்

ஐக்கிய நாடுகள்
நியூயோர்க், 2000

# பொருளடக்கம்

**ஐக்கிய நாடுகள் தாபனம்............................................................ 01**
ஐக்கிய நாடுகள் சாசனம்............................................................ 02
நோக்கங்களும் கோட்பாடுகளும்.................................................. 03
அங்கத்துவம்............................................................................ 04
உத்தியோகபூர்வ மொழிகள்........................................................ 04

**தாபனத்தின் கட்டமைப்பு ........................................................ 04**
பொதுச்சபை............................................................................ 04
பாதுகாப்புச் சபை...................................................................... 07
பொருளாதார-சமூகநலச் சபை..................................................... 09
நம்பிக்கைப் பொறுப்புச் சபை....................................................... 12
சர்வதேச நீதிமன்றம்.................................................................12
செயலகம்................................................................................ 14
செயலாளர் நாயகம்.................................................................... 15
ஐ.நா. வரவு செலவுத் திட்டம்...................................................... 19

**ஐக்கிய நாட்டு அமைப்புக்களின் குடும்பம்.................................. 21**
ஐ.நா. செயலகம்....................................................................... 22
சர்வதேச விசாரணை மன்றங்கள்................................................ 36
ஐ.நா. நிகழ்ச்சித் திட்டங்களும் ஏனைய அமைப்புக்களும்.... 37
விசேட முகவராண்மைகளும் ஏனைய தாபனங்களும்............ 55

**பின்னிணைப்புக்கள்**
ஐ.நா. அங்கத்துவ நாடுகள்......................................................... 76
அமைதிகாக்கும் செயற்பாடுகள்................................................... 81
ஐ.நா. விசேட அனுஷ்டானங்கள்................................................. 87

# ஐக்கிய நாடுகள் தாபனம்

"ஐக்கிய நாடுகள்" என்ற பெயர் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஃபிராங்லின் ரூஸ்வேல்ட் அவர்களினால் புனையப்பட்டதாகும். இரண்டாவது உலக யுத்த காலத்தில், 1942 ஜனவரி 1 ஆம் திகதி ஒன்றுகூடிய 26 நாடுகளின் பிரதிநிதிகள் "அக்சிஸ்" (AXIS) வல்லரசுகளுக்கு எதிரான யுத்தத்தைத் தமது அரசாங்கங்கள் தொடர்ந்து மேற்கொள்ளுமென உறுதியளித்து வெளியிட்ட **ஐக்கிய நாடுகள் பிரகடனத்திலேயே** இப் பெயர் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டது.

இதற்கு முன்னர், உலக நாடுகள் ஏதேனும் குறிப்பிட்ட விடயங்களில் ஒத்துழைப்பை மேற்கொள்வதற்காகவே சர்வதேச அமைப்புக்களை ஏற்படுத்தும் வழக்கம் இருந்து வந்தது. உதாரணமாக, சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் 1865 இல் உருவாக்கப்பட்டது. அனைத்துலகத் தபால் ஒன்றியம் 1874 இல் ஏற்படுத்தப்பட்டது. இவையிரண்டும் தற்போது ஐக்கிய நாடுகளின் விசேட முகவராண்மை அமைப்புக்களாகச் செயற்படுகின்றன.

நெருக்கடிகளுக்குச் சமாதானத் தீர்வு காணவும் யுத்தங்களைத் தடுக்கவும் போர் விதிமுறைகளை வகுக்கவும் அவசியமான ஒப்பந்தச் சாதனங்களை விரிவுபடுத்தும் பொருட்டு முதலாவது சர்வதேசச் சமாதான மாநாடு 1899 ஆம் ஆண்டு ஹேக் நகரில் நடத்தப்பட்டது. சர்வதேசப் பிணக்குகளுக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான ஒப்பந்தம் இம் மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டது. இது தொடர்பான நிரந்தர நீதிமன்றம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. இந்த நீதிமன்றத்தின் பணிகள் 1902 இல் ஆரம்பமாகின.

லீக் ஒப் நேஷன்ஸ் (LEAGUE OF NATIONS) என்ற அமைப்பே ஐக்கிய நாடுகளின் முன்னோடியாகும். முதலாவது உலக யுத்த காலத்தில், அதாவது 1919 ஆம் ஆண்டில் வெர்சேல்ஸ் உடன்படிக்கைக்கு அமைய உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு, "சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவித்து சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவதையே" அதன் குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

வெர்சேல்ஸ் உடன்படிக்கைக்கு அமைய லீக் ஒப் நேஷன்ஸுடன் இணைக்கப்பட்ட ஒரு முகவராண்மையாக சர்வதேச தொழில் தாபனம் ஏற்படுத்தப்பட்டது. இருந்தபோதிலும், இரண்டாவது உலக யுத்தத்தைத் தடுக்க முடியாமல் போனதையடுத்து லீக் ஒப் நேஷன்ஸ் செயலிழந்தது.

ஐக்கிய நாடுகள் சாசனத்தை வரைவதற்காக 50 நாடுகளின் பிரதிநிதிகள் 1945 ஆம் ஆண்டு சான் பிரான்சிஸ்கோ நகரில் மாநாடு ஒன்றை நடத்தினர். 1944 ஓகஸ்ட்-ஒக்டோபர் காலப்பகுதியிலே ஐக்கிய அமெரிக்காவின் டம்பார்டன் ஓக்ஸ் நகரில் சீனா, சோவியத் யூனியன், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்தாலோசித்து வகுத்த பிரேரணைகளின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் நடத்தப்பட்டன. இறுதியாக, 1945 ஜூன் 26 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சாசனம் 50 நாடுகளின் பிரதிநிதிகளால் கைச்சாத்திடப்பட்டது. போலந்து இம் மாநாட்டில் பங்குபற்றாதபோதிலும் பிறிதொரு தினத்தில் கைச்சாத்திட்டு, ஐக்கிய நாடுகளின் 51 ஆரம்பகால அங்கத்துவ நாடுகளுள் ஒன்றானது.

1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி சீனா, பிரான்ஸ், சோவியத் யூனியன், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா என்பன உள்ளிட்ட பெரும்பாலான ஆரம்பகால அங்கத்துவ நாடுகள் ஐ.நா. சாசனத்தை முறைப்படி அங்கீகரித்தபோதே ஐக்கிய நாடுகள் உத்தியோகபூர்வமாக நடைமுறைக்கு வந்தது. இதன் காரணமாகவே, ஐக்கிய நாடுகள் தினம் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 24 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

## ஐக்கிய நாடுகள் சாசனம்

சாசனம் என்பது அமைப்பை உருவாக்குகின்ற அடிப்படை ஒப்பந்தச் சாதனமாகும். அங்கத்துவ நாடுகளின் உரிமைகள், கடமைகள் என்பவற்றை அதுவே எடுத்துக் கூறுகின்றது. ஐக்கிய நாடுகளின் உறுப்பாண்மைகள், நடைமுறைகள் முதலிய யாவும் அதற்கமையவே ஏற்படுத்தப்படுகின்றன.

ஒரு சர்வதேச உடன்படிக்கையாக விளங்கும் இச் சாசனம் - நாடுகளின் தன்னாதிக்கச் சமத்துவ உரிமை முதல் நாடுகளுக்கிடையிலான உறவுகளில் வன்முறைப் பிரயோகத்தைத் தடைசெய்தல் ஈறாக - சகல சர்வதேச உறவுகள் தொடர்பாகவும் பிரதான கோட்பாடுகளைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

### சாசனத்தின் முன்னுரை

ஐக்கிய நாடுகள் தாபனத்தை உருவாக்கிய நாடுகளைச் சேர்ந்த மக்களின் இலட்சியங்களையும் பொதுவான நோக்கங்களையும் சாசனத்தின் முன்னுரை பின்வருமாறு வெளிப்படுத்துகின்றது:

**"ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த மக்களாகிய நாம்,** எமது வாழ்நாளிலேயே இரு தடவைகள் மனித குலத்திற்கு அளப்பரிய துன்பங்களை ஏற்படுத்திய யுத்தமெனும் கொடுமையிலிருந்து வருங்காலச் சந்ததியினரைக் காப்பாற்றவும்; அடிப்படை மனித உரிமைகள், மனித கௌரவம், மனித விழுமியங்கள், ஆண்-பெண் சம உரிமைகள், சிறிய-பெரிய நாடுகளின் சம உரிமைகள் ஆகியவற்றின் மீதான நம்பிக்கையை மீண்டும் நிலைநிறுத்தவும்; உடன்படிக்கைகள் மற்றும் ஏனைய சர்வதேசச் சட்டங்களுக்கு அமைந்த கடப்பாடுகள் கௌரவிக்கப்படும் நீதியான சூழ்நிலையை உருவாக்கவும்; விரிவான சுதந்திரச் சூழலில் சமூக முன்னேற்றத்தை ஊக்குவித்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் உறுதிபூண்டுள்ளோம்.

**"இந்த நோக்கங்களுக்காக,** சகிப்புத்தன்மையைக் கடைப்பிடித்து நல்ல அயலவர்களாகச் சமாதான சகவாழ்வை மேற்கொள்ளவும்; சர்வதேச சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றை நிலைநாட்டுவதற்கு எமது சக்திகளை ஒன்றிணைக்கவும்; பொது நன்மைக்காகவல்லாது மற்றெந்தக் காரணத்திற்காகவும் ஆயுத பலத்தை உபயோகிப்பதில்லை என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு நடைமுறையில் பின்பற்றவும்; சகல மக்களினதும் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்காகச் சர்வதேச அமைப்புக்களைப் பயன்படுத்தவும் **நாம் எமது முயற்சிகளை ஒருங்கிணைக்க முடிவுசெய்துள்ளோம்.**

இதன் பிரகாரம், எமது அரசாங்கங்கள் சான் பிரான்சிஸ்கோவில் கூடிய பிரதிநிதிகளின் மூலம் வெளிப்படுத்திய பூரண அதிகாரத்திற்கு அமைய, ஐக்கிய நாடுகள் சாசனத்தை ஏற்றுக்கொண்டு, ஐக்கிய நாடுகள் எனப்படும் ஒரு சர்வதேச அமைப்பை இத்தால் ஏற்படுத்துகின்றன."

## நோக்கங்களும் கோட்பாடுகளும்

சாசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஐக்கிய நாடுகளின் **நோக்கங்கள்** பின்வருமாறு:

- சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல்.
- மக்களின் சுயநிர்ணய மற்றும் சம உரிமைக் கோட்பாட்டுக்கு மதிப்பளிக்கப்படும் அடிப்படையில் நாடுகளுக்கு இடையே நட்புறவை வளர்த்தல்.
- சர்வதேச பொருளாதார, சமூக, கலாசார, மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களுக்கு மதிப்பளிக்கப்படுவதை ஊக்குவிப்பதிலும் ஒத்துழைப்பை மேற்கொள்ளுதல்.
- இப் பொது நோக்கங்களை அடைவதில் நாடுகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் மத்திய நிலையமாக விளங்குதல்.

ஐக்கிய நாடுகளின் செயற்பாட்டை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் பின்வருமாறு:

- சகல அங்கத்துவ நாடுகளினதும் சமத்துவமான இறைமையின் அடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் தாபனம் அமைக்கப்பட்டுள்ளது.
- சகல அங்கத்துவ நாடுகளும் சாசனத்திற்கு அமைந்த தமது கடமைகளை விசுவாசமாக நிறைவேற்ற வேண்டும்.
- அவை, தமது சர்வதேசப் பிணக்குகளை அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பங்கம் ஏற்படாத விதத்தில் நீதியாகவும் சமாதானமாகவும் தீர்த்துக்கொள்ள வேண்டும்.
- அவை, மற்றெந்த நாட்டுக்கு எதிராகவும் அச்சுறுத்தல் விடுக்கவோ அல்லது ஆயுதபலத்தைப் பயன்படுத்தவோ கூடாது.
- சாசனத்திற்கு அமைய ஐ.நா. எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் அங்கத்துவ நாடுகள் பூரண ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.
- எந்தவொரு நாட்டினதும் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடுசெய்ய ஐக்கிய நாடுகள் தாபனத்திற்கு அதிகாரமளிக்கும் ஏற்பாடு எதுவும் சாசனத்தில் கிடையாது.

## ஐக்கிய நாடுகள் சாசனத்திற்கான திருத்தங்கள்

பொதுச்சபையில் அங்கம் வகிக்கும் மூன்றிலிரண்டு பங்கு நாடுகளின் வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகள் உள்ளிட்ட மூன்றிலிரண்டு பங்கு ஐ.நா. அங்கத்துவ நாடுகளினால் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில், சாசனத்தில் திருத்தங்களைச் செய்ய முடியும். இதுவரை, சாசனத்தின் நான்கு உறுப்புரைகள் திருத்தப்பட்டுள்ளன. அவற்றுள் ஓர் உறுப்புரை இரு தடவைகள் திருத்தப்பட்டது.

- 1965 இல், பாதுகாப்புச் சபை அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை 11 இலிருந்து 15 ஆக அதிகரிக்கப்பட்டது (உறுப்புரை 23). தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு அவசியமான வாக்குகளின் எண்ணிக்கை ஏழில் இருந்து ஒன்பதாக அதிகரிக்கப்பட்டது. நடைமுறை விடயங்கள் அல்லாத முக்கிய விடயங்களில் ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளின் ஒப்புதல் வாக்குகளும் இதில் அடங்க வேண்டும் (உறுப்புரை 27).

• 1965 இல், பொருளாதார-சமூகநலச் சபை அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை 18 இலிருந்து 27 ஆக அதிகரிக்கப்பட்டது. 1973 இல் அது 54 ஆக மேலும் அதிகரிக்கப்பட்டது (உறுப்புரை 61).
• 1968 இல், சாசனத்தை மீளாய்வு செய்வதற்கான பொது மாநாட்டைக் கூட்டுவதற்குப் பாதுகாப்புச் சபையில் தேவைப்படும் வாக்குகளின் எண்ணிக்கை ஏழில் இருந்து ஒன்பதாக அதிகரிக்கப்பட்டது (உறுப்புரை 109).

---

## அங்கத்துவம்

சாசனத்திற்கு அமைவான தமது கடமைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றை நிறைவேற்றுவதற்கான விருப்பத்தையும் இயலும் தன்மையையும் வெளிப்படுத்துகின்ற சமாதான விரும்பிகளான சகல நாடுகளும் ஐக்கிய நாடுகள் தாபனத்தில் அங்கத்துவம் பெறமுடியும். *(அங்கத்துவ நாடுகளின் பட்டியலுக்கு 76 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்).*

பாதுகாப்புச் சபையின் சிபாரிசுக்கு அமைய, பொதுச்சபை புதிய அங்கத்துவ நாடுகளை ஏற்றுக்கொள்கிறது. சாசனத்தின் கோட்பாடுகளுக்கு முரணாக நடக்கும் ஓர் அங்கத்தவரை இடைநிறுத்தி வைக்க அல்லது வெளியேற்ற ஐ.நா. சாசனத்தில் ஏற்பாடு உள்ளது. எனினும், இதுவரை அத்தகைய நடவடிக்கை ஒருபோதும் எடுக்கப்படவில்லை.

## உத்தியோகபூர்வ மொழிகள்

சீனம், ஆங்கிலம், பிரெஞ்சு, றஷ்யன், ஸ்பானியம் என்பனவே சாசனத்தின்படி ஐக்கிய நாடுகளின் உத்தியோகபூர்வ மொழிகளாகும். பொதுச்சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதார-சமூகநலச் சபை ஆகியவற்றில் அரபு மொழியும் உத்தியோக மொழியாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

# தாபனத்தின் கட்டமைப்பு

சாசனத்தின் பிரகாரம், ஐக்கிய நாடுகள் தாபனம் ஆறு பிரதான உறுப்பாண்மைகளைக் கொண்டுள்ளது. பொதுச்சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதார-சமூகநலச் சபை, நம்பிக்கைப் பொறுப்புச் சபை, சர்வதேச நீதிமன்றம், செயலகம் என்பனவே அவையாகும். எனினும், ஐ.நா. குடும்பம் இதைவிட மிகவும் விரிவானது. 15 முகவராண்மைகள், பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள், நிறுவனங்கள் என்பனவும் இதில் அடங்குகின்றன.

## பொதுச்சபை

பொதுச்சபையே கலந்துரையாடல்களுக்கான பிரதான அரங்கமாகும். சகல அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளும் இச் சபையில் இடம்பெறுகின்றனர். இங்கு ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு வாக்கு உண்டு. சமாதானமும் பாதுகாப்பும், புதிய அங்கத்தவர்களைச் சேர்த்தல், வரவு-செலவுத் திட்ட விடயங்கள் போன்ற முக்கிய விவகாரங்களில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகள் மூலமே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. ஏனைய விடயங்களில் தீர்மானங்களை எடுப்பதற்குச் சாதாரண பெரும்பான்மை போதுமானது.

**பணிகளும் அதிகாரங்களும்**

ஐ.நா. சாசனத்தின்படி, பொதுச்சபையின் பணிகள் மற்றும் அதிகாரங்களுள் பின்வருன அடங்கும்:

- சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுவதற்காக ஆயுதபரிகரணம் மற்றும் ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பான கோட்பாடுகள் உள்ளிட்ட ஒத்துழைப்புக் கோட்பாடுகளையிட்டு ஆராய்ந்து சிபாரிசு செய்தல்.
- பாதுகாப்புச் சபையில் ஆராயப்பட்டுக்கொண்டிருக்கும் பிணக்கு அல்லது பிரச்சினை நீங்கலாக, சர்வதேச சமாதானத்திற்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக விளங்கும் ஏனைய விடயங்கள் பற்றிப் பரிசீலனை செய்து சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.
- இதே விதிவிலக்கு நிபந்தனைக்கு அமைவாக, சாசனத்தின் வரம்பெல்லைக்குட்பட்ட ஏதேனும் பிரச்சினையை அல்லது ஐ.நா. உறுப்பாண்மை ஒன்றின் பணிகளையும் அதிகாரங்களையும் பாதிக்கின்ற ஏதேனும் பிரச்சினையை ஆராய்ந்து சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.
- சர்வதேச அரசியல் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும் சர்வதேசச் சட்டத்தை விருத்திசெய்து கோவைப்படுத்துவதற்கும் சகலருக்கும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்கள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கும் பொருளாதார, சமூக, கலாசார, கல்வி, சுகாதாரத் துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும் ஆய்வுகளை மேற்கொண்டு சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.
- நாடுகளுக்கிடையே நட்புறவைப் பாதிக்கக்கூடிய ஏதேனும் பிரச்சினை தோன்றும்போது, அப் பிரச்சினை எவ்வாறு ஏற்பட்டது என்பதைக் கருதாமல், அமைதி வழியிலான தீர்வுக்குச் சிபாரிசுகளை முன்வைத்தல்.
- பாதுகாப்புச் சபையிடமிருந்தும் ஏனைய ஐ.நா. உறுப்பாண்மைகளிடம் இருந்தும் அறிக்கைகளைப் பெற்றுப் பரிசீலனை செய்தல்.
- ஐக்கிய நாடுகளின் வரவு செலவுத் திட்டத்தைப் பரிசீலித்து அங்கீகரித்தல். ஒவ்வொரு அங்கத்துவ நாடும் எவ்வளவு நிதிப் பங்களிப்புச் செலுத்த வேண்டும் என்பதைத் தீர்மானித்தல்.
- பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பினர்களையும் பொருளாதார சமூகநலச் சபையின் உறுப்பினர்களையும் நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கான "தேர்ந்தெடுக்கப்படும்" உறுப்பினர்களையும் தெரிவுசெய்தல். பாதுகாப்புச் சபையுடன் இணைந்து சர்வதேச நீதிமன்றத்திற்கு நீதிபதிகளைத் தெரிவுசெய்தல். பாதுகாப்புச் சபையின் சிபாரிசுக்கு அமையச் செயலாளர் நாயகத்தை நியமித்தல்.

**கூட்டத்தொடர்கள்**

பொதுச்சபையின் வழமையான கூட்டத்தொடர் ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மாதத்தில் ஆரம்பமாகும். 2000-2001 கூட்டத்தொடர் பொதுச்சபையின் 55 ஆவது வழமையான கூட்டத்தொடர் ஆகும். ஒவ்வொரு கூட்டத்தொடரின் ஆரம்பத்திலும் பொதுச்சபை ஒரு புதிய தலைவரையும் 21 உபதலைவர்களையும் ஆறு பிரதான குழுக்களுக்கான தவிசாளர்களையும் தெரிவுசெய்யும். புவியியல் ரீதியான சம பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு, சபையின் தலைமைப் பதவியானது ஆபிரிக்கா, ஆசியா, கிழக்கு ஐரோப்பா, லத்தின் அமெரிக்காவும் கரீபியனும், மேற்கு ஐரோப்பாவும் ஏனைய நாடுகளும் என்ற ஐந்து பிராந்தியங்களின் அடிப்படையில் வருடத்திற்கு வருடம் மாறிமாறி வழங்கப்படும்.

பாதுகாப்புச் சபை அல்லது பெரும்பான்மை அங்கத்துவ நாடுகள் அல்லது பெரும்பான்மை அங்கத்துவ நாடுகளின் ஒப்புதலுடன் தனியொரு அங்கத்துவ நாடு விடுக்கும் வேண்டுதலுக்கமைய பொதுச்சபையின் விசேட கூட்டத்தொடர்கள் நடத்தப்படலாம். பாதுகாப்புச் சபையின் ஒன்பது அங்கத்துவ நாடுகள் அல்லது ஐ.நா.வின் பெரும்பான்மை அங்கத்துவ நாடுகள் அல்லது பெரும்பான்மை அங்கத்து நாடுகளின் ஒப்புதலுடன் தனியொரு நாடு விடுக்கும் வேண்டுதலின் பேரில் அவசர விசேட கூட்டங்களும் நடத்தப்படலாம்.

வழமையான கூட்டத்தொடரின் முதல் நிகழ்ச்சியாக பொது விவாதம் இடம்பெறும். தேசத் தலைவர்கள் அல்லது அரசாங்கத் தலைவர்களும் அங்கு உரைநிகழ்த்துவது வழக்கம். அதிமுக்கியமான சர்வதேசப் பிரச்சினைகள் தொடர்பாகக் கருத்து வெளியிட அங்கத்துவ நாடுகளுக்கு அளிக்கப்படும் வாய்ப்பு இதுவாகும்.

பொது விவாதத்தையடுத்து, பெரும்பாலான பிரச்சினைகள் பொதுச்சபையின் ஆறு பிரதான குழுக்களினால் ஆராயப்படும். இக் குழுக்கள் பின்வருமாறு:

- **முதலாம் குழு** (ஆயுதபரிகரணமும் சர்வதேச பாதுகாப்பும்)
- **இரண்டாம் குழு** (பொருளாதாரமும் நிதியும்)
- **மூன்றாம் குழு** (சமூகநலம், மனிதாபிமானம், கலாசாரம்)
- **நான்காம் குழு** (விசேட அரசியலும் குடியேற்ற ஆட்சி நீக்கமும்)
- **ஐந்தாம் குழு** (நிர்வாகமும் வரவு செலவுத் திட்டமும்)
- **ஆறாம் குழு** (சட்டத்துறை)

சில விடயங்கள் பிரதான குழுக்களில் ஆராயப்படுவதில்லை. முழு அளவிலான கூட்டத்திலேயே அவை ஆராயப்படுகின்றன. சகல விடயங்கள் தொடர்பாகவும் முழு அளவிலான கூட்டத்திலேயே வாக்களிப்பின் மூலம் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. பிரதான குழுக்கள் தமது பணிகளை முடித்துக்கொண்டு நகல் தீர்மானங்களைப் பொதுச்சபையின் கவனத்திற்குச் சமர்ப்பித்த பின்னர், பொதுச்சபையானது தனது வழமையான கூட்டத்தொடரின் இறுதிக் கட்டத்தில் தீர்மானங்களை வாக்கெடுப்பிற்கு விடுவது வழக்கம்.

குழுக்களில் வாக்களிப்பு சாதாரண பெரும்பான்மை அடிப்படையில் இடம்பெறுகின்றது. முழு அளவிலான பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானங்கள் எதிர்ப்பின்றி, வாக்கெடுப்பின்றி, ஒப்புதல் குரலோசை மூலம் நிறைவேற்றப்படுவது வழக்கம். வாக்கெடுப்பை நடத்துவதன் மூலம் அல்லது ஒவ்வொருவராக அழைத்து வாக்கைப் பதிவுசெய்வதன் மூலமும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படலாம்.

பொதுச்சபையின் தீர்மானங்கள் அங்கத்துவ நாடுகளைச் சட்டரீதியாகக் கட்டுப்படுத்த வலுவற்றவையாகும். எனினும், அத் தீர்மானங்கள் உலக அபிப்பிராயத்தையும் உலக சமூகத்தின் அறநெறி அதிகாரத்தையும் பிரதிபலிப்பதால், அங்கத்துவ நாடுகள் அவற்றிற்குப் பணிந்து நடக்கக் கடமைப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகளினால் வருடம் முழுவதிலும் மேற்கொள்ளப்படும் பணிகள் பொதுச்சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களிலேயே பெரும்பாலும் தங்கியுள்ளன.

அதாவது, பொதுச்சபைத் தீர்மானங்கள் மூலம் பெரும்பான்மை நாடுகள் வெளிப்படுத்தும் விருப்பத்தின்படியே ஐக்கிய நாடுகள் அதன் பணிகளை மேற்கொள்கின்றது. இப் பணிகளை அமுல்செய்யும் அமைப்புக்கள் பின்வருமாறு:

- ஆயுதபரிகரணம், அமைதிகாத்தல், அபிவிருத்தி, மனித உரிமைகள் போன்ற குறிப்பிட்ட விடயங்களில் ஆய்வுகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக பொதுச்சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்களும் ஏனைய அமைப்புக்களும்.
- பொதுச்சபையினால் கூட்டப்படும் சர்வதேச மாநாடுகள்.
- ஐக்கிய நாடுகள் செயலகம் (செயலாளர் நாயகமும் சர்வதேச சிவில் சேவை அதிகாரிகளை உள்ளடக்கிய அவரது ஆளணியும்)

## பாதுகாப்புச் சபை

ஐ.நா. சாசனத்தின்படி, சர்வதேச சமதானத்தையும் பாதுகாப்பையும் பேணுகின்ற அடிப்படைப் பொறுப்பு பாதுகாப்புச் சபையைச் சார்ந்ததாகும்.

இச் சபையில் 15 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவற்றுள் சீனா, பிரான்ஸ், ரஷ்யச் சம்மேளனம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய ஐந்தும் நிரந்தர அங்கத்துவ நாடுகளாகும். ஏனைய 10 அங்கத்துவ நாடுகளும் இரண்டு வருடகாலப் பதவிக்கெனப் பொதுச்சபையினால் தெரிவுசெய்யப்படுகின்றன.

ஒவ்வொரு அங்கத்துவ நாட்டுக்கும் ஒரு வாக்கு உண்டு. நடைமுறை விடயங்களில் குறைந்த பட்சம் ஒன்பது நாடுகளின் சாதகமான வாக்குகளுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். முக்கியமான விடயங்களில் தீர்மானம் எடுப்பதற்கு ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகள் உட்பட ஒன்பது நாடுகளின் வாக்குகள் அவசியமாகும். "வல்லரசுகளின் ஏகோபித்த நிலைப்பாடு" என்ற இந்த விதி "வீட்டோ" அதிகாரம் என்றும் அழைக்கப்படும். அதாவது, ஏதேனுமொரு நிரந்தர அங்கத்துவ நாடு ஒரு தீர்மானத்திற்கு இணங்காவிட்டால் தனது "வீட்டோ" உரிமையைப் பயன்படுத்தி அத் தீர்மானத்தை நிராகரிக்க முடியும். ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளும் இந்த உரிமையை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தியுள்ளன. தீர்மானத்திற்கு இணங்காவிட்டாலும் "வீட்டோ" வாக்கைச் செலுத்த விரும்பாத நாடு வாக்களிப்பில் இருந்து ஒதுங்கிக்கொள்ளலாம்.

சாசனத்தின்படி, சகல ஐ.நா. அங்கத்துவ நாடுகளும் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை ஏற்றுக்கொண்டு, அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்க இணங்கியுள்ளன. அங்கத்துவ நாடுகள் கட்டாயமாக ஏற்றுக்கொண்டு அமுல்செய்ய வேண்டிய தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் பாதுகாப்புச் சபைக்கு மட்டுமே உள்ளது. ஐ.நா.வின் ஏனைய உறுப்பாண்மைகளினால் சிபாரிசுகளை மட்டுமே அரசாங்கங்களுக்குத் தெரிவிக்க முடியும்.

**பணிகளும் அதிகாரங்களும்**

- ஐ.நா.வின் நோக்கங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் அமைய சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல்.
- சர்வதேச நெருக்கடிக்கு வழிகோலக்கூடிய ஏதேனும் பிணக்கை அல்லது பிரச்சினையை விசாரித்தல்.
- அத்தகைய பிணக்குகளை தீர்த்துவைக்கும் வழிமுறைகளை அல்லது தீர்வுக்கான நிபந்தனைகளைச் சிபாரிசு செய்தல்.
- ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஓர் அமைப்பு முறையை ஏற்படுத்துவதற்குத் திட்டங்களை வகுத்துக்கொடுத்தல்.
- சமாதானத்திற்கான அச்சுறுத்தல் அல்லது ஆக்கிரமிப்புச் செயல் ஏதாவது உள்ளதா என்பதை ஆராய்ந்து தீர்மானித்து அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைச் சிபாரிசு செய்தல்.
- ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு அல்லது நிறுத்துவதற்குப் பலாத்கார வழிகளைக் கையாளாமல் பொருளாதாரத் தடை போன்ற நடவடிக்கைகளை எடுக்கும்படி அங்கத்துவ நாடுகளைக் கேட்டுக்கொள்ளுதல்.
- ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுத்தல்.
- புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக்கொள்ளச் சிபாரிசு செய்தல்.
- "போர்ப் பிரதேசங்களில்" ஐக்கிய நாடுகளின் நம்பிக்கைப் பொறுப்புக் கடமைகளை நிறைவேற்றுதல்.
- செயலாளர் நாயகத்தின் நியமனத்தைப் பொதுச்சபைக்குச் சிபாரிசு செய்தல். பொதுச்சபையுடன் இணைந்து சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதிகளை நியமித்தல்.

பாதுகாப்புச் சபையானது தொடர்ச்சியாகச் செயற்படும் விதத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு அங்கத்துவ நாட்டின் பிரதிநிதியும் எல்லா வேளைகளிலும் ஐ.நா. தலைமையகத்தில் சமுகமளித்திருக்க வேண்டும். சபை வேறு இடங்களிலும் கூட்டத்தை நடத்துவதுண்டு: 1972 இல் எதியோப்பியாவின் அடிஸ் அபாபா நகரில் சபை கூடியது. 1973 இல் பனாமா நகரிலும் 1990 இல் சுவிற்சர்லாந்திலும் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

சமாதானத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் ஒரு பிரச்சினை பற்றி முறைப்பாடு சமர்ப்பிக்கப்படும்போது, அமைதியான வழியில் அப் பிணக்கைத் தீர்த்துக்கொள்ளும்படி சம்பந்தப்பட்ட நாடுகளைக் கேட்டுக்கொள்வது பாதுகாப்புச் சபையின் வழமையான முதல் நடவடிக்கையாகும். சமாதானத் தீர்வை ஏற்படுத்துவதற்கான கோட்பாடுகளையும் சபை முன்வைக்கக்கூடும். சில சந்தர்ப்பங்களில், சபையே முன்வந்து விசாரணைகளையும் சமரச முயற்சிகளையும் மேற்கொள்வதுண்டு. தூதுக் குழுவொன்றை அனுப்புதல், விசேட பிரதிநிதிகளை நியமித்தல் அல்லது செயலாளர் நாயத்தின் செல்வாக்கைப் பயன்படுத்தும்படி வேண்டுதல் போன்ற நடவடிக்கைகளையும் சபை மேற்கொள்ள முடியும்.

ஒரு பிணக்கு மோதலாக உருவெடுக்கும் பட்சத்தில், சண்டையை இயன்றளவு விரைவாக நிறுத்துவதிலேயே சபை தனது முதற் கவனத்தைச் செலுத்தும். பரந்த அளவிலான யுத்தத்தைத் தடுக்கும் வகையில் யுத்த நிறுத்தக் கோரிக்கைகள் சபையினால் விடுக்கப்படலாம்.

பதற்றத்தைத் தணிக்கவும் படைகளை விலக்கி வைக்கவும் சமாதானத் தீர்வு காண்பதற்கான அமைதிச் சூழ்நிலையை உருவாக்கவும் உதவும் பொருட்டு, இராணுவ அவதானிகளை அல்லது அமைதிகாக்கும் படையினரைச் சபை அனுப்பிவைக்கலாம். சாசனத்தின் VII ஆவது அத்தியாயத்திற்கு அமைய, பொருளாதாரத் தடைகள், ஆயுதவிநியோகத் தடைகள், கூட்டான இராணுவ நடவடிக்கை போன்ற கட்டாய அமுலாக்க நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரமும் சபைக்கு உண்டு.

முன்னாள் யூகோஸ்லாவியாவிலும் ருவாண்டாவிலும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களைப் புரிந்தவர்களை விசாரிப்பதற்காக இரண்டு சர்வதேச குற்றவியல் விசாரணை மன்றங்களைச் சபை ஏற்படுத்தியுள்ளது. இந்த விசாரணை மன்றங்கள் சபையின் துணை அமைப்புக்களாகும்.

வளைகுடா யுத்தத்தைத் தொடர்ந்து, ஈராக்கின் வசமுள்ள பேரழிவு ஆயுதங்கள் ஒழிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு ஐக்கிய நாடுகள் விசேட ஆணைக்குழுவை (UNSCOM) பாதுகாப்புச் சபை ஏற்படுத்தியது. இந்த ஆணைக்குழுவின் பணிகள் 1999 ஆம் ஆண்டு சபையினால் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் கண்காணிப்பு, ஊர்ஜிதப்படுத்தல் மற்றும் அவதானிப்பு ஆணைக்குழுவினால் (UNMOVIC) பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புச் சபையின் சீர்திருத்தங்கள் பற்றிப் பொதுச்சபையின் செயற்குழுவொன்று 1993 முதல் ஆராய்ந்து வருகின்றது. சம பிரதிநிதித்துவம், அங்கத்துவ நாடுகளின் அதிகரிப்பு போன்ற விடயங்கள் பரிசீலனை செய்யப்படுகின்றன.

## பொருளாதார, சமூகநலச் சபை

ஐக்கிய நாடுகளினதும் ஐக்கிய நாடுகள் குடும்ப அமைப்பாக விளங்கும் விசேட முகவராண்மைகள், நிறுவனங்கள் ஆகியவற்றினதும் பொருளாதார, சமூக மற்றும் தொடர்புடைய பணிகளை ஒருங்கிணைக்கும் பிரதான உறுப்பாண்மையாகவே பொருளாதார, சமூகநலச் சபை அமைக்கப்பட்டுள்ளது. இச் சபையில் 54 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். இச் சபையில் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு வாக்கு உண்டு. சாதாரண பெரும்பான்மை அடிப்படையிலேயே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

**பணிகளும் அதிகாரங்களும்**

பொருளாதா, சமூகநலச் சபையின் பணிகளும் அதிகாரங்களும் பின்வருமாறு:

- சர்வதேச பொருளாதார, சமூகப் பிரச்சினைகளையிட்டு ஆராய்வதற்கும் அங்கத்துவ நாடுகள் மற்றும் ஐ.நா. அமைப்புக்களுக்குச் சிபாரிசு செய்யப்படும் கொள்கைகளை வகுப்பதற்கும் ஒரு மத்திய அரங்கமாகச் செயற்படுதல்.
- சர்வதேச பொருளாதார, சமூக, கலாசார, கல்வி, சுகாதார மற்றும் தொடர்புடைய விடயங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு அல்லது ஊக்குவித்து அறிக்கைகளையும் சிபாரிசுகளையும் சமர்ப்பித்தல்.
- மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் என்பன வழங்கப்படுவதையும் அவற்றிற்கு மரியாதை அளிக்கப்படுவதையும் ஊக்குவித்தல்.

• பொருளாதார, சமூக மற்றும் தொடர்புடைய துறைகளில் முக்கியமான சர்வதேச மாநாடுகளை ஏற்பாடு செய்வதற்கு உதவுதலும், இத்தகைய மாநாடுகளைத் தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும்.
• விசேட முகவராண்மைகளுடன் ஆலோசனை நடத்திச் சிபாரிசுகளை வழங்குவதன் மூலமும் பொதுச்சபைக்குச் சிபாரிசுகளை வழங்குவதன் மூலமும் அத்தகைய விசேட முகவராண்மைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து நெறிப்படுத்துதல்.

பொருளாதார-சமூகநலச் சபையானது சர்வதேச பொருளாதார, சமூகப் பிரச்சினைகளையிட்டு ஆராய்ந்து கொள்கைச் சிபாரிசுகளை வழங்குவதன் மூலம் அபிவிருத்திக்கான சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதிலும் செயற்பாட்டுக்கான முன்னுரிமைகளை வகுத்துக்கொடுப்பதிலும் மகத்தான பணியை ஆற்றிவருகின்றது.

**கூட்டத்தொடர்கள்**
சபை அதன் பணிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டிலும் பல குறுகிய கூட்டத்தொடர்களை நடத்துகின்றது. அத்துடன், ஜூலை மாதத்தில் நான்கு வாரங்கள் நீடிக்கும் ஒரு விரிவான கூட்டத்தொடரும் நடத்தப்படுகின்றது. நியூயோர்க்கிலும் ஜெனீவாவிலும் மாறிமாறி நடத்தப்படும் இக் கூட்டத்தொடரின் உயர்மட்ட அமர்வில் அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொள்வார்கள். முக்கிய பொருளாதார, சமூக, மனிதாபிமானப் பிரச்சினைகள் அங்கு ஆராயப்படும். சபையின் வருடாந்தப் பணிகளை அதன் துணை அமைப்புக்களும் தொடர்புடைய நிறுவனங்களும் அமுல்செய்கின்றன.

**துணை அமைப்புக்களும் தொடர்புடைய நிறுவனங்களும்**
சபையின் துணை அமைப்புத் தொகுதியில் பின்வருவன அடங்குகின்றன:
• *ஒன்பது செயற்படு ஆணைக்குழுக்கள்:* இவை ஒவ்வொன்றும் தனக்குரிய விசேட துறையில் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து சிபாரிசுகளைத் தெரிவிக்கின்றன. புள்ளிவிபர ஆணைக்குழு, சனத்தொகையும் அபிவிருத்தியும் சம்பந்தமான ஆணைக்குழு, சமூக அபிவிருத்தி ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, பெண்களின் நிலைமை தொடர்பான ஆணைக்குழு, போதை மருந்துகள் ஆணைக்குழு, குற்றத் தடுப்பு மற்றும் குற்றவியல் நீதி ஆணைக்குழு, அபிவிருத்திக்கான விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பற்றிய ஆணைக்குழு, நீடித்திருக்கக்கூடிய அபிவிருத்தி தொடர்பான ஆணைக்குழு என்பனவே அவையாகும்.
• *ஐந்து பிராந்திய ஆணைக்குழுக்கள்:* ஆபிரிக்க பொருளாதார ஆணைக்குழு (அடிஸ் அபாபா, எதியோப்பியா), ஆசிய பசுபிக் பிராந்திய பொருளாதார, சமூக ஆணைக்குழு (பாங்கொக், தாய்லாந்து), ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு (ஜெனீவா, சுவிற்சர்லாந்து), லத்தின் அமெரிக்க, கரீபியன் பொருளாதார ஆணைக்குழு (சந்தியாகோ, சிலி), மேற்கு ஆசிய பொருளாதார, சமூக ஆணைக்குழு (பெய்ரூட், லெபனான்)
• *ஐந்து நிலையியற் குழுக்களும் நிபுணர் அமைப்புக்களும்:* நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் ஒருங்கிணைப்புக்குமான குழு, மனித குடியிருப்புக்கள் ஆணைக்குழு, அரசாங்கச் சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான ஆணைக்குழு, அரசுகளுக்கிடையிலான முகவராண்மைகளுடன்பேச்சுக்களை நடத்தும் குழு, சக்தி மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பான குழு.

• அபிவிருத்தித் திட்டமிடல், இயற்கை வளங்கள், பொருளாதார-சமூக-கலாசார உரிமைகள் போன்ற விடயங்கள் சார்ந்த பல்வேறு நிபுணர் அமைப்புக்களும் உள்ளன.

பொருளாதார-சமூகநலச் சபையானது ஐ.நா. நிகழ்ச்சித் திட்டங்கள் (யூ.என்.டி.பி., யூ.என்.ஈ.பி., யுனிசெப், யூ.என்.எப்.பி.ஏ. போன்றவை), விசேட முகவராண்மைகள் (உணவு விவசாய தாபனம், உலக சுகாதார தாபனம், சர்வதேச தொழில் தாபனம், யுனெஸ்கோ போன்றவை) ஆகியவற்றுடன் ஒத்துழைப்பை மேற்கொள்வதோடு, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் பணியிலும் ஈடுபடுகின்றது. இந்த அமைப்புக்கள் அனைத்தும் சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதோடு, சபையின் முழுமையான கூட்டத்திற்குச் சிபாரிசுகளையும் முன்வைக்கின்றன.

**அரச சார்பற்ற அமைப்புக்களுடனான உறவுகள்**

பொருளாதார-சமூகநலச் சபை அதன் செய்பாட்டு வரம்பிற்குட்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய அரச சார்பற்ற அமைப்புக்களுடன் ஆலோசனை நடத்துகின்றது. 1,600 க்கு மேற்பட்ட அரச சார்பற்ற அமைப்புக்கள் சபைக்கு ஆலோசனை வழங்குகின்றன. தத்தமது கருத்தைத் தெரிவிக்கும் வாய்ப்பு இந்த அமைப்புக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதையும் சபையின் பணிகளுக்கு உதவக்கூடிய விசேட அனுபவமும் தொழில்நுட்ப அறிவும் இந்த அமைப்புக்களிடம் உள்ளன என்பதையும் சபை ஏற்றுக்கொள்கிறது.

அரச சார்பற்ற அமைப்புக்களை சபை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளது:
1 ஆவது பிரிவில், சபையின் பெரும்பாலான நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அமைப்புக்கள் அடங்குகின்றன.
2 ஆவது பிரிவில், குறிப்பிட்ட துறைகளில் விசேட நிபுணத்துவத் தகைமை கொண்ட அமைப்புக்கள் அடங்குகின்றன.
சபையின் நடவடிக்கைகளுக்கு எப்போதாவது உதவக்கூடிய அமைப்புக்கள், தேவையேற்படும்போது ஆலோசனை பெறுவதற்காக, 3 ஆவது பிரிவில் நிரற்படுத்தப்பட்டுள்ளன.

ஆலோசனை அந்தஸ்தைக் கொண்டுள்ள அரச சார்பற்ற அமைப்புக்கள் தமது அவதானிகளைச் சபையினதும் அதன் துணை அமைப்புக்களினதும் கூட்டங்களுக்கு அனுப்பிவைக்க முடியும். அவ்வாறே, தமது பணிகள் தொடர்பாக எழுத்துமூல அறிக்கைகளையும் சமர்ப்பிக்க முடியும். பரஸ்பர அக்கறையுள்ள விடயங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் செயலகத்துடன் ஆலோசனை நடத்தும் உரிமையும் அவற்றிற்கு உண்டு.

ஐக்கிய நாடுகள் தாபனத்திற்கும் அதனுடன் தொடர்புடைய அரச சார்பற்ற அமைப்புக்களுக்கும் இடையிலான உறவுகள் அண்மைக்காலத்தில் பெரிதும் விருத்தியடைந்துள்ளன. கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்ட விடயங்களில் ஆலோசனை பெறப்படும் பங்காளிகளாகவும் சிவில் சமூகத்துடனான தொடர்புப் பாலமாகவும் அரச சார்பற்ற அமைப்புக்களை கருதும் போக்கு வலுவடைந்து வருகின்றது. ஐ.நா. சாசனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக உலகெங்குமுள்ள ஏராளமான அரச சார்பற்ற அமைப்புக்கள் இப்பொழுது ஐக்கிய நாடுகள் குடும்பத்துடன் இணைந்து பணியாற்றுகின்றன.

## நம்பிக்கைப் பொறுப்புச் சபை

நம்பிக்கைப் பொறுப்புச் சபையானது ஐ.நா. சாசனத்தின் கீழ் 1945 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. 7 நாடுகளின் நிர்வாகத்தில் விடப்பட்ட 11 நம்பிக்கைப் பொறுப்புப் பிரதேசங்கள் தொடர்பாக சர்வதேச மேற்பார்வையை வழங்குவதும், இப் பிரதேசங்களின் சுயாட்சிக்கு அல்லது சுதந்திரத்திற்கு உரிய ஆயத்தங்கள் செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதுமே இதன் நோக்கமாகும். நம்பிக்கைப் பொறுப்புப் பிரதேசங்களிலுள்ள மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, கல்வி முன்னேற்றத்தையிட்டு நிர்வாக அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை ஆராய்ந்து பரிசோதிக்கவும் அப் பிரதேச மக்களினால் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளை விசாரிக்கவும் அப் பிரதேசங்களுக்கு விசேட அவதானிப்புத் தூதுக்குழுக்களை அனுப்பவும் நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்குச் சாசனத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டளவில் சகல நம்பிக்கைப் பொறுப்புப் பிரதேசங்களுமே தனிநாடுகளாக அல்லது அயலிலுள்ள சுதந்திர நாடுகளுடன் இணைவதன் மூலம் சுயாட்சியை அல்லது சுதந்திரத்தைப் பெற்றுவிட்டன. கடைசியாக விடுதலை பெற்ற நம்பிக்கைப் பொறுப்புப் பிரதேசம் பசுபிக் தீவுகளாகும் (பாலாவு). இது ஐ.நா.வின் 185 ஆவது அங்கத்துவ நாடாக இணைந்துகொண்டது.

பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளான சீனா, பிரான்ஸ், ரஷ்யச் சம்மேளனம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றைக் கொண்ட நம்பிக்கைப் பொறுப்புச் சபையானது அதனிடம் ஒப்படைக்கப்பட்ட பணி பூர்த்தியடைந்துவிட்டதால், நடைமுறை விதிகளை மாற்றிக்கொண்டுள்ளது. இனிமேல், தேவை ஏற்படும் பட்சத்திலேயே இச் சபை கூடும்.

## சர்வதேச நீதிமன்றம்

நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றமே ஐக்கிய நாடுகளின் பிரதான நீதிபரிபாலன உறுப்பாண்மையாகும். நாடுகளுக்கிடையிலான சட்டப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும் ஐக்கிய நாடுகள் தாபனத்திற்கும் அதன் விசேட முகவராண்மைகளுக்கும் சட்ட ஆலோசனை வழங்குவதற்காகவுமே இது அமைக்கப்பட்டுள்ளது. இந் நீதிமன்றத்தின் நியதிச் சட்டமானது ஐ.நா. சாசனத்தின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாகும். சர்வதேச நீதிமன்றம் அதன் நியதிச் சட்டத்தின் பங்காளிகளான சகல நாடுகளுக்கும் (அதாவது, ஐ.நா. அங்கத்துவ நாடுகளும் சுவிற்சர்லாந்தும்) உரியதாகும். நாடுகள் மட்டுமே இந்த நீதிமன்றத்திடம் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கவும் நீதிமன்றத்தின் முன்னிலையில் வழக்காடவும் முடியும். தனிப்பட்ட நபர்கள், குழுக்கள் அல்லது சர்வதேச அமைப்புக்கள் இந்த நீதிமன்றத்திடம் நியாயம் கோர முடியாது.

பொதுச்சபையும் பாதுகாப்புச் சபையும் ஏதேனும் சட்டப் பிரச்சினை சம்பந்தமாக இந்த நீதிமன்றத்திடம் ஆலோசனை கேட்கலாம். ஐ.நா.வின் ஏனைய உறுப்பாண்மைகளும் விசேட முகவராண்மைகளும் பொதுச்சபையின் அனுமதியுடன் தத்தமது செயற்பாட்டுக்குள் வரும் சட்டப் பிரச்சினைகள் தொடர்பாக நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தைக் கேட்க முடியும்.

**நியாயாதிக்க அதிகாரம்**
நாடுகளினால் சமர்ப்பிக்கப்படும் எந்தப் பிரச்சினை தொடர்பாகவும் ஐ.நா. சாசனத்தில் அல்லது சர்வதேச உடன்படிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள எந்த விடயம் தொடர்பாகவும் விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் சர்வதேச நீதிமன்றத்திற்கு உண்டு. நாடுகள் நீதிமன்ற ஊசாவுதலுக்கான ஏற்பாட்டைக் கொண்ட உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதன் மூலம் அல்லது அது தொடர்பான பிரகடனம் ஒன்றை விடுப்பதன் மூலம் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை ஏற்றுக்கொள்ள முன்கூட்டியே இணங்கலாம். கட்டாய நியாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளும் இத்தகைய பிரகடனங்கள் சில வகையான பிணக்குகளை உள்ளடக்காத விதத்தில் வெளியிடப்படுவதுமுண்டு.

நீதிமன்றம் அதன் நியதிச் சட்டத்தின் பிரகாரம் பின்வருவனவற்றின் அடிப்படையிலேயே தீர்மானங்களை எடுக்கின்றது:

- வழக்காடும் நாடுகளினால் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகளைக் கொண்ட சர்வதேச ஒப்பந்தங்கள்.
- சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது நடைமுறைகளுக்குச் சான்றாக அமையும் சர்வதேசப் பாரம்பரியங்கள்.
- நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட பொதுவான சட்டக் கோட்பாடுகள்.
- நீதித்துறை சார்ந்த தீர்ப்புக்களும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மிகத் தகைமையுள்ள கல்விமான்களின் போதனைகளும்.

**அங்கத்துவம்**
பொதுச்சபையினாலும் பாதுகாப்புச் சபையினாலும் தனித்தனி வாக்களிப்பு மூலம் தெரிவுசெய்யப்படும் 15 நீதிபதிகள் சர்வதேச நீதிமன்றத்தில் இடம்பெறுவார்கள். தகைமைகளின் அடிப்படையிலேயே அவர்கள் தெரிவுசெய்யப்படுகிறார்கள். உலகின் சகல பிரதான சட்டவியல் அமைப்பு முறைகளுக்கும் நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்தப்படுகின்றது. ஒரே நாட்டைச் சேர்ந்த இரு நீதிபதிகள் ஒரே சமயத்தில் நீதிமன்றத்தில் இடம்பெற முடியாது. நீதிபதிகளின் பதவிக்காலம் ஒன்பது வருடங்களாகும். அவர்கள் மீண்டும் தெரிவுசெய்யப்படலாம். பதவி வகிக்கும் காலத்தில் அவர்கள் வேறு தொழில்களைச் செய்ய முடியாது.

நீதிமன்றம் வழமையாக முழு அளவிலான அமர்வுகளையே நடத்தும். எனினும், வழக்காடும் நாடுகளின் வேண்டுதலுக்கமைய "சேம்பர்" எனப்படும் சிறிய சட்டமன்றப் பிரிவுகளாகவும் கூடலாம். இப் பிரிவுகள் மூலம் வழங்கப்படும் தீர்ப்புக்கள் முழு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களாகவே கருதப்படும். சூழல் விவகாரங்கள் தொடர்பாகவும் இவ்வாறான ஒரு பிரிவு உள்ளது. தொகுப்பு நடைமுறைக்காக மற்றுமொரு சட்டமன்றப் பிரிவு வருடாந்தம் கூடுகின்றது.

## செயலகம்

உலகெங்குமுள்ள பல்வேறு இடங்களில் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பலதரப்பட்ட அன்றாடப் பணிகளை ஆற்றும் சர்வதேச அலுவலர்களை உள்ளடக்கிய அமைப்பே செயலகமாகும். ஐக்கிய நாடுகளின் ஏனைய பிரதான உறுப்பாண்மைகளுக்கான சேவைகளை வழங்குவதும் அவற்றினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள், கொள்கைகள் என்பவற்றை நிர்வகிப்பதும் செயலகமே. செயலகத்தின் தலைவராக விளங்கும் செயலாளர் நாயகம் பாதுகாப்புச் சபையின் சிபாரிசுக்கமையப் பொதுச்சபையினால் ஐந்து வருட பதவிக்காலத்திற்கு நியமிக்கப்படுகிறார். அவரது பதவிக்காலம் புதுப்பிக்கப்படலாம்.

ஐக்கிய நாடுகளினால் கவனம் செலுத்தப்படும் பிரச்சினைகள் எவ்வளவுக்கு எவ்வளவு வேறுபட்டவையோ அவ்வளவுக்கு அவ்வளவு வேறுபட்ட அலுவல்களைச் செயலகம் கையாள்கிறது. அமைதிகாக்கும் நடவடிக்கைகளை நிர்வகிப்பது முதல் சர்வதேசப் பிணக்குகளில் சமரச நடவடிக்கை மேற்கொள்வது ஈறாகவும் பொருளாதார, சமூக மதிப்பீடுகளை மேற்கொள்வது முதல் மனித உரிமைகள் மற்றும் தொடர்ச்சியான அபிவிருத்தி பற்றிய ஆய்வுகளை நடத்துவது ஈறாகவும் பல்வேறு பணிகளில் செயலகம் ஈடுபடுகின்றது. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பணிகள் பற்றி உலக வெகுஜனத்தொடர்பு ஊடகங்களுக்குத் தகவல் தெரிவித்தல், உலக அக்கறைக்குரிய பிரச்சினைகள் சம்பந்தமாகச் சர்வதேச மாநாடுகளை ஏற்பாடு செய்தல், பிறமொழி உரைகளையும் ஆவணங்களையும் ஐ.நா.வின் உத்தியோகபூர்வ மொழிகளுக்கு மொழிபெயர்த்தல் ஆகிய வேலைகளையும் செயலகத்தின் ஊழியர்களே செய்கின்றனர்.

செயலகம் அதன் வழமையான வரவு செலவுத் திட்டத்தின் கீழ் சுமார் 160 நாடுகளைச் சேர்ந்த சுமார் 8,900 அலுவலர்களைக் கொண்டுள்ளது. சர்வதேச சிவில் அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோரும் செயலாளர் நாயகமும் தமது நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகளுக்கு மட்டுமே பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளனர். எந்தவொரு அரசாங்கத்தின் அல்லது வெளி அதிகாரத்திடமிருந்தும் எந்தவொரு உத்தரவையும் பெறுவதில்லையென அவர்கள் சத்தியவாக்கு அளித்துள்ளனர். செயலாளர் நாயகம், அவரது அலுவலர்கள் ஆகியோருக்கு உள்ள பொறுப்புக்களின் சர்வதேசத் தன்மையை மதித்து நடக்கவும் அவர்கள் மீது முறைகேடான செல்வாக்கைப் பிரயோகிப்பதைத் தவிர்த்துக்கொள்ளவும் சகல அங்கத்துவ நாடுகளும் ஐ.நா. சாசனத்திற்கமைய இணக்கம் தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் தாபனம் அதன் தலைமையகத்தை நியூயோர்க்கில் கொண்டிருந்தபோதிலும் சில முக்கிய அமைப்புக்கள் அடிஸ் அபாபா, பாங்கொக், பெய்ரூட், ஜெனீவா, நைரோபி, சந்தியாகோ, வியன்னா ஆகிய நகரங்களில் செயற்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர, உலகின் எல்லாப் பகுதிகளிலும் ஐ.நா. அலுவலகங்கள் உள்ளன.

**செயலாளர் நாயகம்**

செயலாளர் நாயகம் என்பவர் ஐக்கிய நாடுகளின் அடையாளச் சின்னமாகவும் உலகெங்குமுள்ள மக்களின், குறிப்பாக வறிய - வசதியற்ற மக்களின், நலன்களுக்காகப் பாடுபடும் பேச்சாளராகக் கருதப்படுகிறார். இராஜதந்திரியாக, பரிந்துரையாளராக, சிவில் சேவையாளராக, பிரதம நிறைவேற்று அதிகாரியாக அவர் பலதரப்பட்ட கடமைகளை நிறைவேற்றுகின்றார். தற்போது செயலாளர் நாயகம் பதவியை வகிக்கும் கானாவைச் சேர்ந்த திரு. கோபி அனான் ஏழாவது செயலாளர் நாயகம் ஆவார். இவர் 1997 ஜனவரி 1 ஆம் திகதி பதவியேற்றார்.

செயலாளர் நாயகம் என்பவர் தனது பதவிப் பொறுப்புக்களையும் பாதுகாப்புச் சபை, பொதுச்சபை, பொருளாதார-சமூகநலச் சபை ஆகியவற்றாலும் ஏனைய ஐ.நா. உறுப்பாண்மைகளினாலும் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகளையும் நிறைவேற்றும் "பிரதம நிர்வாக அதிகாரி" என்று சாசனம் விபரிக்கின்றது. சர்வதேச சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடுமெனக் கருதும் விடயங்களைப் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரும் அதிகாரமும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. செயலாளர் நாயகம் அங்கத்துவ நாடுகளின் கரிசனைக்குரிய விடயங்களில் தனது விசேட கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளார். அதேவேளையில் ஐக்கிய நாடுகளின் விழுமியங்கள், தார்மீக அதிகாரம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்து, சமாதானத்திற்காகக் குரலெழுப்பிச் செயற்பட வேண்டிய கடப்பாடும் அவரைச் சார்ந்துள்ளதால், சில சமயங்களில், அங்கத்துவ நாடுகளின் விருப்பத்திற்கு மாறாகச் செயற்படும் நிர்ப்பந்தமும் அவருக்கு ஏற்படுவதுண்டு.

இவ்வாறான நெருக்கடி செயலாளர் நாயத்தின் அன்றாடப் பணிகளோடு பின்னிப்பிணைந்தவையாகும். ஐக்கிய நாட்டு அமைப்புக்களின் கூட்டத்தொடர்களில் பங்குபற்றுதல், உலகத் தலைவர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துதல், அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவதற்காகவும் ஐ.நா.வுக்கு அக்கறையுள்ள சர்வதேசப் பிரச்சினைகள் பற்றி நேரடித் தகவல்களை அறிந்துகொள்ளும் பொருட்டும் உலக நாடுகளுக்கு விஜயம் செய்தல் என்பனவும் அவரது அன்றாடப் பணிகளுள் அடங்கும்.

ஒவ்வொரு வருடமும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் நடவடிக்கைகளையும் வருங்காலத் திட்டங்களையும் எடுத்துக்கூறும் அறிக்கை ஒன்றை செயலாளர் நாயகம் சமர்ப்பிக்கிறார்.

## முன்னைய செயலாளர் நாயகங்கள்

*சாசனத்தின்படி, பாதுகாப்புச் சபையின் சிபாரிசுக்கு அமைய பொதுச் சபையினால் செயலாளர் நாயகம் நியமிக்கப்படுகின்றார். திரு. கோபி அனானுக்கு முன் இப் பதவியை வகித்தவர்கள்:*

பூத்ரொஸ் பூத்ரொஸ்-காலி (எகிப்து) 1992 ஜனவரி முதல் 1996 டிசெம்பர் வரை பதவி வகித்தார்.ஹாவியர் பெரேஸ் டி குவெல்யா (பெரு) 1982 ஜனவரி முதல் 1991 டிசெம்பர் வரை பதவி வகித்தார். குர்ட் வால்ட்ஹைம் (ஒஸ்திரியா) 1972 ஜனவரி முதல் 1981 டிசெம்பர் வரை பதவி வகித்தார். ஊ தான்ட் (பர்மா, இப்போது மியன்மார்) 1961 நவம்பர் மாதம் பதில் செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்டதிலிருந்து (1962 நவம்பரில் செயலாளர் நாயகமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டார்) 1971 டிசெம்பர் வரை கடமையாற்றினார். டாக் ஹமர்ஷோல்ட் (சுவீடன்) 1953 ஏப்பிரல் முதல் 1961 செப்டெம்பர் மாதம் ஆபிரிக்காவில் விமான விபத்தொன்றில் உயிரிழக்கும் வரை பதவி வகித்தார். ட்ரிக்வி லீ (நோர்வே) 1946 பெப்ரவரி முதல் 1952 நவம்பர் மாதம் இராஜினாமாச் செய்யும் வரை பதவி வகித்தார்.

சர்வதேச பிணக்குகள் ஏற்படுவதையும் உக்கிரமடைவதையும் பரவுவதையும் தடுப்பதற்குத் தனது செல்வாக்கைப் பயன்படுத்துவது செயலாளர் நாயகம் ஆற்றும் அதிமுக்கிய பணிகளில் ஒன்றாகும். அவர் தனது சுயாதீனம், பாரபட்சமின்மை, நம்பகத்தன்மை ஆகிய பண்புகளின் அடிப்படையில் பகிரங்கமாகவும் தனிப்பட்ட முறையிலும் செயற்பட்டு இந்தப் பணியை ஆற்றுகின்றார். திரு. கோபி அனான் செயலாளர் நாயகமாக வந்த பின்னர் சைப்பிரஸ், கிழக்கு ரீமோர், ஈராக், லிபியா, மத்திய கிழக்கு மற்றும் மேற்குச் சகாரா என்பன உள்ளிட்ட பல பிரச்சினைகளில் தனது பதவிச் செல்வாக்கைச் சிறந்த முறையில் பயன்படுத்தியுள்ளார்.

ஒவ்வொரு செயலாளரும் தனது பதவிக்காலத்தில் விசேட கவனம் செலுத்தவிருக்கும் துறைகளை நிர்ணயித்துக்கொள்வது வழக்கம். திரு. அனான் பின்வரும் விடயங்களில் முக்கிய கவனம் செலுத்துகிறார்:

**சீர்திருத்தங்கள்.** ஐக்கிய நாடுகள் தாபனம் காலத்திற்கேற்றவாறு மாற்றமடைந்து, உலக விவகாரங்களில் ஒரு புதிய யுகத்திற்கு முகங்கொடுக்க வழிகோலும் பொருட்டு, விரிவான சீர்திருத்த நடவடிக்கைகளை உள்ளடக்கிய திட்டம் ஒன்றினை திரு. கோபி அனான் தனது பதவிக்காலத்தின் ஆரம்பத்திலேயே சமர்ப்பித்தார். செயலாளர் நாயகத்தின் அதிகார எல்லைக்குள் வரும் இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகளில் பெரும்பாலானவை ஏற்கனவே அமுல்செய்யப்பட்டுள்ளன அல்லது தற்சமயம் அமுல்செய்யப்படுகின்றன. அவற்றுள் நிர்வாக ரீதியான நடவடிக்கைகளும் (பூஜ்ஜிய வளர்ச்சி வரவு செலவுத்திட்டம், முகாமை நடைமுறைகளை தரமுயர்த்தும் கடின முயற்சி போன்றவை) அமைப்பு ரீதியான நடவடிக்கைகளும் அடங்கும். அபிவிருத்தி, அமைதிகாத்தல் என்பன உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஐக்கிய நாடுகள் தாபனம் அதனிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பணிகளை மேலும் சிறப்பாக நிறைவேற்ற உதவுவதே இச் சீர்திருத்தங்களின் நோக்கமாகும்.

செயலாளர் நாயகத்திடம் ஏராளமான பதவிப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்பதால் அவற்றை நிறைவேற்றுவதில் அவருக்கு உதவும் பொருட்டு **பிரதிச் செயலாளர் நாயகம்** என்ற ஒரு புதிய பதவி ஏற்படுத்தப்பட்டது. இப் பதவியை முதலில் வகிப்பவர் திருமதி லூயிஸ் பிறீஷே ஆவார். இவர் 1998 இல் இப் பதவியை ஏற்பதற்கு முன்னர் கனடாவின் தேசிய பாதுகாப்புப் பிரதி அமைச்சராக இருந்தவர்.

பொதுச்சபையானது அதன் அதிகார எல்லைக்குள் வரும் நிறுவன ரீதியான பிரச்சினைகளையிட்டுத் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றது. பாதுகாப்புச் சபையின் அளவும் அமைப்பு முறையும், ஐ.நா.வுக்கான நிதியைப் பெறும் வழிமுறைகள், விரிவான ஐ.நா. விசேட முகவராண்மை அமைப்பிற்குள் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துதல் போன்ற விடயங்கள் இதில் அடங்கும்.

**ஆபிரிக்கா.** ஆபிரிக்கா மீது விசேட கவனம் செலுத்தப்பட்டு, அதனைச் சமாதானப் பாதையில் வழிநடத்துவதற்கும் ஆபிரிக்க நாடுகளில் உயர்ந்த மட்டத்திலான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் சர்வதேச உதவிகள் ஒன்றுதிரட்டப்பட வேண்டும் என்பது செயலாளர் நாயகத்தின் விருப்பமாகும்.

*"ஆபிரிக்காவில் யுத்தங்களுக்கான காரணங்களும் நிலையான சமாதான வாய்ப்புக்களும் தொடர்ச்சியான அபிவிருத்தியும்"* என்ற தலைப்பில் 1998 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அவர் இதனை வலியுறுத்தியுள்ளார். ஆபிரிக்க நாடுகளுக்கு உள்ளேயும் அவற்றிற்கு இடையிலேயேயும் அரசியல் பதற்றங்கள் மற்றும் வன்செயல்களைக் குறைப்பதற்கும் கடன் சுமை, நிர்வாகச் சீர்கேடு, எயிட்ஸ் போன்ற நோய்களின் பரம்பல் முதலியவற்றைப் போக்கி அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சமாதான நடவடிக்கைகள்.** 1990களிலே ஐக்கிய நாடுகளின் சமாதான மற்றும் அமைதிகாக்கும் நடவடிக்கைகள் கணிசமான அளவு அதிகரித்தன. அதேவேளையில், பிணக்கு அல்லது யுத்தத்தின் இயல்பிலும் பெரும் மாறுதல் காணப்பட்டது. அதாவது, நாடுகளுக்கு இடையிலான யுத்தங்கள் குறைவடைந்தபோதிலும் நாடுகளுக்கு உள்ளே மூர்க்கத்தனமான மோதல்கள் அடிக்கடி தலைதூக்கின. இவ்வாறான யுத்தங்களில் ஐக்கிய நாடுகளின் பணி மிகச் சிரமம் வாய்ந்ததாகும். எனவே, சமாதான நடவடிக்கையில் ஈடுபடுமாறு ஐக்கிய நாடுகள் தாபனத்தைக் கேட்கும்போது, அச் செயற்பாட்டுக்குரிய பூரண வசதிகளும் (அதாவது, இராணுவ, நிதி மற்றும் அரசியல் ரீதியான பக்கபலம்) உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று செயலாளர் நாயகம் வலிறுயுத்துகின்றார்.

சீர்திருத்தத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளைத் தவிர, மேலும் மூன்று அறிக்கைகள் இவ்விடயம் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. முதலாவது அறிக்கை, பொதுச் சபையின் வேண்டுதலுக்கமைய 1999 ஆம் ஆண்டு செயலாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டதாகும். 1995 ஆம் ஆண்டு, ஸ்றெபிறெனிக்காவில் ஐக்கிய நாடுகளினால் ஒதுக்கப்பட்ட "பாதுகாப்பு வலயத்தில்" முஸ்லீம் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளை இது எடுத்துக் கூறுகின்றது.

இரண்டாவது அறிக்கை, ருவாண்டாவில் 1994 இடம்பெற்ற இன ஒழிப்பு அட்டூழியங்களின்போது ஐக்கிய நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக முன்னாள் சுவீடிஷ் பிரதமர் இங்வார் கார்ல்ஸன் தலைமையில் நடத்தப்பட்ட விசாரணைகளின் அறிக்கையாகும். இவ்வறிக்கை செயலாளர் நாயகத்தின் பணிப்பிற்கு அமையத் தயாரிக்கப்பட்டு 1999 இல் வெளியிடப்பட்டது. மூன்றாவது அறிக்கை, ஐக்கிய நாடுகளின் சமாதான மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய ஒரு விரிவான மீளாய்வாகும். முன்னாள் அல்ஜீரிய வெளிநாட்டமைச்சர் லக்தார் பிராஹிமி தலைமையில் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட ஓர் உயர்மட்டக் குழுவினால் தயாரிக்கப்பட்ட இவ்வறிக்கை 2000 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

முதலிரு அறிக்கைகளின் முடிவுகளையும் உள்வாங்கித் தயாரிக்கப்பட்ட முன்றாவது அறிக்கையானது செயலகத்தினதும் பாதுகாப்புச் சபை அங்கத்துவ நாடுகளினதும் கவனத்திற்குப் பல முக்கிய யோசனைகளை முன்வைத்தது. செயலாளர் நாயகம் தனது அதிகார வரம்பிற்குட்பட்ட யோசனைகளை அமுல்செய்யத் தொடங்கியுள்ளார். ஏனைய யோசனைகளை அமுல்செய்வதற்கு ஐ.நா. சட்டவாக்க அமைப்புக்களின் அங்கீகாரமும் ஆதரவும் தேவை.

**உலகளாவிய ஒருங்கிணைப்பு.** சுவிற்சர்லாந்து டேவொஸ் நகரில் 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக பொருளாதார மாநாட்டிலே, ஐக்கிய நாடுகள் தாபனத்திற்கும் உலக வர்த்தக சமூகத்திற்கும் இடையே "உலகளாவிய ஒருங்கிணைப்பு" இடம்பெற வேண்டும் என்ற யோசனையை செயலாளர் நாயகம் முன்வைத்தார்.

உலகமயமாக்கலின் நன்மைகள் உலக மக்கள் அனைவருக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்துவதும் சமூக-பொருளாதார தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான விழுமியங்கள் மற்றும் நடைமுறைகளில் உலகச் சந்தையை வேரூன்றச் செய்வதுமே இதன் நோக்கமாகும். இந்த ஒருங்கிணைப்பானது அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், தொழிலுரிமையை வலியுறுத்தும் சர்வதேச தொழில் தாபனக் கோட்பாடுகள், சூழலும் அபிவிருத்தியும் தொடர்பான ரீயோ கோட்பாடுகள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட ஒன்பது முக்கிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

தனியார் துறை நிறுவனங்கள் இந்தக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனச் செயலாளர் நாயகம் கேட்டுக்கொண்டுள்ளார். ஒருங்கிணைப்புத் திட்டத்தின் அமுலாக்கத்தில் பங்குபற்றும்படியும் உலகமயமாக்கல் மற்றும் அபிவிருத்தி சார்ந்த பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கான ஓர் அரங்கமாக அதனைப் பயன்படுத்தும்படியும் தொழிற்சங்கத் தலைவர்கள், சிவில் சமூகத் தலைவர்கள் ஆகியோரையும் செயலாளர் நாயகம் வேண்டியுள்ளளார். இந்த வகையில் முத்தரப்புக்களையும் சேர்ந்த தலைவர்கள் பங்குபற்றிய முதலாவது கூட்டம் 2000 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

## ஐக்கிய நாடுகளின் வரவு செலவுத் திட்டம்

ஐக்கிய நாடுகளின் வழமையான வரவு செலவுத் திட்டம் இரு வருட காலப்பகுதிக்கெனப் பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றது. முதலில், செயலாளர் நாயகம் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கிறார். பின்னர், **நிர்வாக மற்றும் வரவு செலவுத்திட்ட விடயங்கள் சம்பந்தமான ஆலோசனைக் குழு** அதனைப் பரிசீலனை செய்கிறது. இக் குழு 16 நிபுணர்களைக் கொண்டது. இவர்கள் அரசாங்கங்களினால் நியமிக்கப்பட்டு, பொதுச்சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் சுயாதீனமாகவே செயற்படுகின்றனர். வரவு செலவுத் திட்டத்திலுள்ள நிகழ்ச்சித்திட்ட விடயங்களை **நிகழ்ச்சித்திட்ட மற்றும் இணைப்பு நடவடிக்கைக் குழு** பரிசீலனை செய்யும். இக் குழுவில் 34 நிபுணர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

பொதுச்சபையினால் தெரிவுசெய்யப்படும் இவர்கள் தத்தமது அரசாங்கத்தின் கருத்துக்களைப் பிரதிபலிப்பார்கள்.

2000 ஆம் 2001 ஆம் ஆண்டுகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத் தொகை 2,535 மில்லியன் அமெரிக்க டொலராகும். இது 1998-1999 வரவு செலவுத் திட்டத் தொகையைவிட 2 மில்லியன் அமெரிக்க டொலர் அதிகமாகும். இந்த வரவு செலவுத் திட்டமானது அரசியல் விவகாரங்கள், சர்வதேச நீதியும் சட்டமும், அபிவிருத்திக்கான சர்வதேச ஒத்துழைப்பு, பொதுத் தகவல், மனித உரிமைகள், மனிதநேய அலுவல்கள் போன்ற துறைகளில் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவுகளை உள்ளடக்குகின்றது.

வரவு செலவுத் திட்டத்திற்கான நிதி பிரதானமாக அங்கத்துவ நாடுகளின் பங்களிப்புக்களில் இருந்தே பெறப்படுகின்றது. ஒவ்வொரு நாடும் எவ்வளவு செலுத்த வேண்டும் என்பது **பங்களிப்புச் சம்பந்தமான குழுவினால்** நிர்ணயிக்கப்பட்டுப் பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்படும் அளவுத்திட்டத்திற்கு அமையத் தீர்மானிக்கப்படுகின்றது. இக் குழுவில் 18 நிபுணர்கள் அங்கம் வகிக்கின்றனர். பொதுச்சபை தனது நிர்வாக மற்றும் வரவு செலவுத் திட்டக் குழுவின் (ஐந்தாவது குழு) சிபாரிசுக்கு அமைய இவர்களைத் தெரிவுசெய்கின்றது. இவர்கள் சுயாதீனமாகச் செயற்படுகின்றார்கள்.

ஒவ்வொரு நாட்டினதும் மொத்தத் தேசிய உற்பத்தி, அந்த நாட்டின் தனிநபர் வருமானம் போன்ற பல்வேறு காரணிகள் ஆராயப்பட்ட பின்பே அந்தந்த நாடுகள் செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை நிர்ணயிக்கப்படும். இந்த மதிப்பீடு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு நாட்டின் ஆகக்கூடிய பங்களிப்புத் தொகை 22 சதவீதத்திற்கு மேற்படலாகாதென 2000 ஆம் ஆண்டில் பொதுச்சபை உச்சவரம்பொன்றை விதித்தது.

பல அங்கத்துவ நாடுகள் தமது பங்களிப்புத் தொகைகளை முழுமையாகவும் உரிய வேளையிலும் செலுத்தத் தவறுவதால் கடந்த பல ஆண்டுகளாக ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஒட்டுமொத்தமான நிதி நிலைமை பலவீனமாக இருந்து வருகின்றது.

இத்தகைய நிலைமையிலும் ஐக்கிய நாடுகள் தாபனம் தொடர்ந்து செயற்படுவதற்கு ஒருசில நாடுகள் தாமாகவே முன்வந்து வழங்கும் மேலதிக தொகைகள், ஐ.நா.வின் தொழிற்படு மூலதன நிதி (அங்கத்துவ நாடுகள் தமது பங்களிப்பு மதிப்பீட்டுத் தொகைக்கேற்ப வழங்கிய முற்பணத்தைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட நிதி), அமைதிகாக்கும் நடவடிக்கை மூலம் பெறப்படும் பணம் என்பன உதவியாக அமைந்துள்ளன.

அங்கத்துவ நாடுகள் செலுத்தத் தவறிய வரவு செலவுத் திட்டப் பங்களிப்புத் தொகை 2000 டிசெம்பர் 31 இல் 222 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. இதில் 200 மில்லியன் 2000 ஆம் ஆண்டுக்குரியது. எஞ்சிய 22 மில்லியன் முன்னைய ஆண்டுகளுக்குரியது. பங்களிப்புக்காக மதிப்பீடு செய்யப்பட்ட 187 அங்கத்துவ நாடுகளுள் 142 நாடுகள் தமது கொடுப்பனவுகளை முழுமையாகச் செலுத்தியுள்ளன. 45 நாடுகள் சட்டரீதியான கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறியுள்ளன.

வழமையான வரவு செலவுத் திட்டத்தைத் தவிர, சர்வதேச விசாரணை மன்றங்களுக்கான செலவுகள், அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கான செலவுகள் ஆகியவற்றை ஈடுசெய்வதற்கும் அங்கத்துவ நாடுகளிடமிருந்து மதிப்பீட்டு அடிப்படையில் பங்களிப்புக்கள் பெறப்படுகின்றன.

அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கான செலவு 1995இல் 3 பில்லியன் அமெரிக்க டொலராக உச்சமடைந்தது. சோமாலியாவிலும் யூகோஸ்லாவியாவிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இதற்கு முக்கிய காரணமாகும். இச் செலவு 1998 இல் 1 பில்லியன் அமெரிக்க டொலராகவும் 1999 இல் சுமார் 889 மில்லியன் அமெரிக்க டொலராகவும் இருந்தது.

2000 ஆம் ஆண்டில் கொசோவோ, கிழக்கு ரீமோர், சியரா லியோன், கொங்கோ ஜனநாயகக் குடியரசு எரிட்ரியா, எதியோப்பியா ஆகிய இடங்களில் அமைதிகாக்கும் நடவடிக்கைகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டதால் செலவினம் குறைந்த பட்சம் 2 அமெரிக்க டொலராக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

2000 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை, முன்னைய அல்லது நடப்பு அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்காக அங்கத்துவ நாடுகளினால் செலுத்தப்படாதிருந்த பங்களிப்புத் தொகை சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலராகும். இவ்வாறாக உரிய வேளையில் பணம் கிடைக்காதபோது, படைகளையும் உபகரணங்களையும் ஏனைய சேவைகளையும் வழங்கிய நாடுகளுக்கான கொடுப்பனவுகளை ஐ.நா. தாமதிக்கின்றது. இதனால் அந்த நாடுகள் மீது நியாயமற்ற முறையில் சுமை ஏற்றப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் **(UNICEF)**, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் **(UNDP)**, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் **(UNHCR)** போன்ற ஐ.நா. நிதியங்களும் நிகழ்ச்சித் திட்டங்களும் அவற்றிற்கெனத் தனித்தனி வரவு செலவுத் திட்டங்களைக் கொண்டுள்ளன. அவற்றுக்கான நிதியில் பெரும்பகுதி அரசாங்கங்களின் நன்கொடைகள் மூலம் பெறப்படுகின்றன. **UNICEF** அமைப்பிற்குத் தனிப்பட்டவர்களிடம் இருந்தும் நிதியுதவி கிடைக்கின்றது.

ஐ.நா. விசேட முகவராண்மைகளும் தனியான வரவு செலவுத் திட்டங்களைக் கொண்டுள்ளன. 1999 இல் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் என்பன தவிர்ந்த ஏனைய விசேட முகவராண்மைகளுக்கான மொத்த வரவு செலவுத் திட்டத் தொகை 1.987 பில்லியன் டொலராக இருந்தது.

## ஐக்கிய நாட்டு அமைப்புக்களின் குடும்பம்

ஐக்கிய நாட்டு அமைப்புக்களின் குடும்பம் என்பது ஐக்கிய நாடுகளின் **செயலகம்**, ஐக்கிய நாடுகளின் **நிகழ்ச்சித்திட்டங்களும் நிதியங்களும் (UNICEF, UNDP** முதலியன), **விசேட முகவராண்மைகள்** ஆகியவற்றை உள்ளடக்கிய தொகுதியாகும். நிகழ்ச்சித்திட்டங்களும் நிதியங்களும் பொதுச்சபையின் உப அமைப்புக்களாகும். விசேட முகவராண்மைகள் விசேட ஒப்பந்தங்களின் மூலம் ஐக்கிய நாடுகள் தாபனத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அவை பொருளாதார-சமூகநலச் சபைக்கும் பொதுச்சபைக்கும் அறிக்கை சமர்ப்பிக்கக் கடமைப்பட்டுள்ளன. அவை தமக்கெனப் புறம்பான ஆட்சி மன்றங்கள், வரவு செலவுத் திட்டங்கள், தராதரங்கள், நெறிமுறைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. அவை அனைத்தும் ஒருங்கிணைந்து ஐ.நா.வின் பொருளாதார, சமூகநல முயற்சிகள் யாவற்றிற்கும் தொழில்நுட்ப உதவிகளையும் ஏனைய நடைமுறை உதவிகளையும் வழங்குகின்றன.

**இணைப்பு நடவடிக்கைக்கான நிர்வாகக் குழு (ACC).** ஐ.நா. நிதியங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், விசேட முகவராண்மைகள் ஆகிய அனைத்தும் **ACC**இல் அங்கம் வகிக்கின்றன. இவற்றின் மொத்த எண்ணிக்கை 26 ஆகும். ஐ.நா. அமைப்பிலுள்ள பல்வேறு நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்படும் திட்டங்களுக்கு இடையே அதிகரித்த தொடர்பை ஏற்படுத்த உதவுவதே **ACC**இன் பிரதான பணியாகும். ஐ.நா. அமைப்பினால் எதிர்நோக்கப்படும் முக்கிய நிர்வாகப் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக இந்தக் குழு ஆண்டுக்கு இரு தடவை செயலாளர் நாயகத்தின் தலைமையில் கூடுகின்றது. **ACC**இன் பணிகளில் ஒரு பகுதி அதன் உப அமைப்புக்களினால் நிறைவேற்றப்படுகின்றது. ஒவ்வொரு உப அமைப்பும் ஒரு குறிப்பிட்ட விடயத்தில் கவனம் செலுத்துகின்றது.

## ஐக்கிய நாடுகள் செயலகம்

ஐக்கிய நாடுகள் செயலகமானது கீழே விபரிக்கப்பட்டுள்ள அலுவலகங்களையும் திணைக்களங்களையும் உள்ளடக்கிய அமைப்பாகும். பொதுவான கொள்கைகளை வகுத்து, ஐ.நா. அமைப்புக்கு வழிகாட்டுதலை வழங்கும் **செயலாளர் நாயகத்தின் நிறைவேற்று அலுவலகம்** இவற்றுள் பிரதானமானது. இங்குதான் செயலாளர் நாயகமும் அவரது சிரேஷ்ட ஆலோசகர்களும் பணிபுரிகின்றனர். செயலகமானது அதன் தலைமையகத்தை நியூயோர்க்கிலும் ஏனைய அலுவலகங்களை உலகின் பல்வேறு பிராந்தியங்களிலும் கொண்டுள்ளது.

நியூயோர்க்கிற்கு வெளியே செயலகத்தின் நடவடிக்கைகள் பிரதானமாக ஜெனீவா, வியன்னா, நைரோபி ஆகிய நகரங்களில் இடம்பெறுகின்றன.
ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் (UNOG) மாநாட்டு இராஜதந்திர நடவடிக்கைகளுக்கான மத்திய நிலையமாகவும் ஆயுதபரிகரணம் மற்றும் மனித உரிமைகளுக்கான விவாத அரங்காகவும் செயற்படுகின்றது. இந்த அலுவலகத்திற்குத் துணைச் செயலாளர் நாயகம் செர்கெய் அலெக்சாந்தரோவிச் ஒர்ஷோனிகிட்ஸே (றஷ்ய சம்மேளனம்) தலைமை தாங்குகிறார்.
வியன்னாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் (UNOG) சர்வதேச போதைப் பொருள் துஷ்பிரயோகக் கட்டுப்பாடு, குற்றத் தடுப்பும் குற்றவியல் நீதியும், விண்வெளியை சமாதான நோக்கங்களுக்குப் பயன்படுத்துதல், சர்வதேச வர்த்தகச் சட்டம் ஆகிய துறைகளில் நடவடிக்கைகளின் தலைமையகமாக விளங்குகின்றது. இந்த அலுவலகத்திற்குத் துணைச் செயலாளர் நாயகம் அந்தோனியோ மரீயா கொஸ்தா (இத்தாலி) தலைமை வகிக்கிறார்.
நைரோபியிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் (UNON) சுற்றாடல் மற்றும் மனித குடியிருப்புக்கள் சம்பந்தமான விடயங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்குக் கேந்திர நிலையமாக விளங்குகிறது. இந்த அலுவலகத்திற்குத் துணைச் செயலாளர் நாயகம் கிளாவுஸ் டொப்வெர் (ஜேர்மனி) தலைமை வகிக்கிறார்.

### உள்ளக மேற்பார்வைச் சேவைகள் அலுகலகம் (OIOS)

துணைச் செயலாளர் நாயகம் — திரு.திலீப் நாயர் (சிங்கப்பூர்)

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு நம்பகமான, செயற்றிறன்மிக்க, நிரந்தரமான ஓர் அமைப்பு அவசியம் என்பதால் உள்ளக மேற்பார்வைச் சேவைகள் அலுவலகம் ஏற்படுத்தப்பட்டது. இந்த அலுவலகத்தின் பணிகள் பின்வருமாறு:

- நிகழ்ச்சித்திட்டங்களும் ஆணைகளும் எவ்வளவு தூரத்திற்கு நேர்த்தியாகவும் பயனுள்ள முறையிலும் அமுலாக்கப்படுகின்றன என்பதைக் கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்.
- விரிவான உள்ளகக் கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல்.
- நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அமைப்பு அலகுகள் தொடர்பாக அவ்வப்போது பரிசோனைகளை மேற்கொள்ளுதல்.
- நிர்வாகச் சீர்கேடு மற்றும் முறையற்ற நடத்தை சம்பந்தமாக முறைப்பாடுகளை விசாரித்தல்.

• கணக்காய்வுகள், மதிப்பீடுகள், பரிசோதனைகள், விசாரணைகள் ஆகியவற்றைத் தொடர்ந்து முன்வைக்கப்படும் சிபாரிசுகள் அமுலாக்கப்படுவதைக் கண்காணித்தல்.
• நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்களுக்கு அவர்களின் கடமைப் பொறுப்புக்களைத் திறமையாக நிறைவேற்ற ஆலோசனை அளித்தல்.

செயலகம், நடைமுறையிலுள்ள நிகழ்ச்சித்திட்டங்களும் நிதியங்களும், பிரதான அமைதிகாக்கும் நடவடிக்கைகள், பலதரப்பட்ட ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன **OIOS** அலுவலகத்தின் செயற்பாட்டு எல்லைக்குள் வருகின்றன. இந்த அலுவலகத்தில் சுமார் 120 ஊழியர்கள் பணிபுரிகின்றனர். இதன் வரவு செலவுத் திட்டத் தொகை சுமார் 22 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

உள்ளக மேற்பார்வைச் சேவைகளுக்கான துணைச் செயலாளர் நாயகம் ஐந்தாண்டு காலப் பதவிக்கென செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டு, பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்படுகிறார். இப் பதவிக்காலம் புதுப்பிக்கப்பட மாட்டாது.

## சட்ட விவகாரங்கள் அலுகலகம் (OLA)

துணைச் செயலாளர் நாயகம். சட்டத்தரணி திரு.ஹான்ஸ் கோரெல் (சுவீடன்)

இதுவே ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சட்டத்துறைச் சேவைகளுக்கான மத்திய நிலையமாகும். செயலாளர் நாயகத்திற்கும் செயலகத்தின் திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்கும் ஐ.நா. தாபனத்தின் பிரதான மற்றும் துணை உறுப்பாண்மைகளுக்கும் பொதுவான மற்றும் தனிப்பட்ட சர்வதேச சட்ட விவகாரங்களில் ஆலோசனை வழங்குதல்; பொதுவான சர்வதேசச் சட்டம், கடற்றுறைச் சட்டம், சர்வதேச வர்த்தகச் சட்டம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சட்டத்துறை அமைப்புக்களுக்கு “விடயம்சார்ந்த” உதவிகளையும் செயலகச் சேவைகளையும் வழங்குதல்; ஐ.நா.சாசனத்தின் 102 ஆவது உறுப்புரை, சர்வதேச நீதிமன்றத்தின் அமைப்பு விதிகள் ஆகியவற்றின் பிரகாரம் செயலாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல் என்பன இந்த அலுவலகத்தின் கடமைகளாகும்.

சர்வதேச சமாதானமும் பாதுகாப்பும்; ஐக்கியநாடுகளின் அந்தஸ்து, சலுகைகள் மற்றும் தற்காப்புரிமை; அங்கத்துவ நாடுகளின் தகுதி மற்றும் பிரதிநிதித்துவம் என்பவை தொடர்பான சட்டப் பிரச்சினைகள் **OLA** அலுவலகத்தினால் கவனிக்கப்படுகின்றன. அதன் ஏனைய பணிகள் பின்வருமாறு:

சர்வதேச உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், ஐ.நா. உறுப்பாண்மைகள் மற்றும் பேரவைகளின் நடைமுறை விதிகள், வேறு சட்ட ஆவணங்கள் முதலியவற்றின் நகல்களை வரைந்து கொடுத்தல்; சர்வதேச நிர்வாகச் சட்டப் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஐக்கிய நாட்டுத் தீர்மானங்கள் மற்றும் பிரமாணங்கள் தொடர்பாகவும் சட்டத்துறைச் சேவைகளையும் ஆலோசனையையும் வழங்குதல்;

பொதுச்சபையின் ஆறாவது குழு, சர்வதேச சட்டத்துறை ஆணைக்குழு, சர்வதேச வர்த்தகச் சட்ட ஆணைக்குழு, ஐ.நா. கடற்சட்ட உடன்படிக்கையினால் ஏற்படுத்தப்பட்ட அமைப்புக்கள், ஐ.நா. நிர்வாக விசாரணை மன்றங்கள் முதலியவற்றிற்குச் செயலகச் சேவைகளை வழங்குதல்; உடன்படிக்கைகளைப் பதிவுசெய்து வெளியிடுதல், பன்முக ஒப்பந்தங்களின் வைப்பக முறை என்பன தொடர்பாக செயலாளர் நாயகத்திற்கு உள்ள கடமைகளை நிறைவேற்றுதல்.

அலுவலகத்தின் தலைவரான சட்டத்தரணி சட்டத்துறை சம்பந்தப்பட்ட மாநாடுகள், கூட்டங்களில் மாத்திரமன்றி நீதி விசாரணை நடைமுறைகளிலும் செயலாளர் நாயகத்தின் சார்பில் பங்குபற்றுவார். ஐக்கிய நாடுகளின் சார்பில் வெளியிடப்படும் சட்ட ஆவணங்களை அத்தாட்சிப்படுத்துதல், ஐக்கிய நாட்டு அமைப்பைச் சேர்ந்த சட்ட ஆலோசகர்களின் மாநாட்டைக் கூட்டுதல், அத்தகைய கூட்டங்களில் ஐக்கிய நாடுகளைப் பிரதிநிதித்துவம் செய்தல் என்பன அவரது ஏனைய கடமைகளாகும்.

## அரசியல் விவகாரத் திணைக்களம் (DPA)

| | |
|---|---|
| துணைச் செயலாளர் நாயகம் | திரு. கீரான் பிரெண்டர்காஸ்ட்<br>(ஐக்கிய இராச்சியம்) |

ஐக்கிய நாடுகள் சாசனத்திற்கு அமைய உலக சமாதானத்தையும் பந்தோபஸ்தையும் பாதுகாக்கும் கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றும்போது செயலாளர் நாயகம் எதிர்நோக்கும் சகல அரசியல் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆலோசனை, உதவி என்பவற்றை அரசியல் விவகாரத் திணைக்களம் வழங்குகிறது. அதன் பணிகள் பின்வருமாறு:

- உலகெங்கிலும் இடம்பெறும் அரசியல் மாற்றங்களைக் கண்காணித்தல், பகுப்பாய்தல், மதிப்பீடு செய்தல்.
- ஐக்கிய நாடுகளின் தலையீட்டினால் தீர்த்துவைக்கப்படக்கூடிய யுத்தங்கள் அல்லது நெருக்கடி நிலைமைகளை இனங்காணுதல்.
- அத்தகைய சந்தர்ப்பங்களில், எடுக்க வேண்டிய நடவடிக்கையை செயலாளர் நாயகத்திற்குச் சிபாரிசு செய்தலும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையை நிறைவேற்றுதலும்.
- யுத்தத் தடுப்பு இராஜதந்திர முயற்சிகள், சமாதான முயற்சிகள், அமைதிகாத்தல் போன்ற விடயங்களில் செயலாளர் நாயகத்தினால் அல்லது பொதுச்சபை, பாதுகாப்புச் சபை என்பவற்றால் தீர்மானிக்கப்படும் அரசியல் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் செயலாளர் நாயகத்திற்கு உதவுதல்.
- தேர்தலை நடத்துவதற்காக உதவி கோரி அங்கத்துவ நாடுகள் சமர்ப்பிக்கும் வேண்டுதல்களையிட்டுச் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குதலும் அத்தகைய வேண்டுதல்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும்.
- செயலாளர் நாயகத்திற்கும் அங்கத்துவ நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் அரசியல் அம்சங்கள் தொடர்பாக செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனையும் உதவியும் வழங்குதல்.

• பாதுகாப்புச் சபை, அதன் துணையமைப்புக்கள் மற்றும் பலஸ்தீன மக்களின் மூலாதார உரிமைகள் தொடர்பான குழு, காலனித்துவ ஒழிப்புச் சம்பந்தமாக விசேட 24 அங்கத்தவர் குழு ஆகியவற்றுக்குச் சேவைகளை வழங்குதல்.

பிணக்குகளுக்குச் சமாதானத் தீர்வு காண்பது தொடர்பான பேச்சுக்கள், ஆலோசனைகள் முதலியவற்றை முன்னின்று நடத்துதல் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் நாயகத்தின் கடமையாகும். ஐ.நா.வின் சமாதான முயற்சிகள், யுத்தத் தடுப்பு நடவடிக்கைகள், தேர்தல் உதவிப் பணிகள் முதலியவற்றில் அவர் முக்கிய பங்கினை வகிக்கிறார்.

## ஆயுதபரிகரண விவகாரத் திணைக்களம் (DDA)

துணைச் செயலாளர் நாயகம் திரு. ஜயந்த தனபால (இலங்கை)

அணுவாயுத பரிகரணம், அணுவாயுத பரம்பல் தடுப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதும் பேரழிவு விளைவிக்கும் ஏனைய ஆயுதங்கள், இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள் தொடர்பான தடை ஒப்பந்தங்களை வலுப்படுத்துவதும் இத் திணைக்களத்தின் கடமையாகும். தற்கால யுத்தங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் நிலக்கண்ணிகள், சிறு ஆயுதங்கள் என்பவற்றை ஒழிக்கும் முயற்சிகளுக்கும் அது ஊக்கமளிக்கிறது.

ஆயுதபரிகரணத் துறையில் அளவு நியமங்களை நிர்ணயிப்பதில் விடய ரீதியாகவும் ஏற்பாட்டு ரீதியாகவும் உதவி வழங்குவது DDA திணைக்களமே. பொதுச்சபை, அதன் முதலாவது குழு, ஆயுதபரிகரண ஆணைக்குழு, ஆயுதபரிகரணப் பேரவை முதலியவற்றின் ஊடாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பேச்சுவார்த்தைகள், இராணுவ விவகாரங்களில் ஒளிவுமறைவற்ற தன்மை, பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றின் மூலம் தடுப்பு ஆயுதபரிகரண நடவடிக்கைகளை DDA ஊக்குவிக்கிறது. சாதாரண ஆயுதங்கள் தொடர்பான ஐ.நா. பதிவேடு, பிராந்திய அரங்குகள் என்பவற்றின் மூலம் பிராந்திய ஆயுதபரிகரண முயற்சிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. ஐ.நா.வின் ஆயுதபரிகரண முயற்சிகள் தொடர்பாக தகவல் வழங்குவதும் இத் திணைக்களமே.

யுத்தமொன்றின் பின்னர் படைகளைக் கலைத்துவிடுதல், முன்னாள் போராளிகளை நிராயுதபாணிகளாக்குதல், அவர்களை சமூகத்தில் ஒன்றிணையச் செய்தல் போன்ற நடவடிக்கைகளை ஏற்பாடு செய்து அமுல்நடத்தவும் DDA உதவுகின்றது.

## அமைதிகாக்கும் செயற்பாடுகள் திணைக்களம் (DPK0)

துணைச் செயலாளர் நாயகம் — திரு. ஷோன்-மாரி குயேஹெனோ (பிரான்ஸ்)

இதுவே ஐ.நா. அமைதிகாக்கும் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு, நெறிப்படுத்தும் செயற்பாட்டுப் பிரிவாகும். திட்டங்களையும் நடைமுறைகளையும் வகுத்தல், உரிய அரசுகளுடன் பேச்சுக்களை நடத்தி, அமைதிகாக்கும் நடவடிக்கைக்குத் தேவைப்படும் உபகரணங்களையும் ஆளணியையும் பெற்றுக்கொள்ளுதல், அமைதிகாக்கும் செயற்பாடுகளுக்கும் அரசியல் அல்லது மனிதாபிமான தூதுப் பணிகளுக்கும் தேவையான பொருள் மற்றும் நிர்வாக வசதிகளை செய்துகொடுத்தல், அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கான செலவினங்களைக் கண்காணித்து நெறிப்படுத்துதல், பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களைச் செயற்படுத்தும் பொருட்டுப் பிணக்கில் சம்பந்தப்பட்ட நாடுகளுடனும் பாதுகாப்புச் சபை அங்கத்தவர்களுடனும் தொடர்புகளைப் பேணுதல், அவசியப்படும் பட்சத்தில் புதிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஆயத்தமாகத் திட்டங்களை வகுத்தல், புதிதாக உருவாகும் கொள்கைப் பிரச்சினைகளை ஆய்தல், இது தொடர்பாகக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் வகுத்தல் முதலியனவும் இத் திணைக்களத்தின் கடமைகளுள் அடங்கும். அமைதிகாக்கும் நடவடிக்கையின்போதும் ஏனைய அவசரகால நிலைமைகளின்போதும் நிலக்கண்ணி அகற்றல் தொடர்பான ஐ.நா. நடவடிக்கைகள் அனைத்தையும் இப் பிரிவே நெறிப்படுத்துகின்றது.

## மனிதநேய விவகார ஒருங்கிணைப்பு அலுவலகம் (OCHA)

மனிதநேய விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் நாயகம்
அவசரகால நிவாரண இணைப்பாளர்

திரு. கென்ஸோ ஒஷீமா (ஜப்பான்)

அவசரகால நிலைமைகளின்போது உதவி வழங்கும் சேவையில் ஈடுபடும் ஐக்கிய நாட்டு அமைப்புக்களுக்கு இடையே தொடர்புகளைப் பலப்படுத்துவதே இந்த அலுவலகத்தின் நோக்கமாகும்.

அவசரகால நிவாரண இணைப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பணிகள் பின்வருமாறு:

- முகவராண்மைகளின் அதிகார எல்லைகளுக்கு உட்படாத விடயங்கள் உட்படச் சகல மனிதநேய விடயங்களிலும் கவனம் செலுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலான கொள்கை உருவாக்கமும் ஒருங்கிணைப்பும்.
- அரசியல் ரீதியான அமைப்புக்களுக்கு, குறிப்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு, மனிதாபிமானப் பிரச்சினைகள் சம்பந்தமாகப் பரிந்துரை செய்தல்.
- அவசரகால நிலைமைகளில் உரிய பதில் நடவடிக்கை எடுப்பதற்கான அமைப்பு முறையொன்று ஏற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதன் மூலம் மனிதநேய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல். அவசரகால நிவாரண இணைப்பாளர் தலைமையிலான சர்வ முகவராண்மை நிலையியற் குழு மூலம் இது செய்யப்படுகின்றது.

OCHA அமைப்பு உலகெங்கிலும் 439 அலுவலர்களைக் கொண்டுள்ளது. 2000 - 2001 ஆண்டுக்கான அதன் மூல வரவு செலவுத் திட்டத் தொகை 45 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

## பொருளாதார, சமூக விவகாரத் திணைக்களம் (DESA)

துணைச் செயலாளர் நாயகம் திரு. நிற்றின் தேசாய் (இந்தியா)

இத் திணைக்களம் ஒன்றுக்கொன்று தொடர்புடைய மூன்று பரந்த செயற்பாட்டுத் துறைகளைக் கொண்டுள்ளது.

முதலாவதாக, குறிப்பிடப்பட்ட விடயங்கள் மற்றும் போக்குகள் சார்ந்த சமூக, பொருளாதார, சுற்றாடல் தரவுகளையும் தகவல்களையும் திரட்டிப் பகுப்பாய்வு செய்வதில் DESA ஈடுபடுகின்றது. இதனால், அங்கத்தவ நாடுகள் சரியான விபரங்களை அறிந்துகொண்டு பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றவும் தமது கொள்கைகளை அதற்கேற்ற முறையில் வகுத்துக்கொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கின்றது. இரண்டாவதாக, அரசாங்கங்களுக்கிடையிலான பல்வேறு அமைப்புக்கள் பொருளாதார, சமூக, சுற்றாடல் விடயங்கள் தொடர்பாக ஐ.நா.வின் ஆதரவில் நடத்தும் பேச்சுக்களுக்கான வசதிகளையும் வழிகாட்டுதல்களையும் DESA வழங்குகின்றது. மூன்றாவதாக, உலக பொருளாதார, சமூக, சுற்றாடல் மாநாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளை அமுல்செய்யும் முகமாக தேசிய நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்துக்கொள்வதில் DESA அங்கத்துவ நாடுகளுக்கு ஆலோசனை வழங்குகிறது.

இந்த ஆலோசனை அந்தந்த நாட்டின் வேண்டுதலுக்கமைய வழங்கப்படும். சம்பந்தப்பட்ட துறைகளில் தேசிய ஆற்றலை விருத்தி செய்வதற்குத் தொழில்நுட்ப உதவிகளையும் அது வழங்குவதுண்டு.

நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியை ஊக்குவித்தல், ஆண்-பெண் பாகுபாடு தொடர்பான பிரச்சினைகள், பெண்களின் முன்னேற்றம், ஆபிரிக்காவும் ஏனைய பகுதிகளிலுள்ள வளர்ச்சி குன்றிய நாடுகளும், அபிவிருத்திக் கொள்கைப் பகுப்பாய்வு, சனத்தொகை, புள்ளிவிபரங்கள், பொதுப் பொருளியலும் பொது நிர்வாகமும், சமூகக் கொள்கையும் அபிவிருத்தியும் ஆகியவற்றில் **DESA** கவனம் செலுத்துகின்றது. இந்தப் பணிகளின்போது, அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுடன் அது நெருங்கிய ஒத்துழைப்பை மேற்கொள்கிறது.

## பொதுச்சபை விவகாரங்கள் மற்றும் மாநாட்டுச் சேவைகள் திணைக்களம் (DGAACS)

துணைச் செயலாளர் நாயகம் திரு. யொங்ஜியாங் ஜின் (சீனா)

இத் திணைக்களம் பொதுச்சபைக்கும் அதன் உப அமைப்புக்களுக்கும் பொருளாதார-சமூகநலச் சபைக்கும் அதன் பெரும்பாலான உப அமைப்புக்களுக்கும் பொருளாதார, சமூக விடயங்கள் சம்பந்தமான கூட்டங்கள், மாநாடுகள் என்பவற்றிற்கும் தொழில்நுட்ப மற்றும் செயலக உதவிச் சேவைகளை வழங்குகின்றது. நியூயோர்க்கில் அல்லது வேறு இடங்களில் கூட்டத்தை நடத்தும் அரசாங்கங்களுக்கு இடையிலான அமைப்புக்களுக்கும் ஆவணத் தயாரிப்பு, மொழிபெயர்ப்பு மற்றும் பிரசுரச் சேவைகள் இத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்றன.

திணைக்களத்தின் செயற்பாடுகள், மாநாட்டுச் சேவைக் கொள்கைகள், உலகளாவிய ஐ.நா. நடவடிக்கைகளுக்கான நடைமுறைகள் என்பன பற்றி நடத்தப்படும் கூட்டங்களில் திணைக்களத்தின் தலைவரான துணைச் செயலாளர் நாயகமே செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியாகக் கலந்துகொள்வார்.

## பொதுத் தகவல் திணைக்களம் (DPI)

இடைக்காலத் தலைவர் திரு. சஷி தரூர் (இந்தியா)

இத் திணைக்களமே ஐக்கிய நாடுகளின் நடவடிக்கைகள், நோக்கங்கள் என்பன பற்றி உலகுக்குத் தகவல் வழங்குகின்றது. இந்தச் சிக்கலான பணியை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய நாடுகளின் வெப்தளம், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை வெளியீடுகள், பிரசுரங்கள், விவரண வீடியோ படங்கள், விசேட நிகழ்ச்சிகள், பொதுச் சுற்றுப்பயணங்கள், நூலக வசதிகள் முதலிய ஊடகங்களும் வசதிகளும் பயன்படுத்தப்படுகின்றன.
உலகெங்குமுள்ள 70 தகவல் நிலையங்களும் தகவல் பிரிவையும் உள்ளடக்கிய எட்டு ஐ.நா. அலுவலகங்களும் இத் திணைக்களத்தின் பணியை நிறைவேற்றுவதற்கு உதவியாகச் செயற்படுகின்றன.

DPI தலைவரே ஐ.நா.வின் தொடர்புத்துறைக் கொள்கைக்குப் பொறுப்பாளி. ஐக்கிய நாடுகளின் பணிகள் பற்றி ஒளிவுமறைவற்ற, முழுமையான தகவல்கள் வழங்கப்படுவதையும் தாபனம் பூராவும் ஒருங்கிசைவான தொடர்புக் கலாசாரம் பேணப்படுவதையும் அவர் உறுதிப்படுத்த வேண்டும்.

முக்கிய உலகப் பிரச்சினைகள் சம்பந்தமாக தகவல் ஊக்குவிப்பு இயக்கங்களை நடத்துதல், விசேட நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் மற்றும் பத்திரிகையாளர் மாநாடுகளை ஒழுங்கு செய்தல், செய்தியாளர்களுக்கும் மீள்பரப்புரை வழங்கும் ஏனையோருக்குமென பயிற்சிக்களங்கள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துதல், அரச சார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுதல், பொதுமக்களுக்கு ஐ.நா. பற்றிய தகவல்களை வழங்கும் தகவற் களஞ்சியமாகச் செயற்படுத்தல், ஐக்கிய நாடுகள் தலைமையகத்திற்கான சுற்றுலாக்கள் முதலியவற்றை ஏற்பாடு செய்தல் என்பன பொது விவகாரங்கள் பிரிவின் பணிகளாகும்.

உலகெங்குமுள்ள செய்தி மற்றும் ஊடகத் தாபனங்கள் ஐ.நா. பற்றியும் அதன் நடவடிக்கைகள் பற்றியும் செய்திகளையும் தகவல்களையும் பெற்றுக்கொள்ள வசதிகளைச் செய்துகொடுப்பது செய்தி மற்றும் ஊடகப் பிரிவின் கடமையாகும். அது தினமும் வானொலி மூலமும் இன்டர்நெட் ஊடாகவும் செய்திகளை வெளியிடுகின்றது. வானொலி மற்றும் வீடியோ நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. ஐ.நா. கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான புகைப்படப் பிடிப்புக்கும் நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்புக்களும் வசதி செய்துகொடுக்கப்படுகின்றது. செய்தியாளர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதும் இந்தப் பிரிவே.

நூலக மற்றும் தகவல் மூலவளப் பிரிவானது ஐக்கிய நாட்டு ஆவணங்களையும் வெளியீடுகளையும் பெற்றுக்கொள்வதற்கான வசதியைச் செய்துகொடுக்கின்றது. டாக் ஹமர்ஷொல்ட் நூலகம் இந்த வகையில் பிரதான களஞ்சியமாக உள்ளது. அங்கிருந்து நேரடியாகவோ அல்லது இன்டர்நெட் வெப்சைட் மற்றும் உலகெங்குமுள்ள அதன் 350க்கு மேற்பட்ட வைப்பு நூலங்கள் மூலமாகவோ ஆவணங்களையும் வெளியீடுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுத் தகவல் திணைக்களத்தின் நிர்வாகத்தில் இயங்கும் மற்றைய பிரிவு செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் அலுவலகமாகும். இப் பிரிவே செய்தி ஊடகங்கள் தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் செயற்பாடுகளைத் திட்டமிடுகின்றது. நேரடியாகச் செயலாளர் நாயகத்தின் மேற்பார்வையில் பணியாற்றும் பேச்சாளர், நாளாந்த அடிப்படையில் செய்தியாளர்களுக்குத் தகவல் வழங்குகிறார்.

## முகாமைத் திணைக்களம் (DM)

துணைச் செயலாளர் நாயகம் — திரு. ஜோசப் ஈ. கொனர் (ஐக்கிய அமெரிக்கா)

இத் திணைக்களம் செயலகத்தின் சகல பிரிவுகளுக்கும் மூன்று துறைகளில் கொள்கை வழிகாட்டுதல் மற்றும் முகாமை உதவியை வழங்குகின்றது. நிதி, மனிதவளங்கள், ஆதாரச் சேவைகள் என்பனவே அத் துறைகளாகும். இத் துறைகள் முறையே நிகழ்ச்சித் திட்ட, வரவு செலவுத் திட்ட மற்றும் கணக்கியல் அலுவலகம், மனித வளங்கள் முகாமை அலுவலகம், மத்திய ஆதாரச் சேவைகள் அலுவலகம் ஆகியவற்றின் மேற்பார்வைக்குள் வருகின்றன.

செயலகத்திற்கென முன்னேற்றகரமான முகாமைக் கொள்கைகளை வகுத்து அமுல்செய்தல், அலுவலர்களின் முகாமையும் பயிற்சியும், நிகழ்ச்சித் திட்டமிடல், வரவு செலவுத் திட்ட, நிதி மற்றும் மனிதவள முகாமை, புதிய தொழில்நுட்பங்களின் அறிமுகம் என்பன இத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களாகும். பொதுச்சபையின் ஐந்தாவது குழு (நிர்வாகமும் வரவு செலவுத் திட்டமும் சம்பந்தப்பட்ட குழு), நிகழ்ச்சித் திட்ட மற்றும் ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றிற்கும் இத் திணைக்களம் சேவைகளை வழங்குகிறது.

இதன் துணைச் செயலாளர் நாயகமே ஐ.நா. தாபனத்தின் நடுத்தரக் கால திட்டம், இருவருட வரவு செலவுத் திட்டம் ஆகியவற்றின் தயாரிப்புக்கான கொள்கைகள், வழிகாட்டுதல்கள், ஒருங்கிணைப்பு முதலியவற்றை வழங்குகிறார். முகாமை தொடர்பான விடயங்களில் செயலாளர் நாயகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் இவர், செயலகத்தில் முகாமைப் பிரச்சினைகளைக் கண்காணித்து வருவதுடன் உள்ளக நீதி பரிபாலன அமைப்பையும் மேற்பார்வை செய்கிறார்.

## ஈராக் நிகழ்ச்சித் திட்ட அலுவலகம்

துணைச் செயலாளர் நாயகம்
நிறைவேற்றுப் பணிப்பாளர் — திரு. பெனன் செவான் (சைப்பிரஸ்

குவைத் மீதான ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து 1990 ஆம் ஆண்டு பாதுகாப்புச் சபையினால் விதிக்கப்பட்ட தடைகளின் விளைவாகப் பாதிக்கப்பட்ட ஈராக்கிய மக்களின் மனிதாபிமான தேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக 1995 ஆம் ஆண்டு பாதுகாப்புச் சபையினால் ஏற்படுத்தப்பட்ட "எண்ணெய்க்கு உணவு" திட்டத்தை இந்த அலுவலகம் நிர்வகிக்கின்றது. இத் திட்டத்தின் கீழ் எண்ணெய் ஏற்றுமதி 1996 டிசெம்பரில் ஆரம்பமானது. மூன்று மாதங்களின் பின்னர் முதலாவது உணவுக் கப்பல்கள் ஈராக்கைப் போய்ச் சேர்ந்தன. இதுவரை, இத் திட்டத்தின் கீழ் 4 பில்லியன் டொலர் பெறுமதியான 10 மில்லியன் மெட்ரிக் தொன் உணவுப் பொருள்களும் 720 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள் என்பனவும் ஈராக்கிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர, நீர் மற்றும் சுகாதார வசதிகள், விவசாயம், கல்வி, உட்கட்டமைப்பு வசதிகள், நிலக்கண்ணி அகற்றல் என்பன தொடர்பாகவும் 800 மில்லியன் டொலர் பெறுமதியுள்ள மனிதாபிமான உதவிகள் ஈராக்கிற்கு வழங்கப்பட்டுள்ளன.

## ஐ.நா. பாதுகாப்பு இணைப்பாளர் அலுவலகம் (UNSECOORD)

துணைச் செயலாளர் நாயகம்
ஐ.நா. பாதுகாப்பு இணைப்பாளர் திரு. பெனன் செவான் (சைப்பிரஸ்)

ஏதேனும் அவசரகால நிலைமை ஏற்படும் பட்சத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பானது ஒருங்கிணைவாகவும் பொருத்தமான முறையிலும் பதில் நடவடிக்கை எடுப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு இந்த அலுவலகம் செயலாளர் நாயகத்தினதும் ஏனைய ஐக்கிய நாட்டு அமைப்புக்களின் தலைவர்களினதும் சார்பில் செயற்படுகின்றது. பாதுகாப்புத் தொடர்பான சகல கொள்கை மற்றும் நடைமுறை விடயங்களும் இதன் பொறுப்பாகும். அவசர வெளியேற்றத்தின் சகல அம்சங்கள் தொடர்பாகவும் இந்த அலுவலகமே செயலாளரின் சார்பில் தீர்மானங்களை எடுக்கின்றது.

ஐ.நா. அமைப்பிலுள்ள அலுவலர்களினதும் அவர்களது குடும்பத்தினரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைச் சிபாரிசு செய்தல், அமைப்புக்களுக்கிடையிலான பாதுகாப்பு ஏற்பாடுகளைத் திட்டமிட்டு ஒருங்கிணைத்து அமுலாக்குதல், பாதுகாப்பு விடயங்களில் அமைப்புக்களுக்கு இடையிலான ஒத்துழைப்பின் மையமாக விளங்குதல் என்பன இதன் பணிகளாகும்.

இந்த அலுவலகத்திற்கான நிதியை ஒருங்கிணைப்புக்கான நிர்வாகக் குழுவில் அங்கம் வகிக்கும் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து வழங்குகின்றன.

## பிராந்திய ஆணைக்குழுக்கள்

ஐக்கிய நாடுகளின் பிராந்திய ஆணைக் குழுக்கள் செயாலாளர் நாயகம் வழங்கும் அதிகாரத்தின் கீழ் செயற்படுவதோடு, பொருளாதார-சமூகநலச் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கக் கடமைப்பட்டுள்ளன. தத்தமது பிராந்தியங்களின் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல், பிராந்திய நாடுகளுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பை விருத்தி செய்தல், ஏனைய பிராந்திய நாடுகளுடன் பொருளாதார உறவுகளை வளர்த்தல் என்பனவே அவற்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களாகும். பிராந்திய ஆணைக்குழுக்களின் செயற்பாட்டுக்கான நிதி ஐக்கிய நாடுகளின் வழமையான வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்படுகின்றது.

## ஆபிரிக்க பொருளாதார ஆணைக்குழு (ECA)

1958 இல் அமைக்கப்பட்ட ECA ஆபிரிக்கக் கண்டத்தில் பொருளாதார, சமூக மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை ஊக்குவித்து வருகிறது. 53 அங்கத்துவ நாடுகளுக்கு இடையிலும் உற்பத்தி, வர்த்தகம், நாணயப் பரிமாற்றம், உட்கட்டமைப்பு வசதிகள், நிறுவன அமைப்பு முதலிய துறைகளில் ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் வலுப்படுத்தும் கொள்கைகளும் வழிமுறைகளும் ஊக்குவிக்கப்படுகின்றன. பொருளாதார, சமூக விடயங்களில் தகவல் சேகரிப்பும் பகுப்பாய்வும்; உணவு உற்பத்தியும் நிலைத்துநிற்கக்கூடிய அபிவிருத்தியும்; அபிவிருத்தி முகாமை; அபிவிருத்திக்காகத் தகவல் புரட்சியைப் பயன்படுத்துதல்; பிராந்திய ஒத்துழைப்பை வளர்த்தல் போன்றவற்றில் ECA கவனம் செலுத்துகிறது. பெண்களின் நிலையை மேம்படுத்துதல், அபிவிருத்தி சம்பந்தமான தீர்மானங்களை எடுப்பதில் அவர்களைப் பங்குகொள்ளச் செய்தல், தேசிய அபிவிருத்தி விடயங்களில் ஆண்-பெண் சமத்துவத்தை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது.

நிறைவேற்றுச் செயலாளர்: Mr. K.Y. Amoako (Ghana)
முகவரி: Africa Hall, P.O. Box 3001, Addis Ababa, Ethiopia.
தொலைபேசி: (251 1) 51 72 00
ஃபெக்ஸ்: (251 1) 51 44 16
ஈ-மெயில்: ecainfo@un.org
இன்டர்நெட்: www.un.org/Depts/eca

## ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு (ECE)

இது 1947 இல் அமைக்கப்பட்டது. வட அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய ஆசியா ஆகியவற்றிலுள்ள நாடுகள் பொருளாதார ஒத்துழைப்புக்கான வழிமுறைகளை வகுத்துக்கொள்ள உதவும் ஓர் அரங்கமாக இது அமைகின்றது. இஸ்ரேல் உட்பட 55 நாடுகள் இதில் அங்கம் வகிக்கின்றன. சுற்றாடல், போக்குவரத்து, புள்ளிவிபரங்கள், வர்த்தகம், கைத்தொழில், விவசாயம், வனவியல், வீடமைப்பு, திட்டமிடல் போன்ற துறைகளில் முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது. ECA கூட்டங்களில் பேச்சுக்கள் நடத்தப்பட்டு ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் செய்யப்படுவதுடன் உதவித் திட்டங்கள் சம்பந்தமாகவும் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அங்கத்துவ நாடுகளின் கொள்கைகள், நடைமுறைகளுக்கிடையே ஒருங்கிசைவை ஏற்படுத்த இந்த ஆணைக்குழு உதவுவதால் பொருளாதாரத் தொடர்புகள், முதலீடுகள், போக்குவரத்து வலையமைப்புக்களின் ஒருங்கிணைப்பு, சுற்றாடல் பாதுகாப்பு நடைமுறைகள் என்பவற்றை இலகுவாகவும் பயனுள்ள முறையிலும் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

நிறைவேற்றுச் செயலாளர்: **Ms. Brigita Schmognerova (Slovakia)**
முகவரி: **Palais des Nations, 1211, Geneva 10, Switzerland.**
தொலைபேசி: **(41 22) 917 44 44**
ஃபெக்ஸ்: **(41 22) 917 0505**
ஈ-மெயில்: **info.ece@unece.org**
இன்டர்நெட்: **www.unicc.org/unece**

## லத்தின் அமெரிக்க, கரீபியன் பிராந்தியப் பொருளாதார ஆணைக்குழு(ECLAC)

இது 1948 இல் அமைக்கப்பட்டது. பிராந்திய நாடுகளுக்கிடையே பொருளாதார, சமூக அபிவிருத்தியை ஊக்குவிக்கும் கொள்கைகளை ஒருங்கிணைத்து நெறிப்படுத்துவது இதன் நோக்கமாகும். இதில் 41 அங்கத்துவ நாடுகளும் 7 துணை அங்கத்துவ நாடுகளும் உள்ளன. பிராந்திய மற்றும் தேசிய அபிவிருத்தி நடைமுறைகள் சம்பந்தமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அங்கத்துவ நாடுகளுக்குச் சிபாரிசுகளும் விசேட தகவல்களும் வழங்கப்படுகின்றன.

விவசாய அபிவிருத்தி, பொருளாதார-சமூகத் திட்டமிடல், கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி, சர்வதேச வர்த்தகம், சர்வதேச முதலீடுகள், பிராந்திய ஒத்துழைப்பு, இயற்கைவள அபிவிருத்தி, சுற்றாடலும் மனித குடியிருப்புக்களும், முகாமை நிர்வாகம், சனத்தொகைக் கொள்கை போன்ற பல்வேறு விடயங்களில் தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் **ECLAC** ஒத்துழைப்பை மேற்கொள்கிறது.

**ECLAC** அமைப்பில் பொருளாதார, சமூகத் திட்டமிடலுக்கான லத்தின் அமெரிக்க, கரீபியன் நிலையமும் **(ILPES)** இடம்பெறுகின்றது. இது ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகின்றது. மெக்ஸிக்கோ மற்றும் மத்திய அமெரிக்காவுக்கென (மெக்ஸிக்கோவில்) ஒன்றும் கரீபியன் பிராந்தியத்திற்கென (ட்ரினிடாட் டொபேகோவில்) ஒன்றுமாக இரண்டு உப பிராந்திய அலுவலகங்களும் ஆர்ஜன்டீனா, பிறேஸில், கொலம்பியா, உருகுவாய், ஐக்கிய அமெரிக்கா ஆகிய இடங்களில் ஐந்து தேசிய அலுவலகங்களும் உள்ளன.

நிறைவேற்றுச் செயலாளர்: **Mr. Jose Antonio Ocampo (Colombia)**
முகவரி: **Edificio Naciones Unidas, Avenida Dag Hammarskjold s/n, Casilla 179-D, Santiago , Chile.**
தொலைபேசி: **(56 2) 210 2000/206 1519**
ஃபெக்ஸ்: **(56 2) 208 0252/228 1947**
ஈ-மெயில்: **dpisantiago@eclac.cl**
இன்டர்நெட்: **www.eclac.cl, www.eclac.org**

## ஆசிய, பசுபிக் பிராந்திய பொருளாதார, சமூக ஆணைக்குழு(ESCAP)

இது 1947 இல் அமைக்கப்பட்டது. பிராந்தியத்தின் பொருளாதார, சமூக பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட இதுவொன்றே ஆசிய, பசுபிக் பிராந்தியத்திலுள்ள சகல நாடுகளின் அரசாங்கங்களும் சந்திக்கும் பொது அரங்கமாகும். இதில் 51 அங்கத்துவ நாடுகளும் 9 துணை அங்கத்துவ நாடுகளும் உள்ளன. உலகின் மொத்தச் சனத்தொகையில் 60% மக்கள் இந்த நாடுகளிலேயே வசிக்கின்றனர். ESCAP அமைப்பானது சமூக பொருளாதார அபிவிருத்திக்கான தொழில்நுட்ப உதவிகளை அரசாங்கங்களுக்கு வழங்குகின்றது. அரசாங்கங்களுக்கான நேரடி ஆலோசனைச் சேவை, ஆளணியினருக்கான பயிற்சி, அனுபவப் பரிமாற்றம், தகவல் வெளியீடு என்பவற்றின் மூலம் இந்த உதவி வழங்கப்படுகிறது. பொருளாதார சமூக வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டங்களையும் ESCAP அமுல்செய்கின்றது. அதன் ஆதரவில் விவசாய அபிவிருத்தி, புள்ளிவிபரங்கள், தொழில்நுட்பப் பரிமாற்றம் ஆகிய துறைகள் சார்ந்த மூன்று பிராந்திய ஆராய்ச்சி-பயிற்சி நிலையங்கள் இயங்கிவருகின்றன. பிராந்திய நாடுகளுக்கு இடையிலான வர்த்தகமும் முதலீடும், தொழில்நுட்பப் பரிமாற்றம், தனியார்மயப்படுத்தலும் தொழில்முயற்சிகளும், சுற்றாடல் பாதுகாப்பு, நகர அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, போதைப் பொருள் தடுப்பு, சனத்தொகைக் கட்டுப்பாடு, சமூக மேம்பாடு, தொழிலாளரின் இடப்பெயர்வு ஆகிய விடயங்களில் ESCAP அமைப்பு தற்சமயம் அக்கறை காட்டி வருகின்றது.

நிறைவேற்றுச் செயலாளர்: **Mr. Kim Hak-Su (Republic of Korea)**
முகவரி: **United Nations Building, Rajadamnem Avenue, Bankok, Thailand.**
தொலைபேசி: **(662) 288 1234**
ஃபெக்ஸ்: **(662) 288 1000**
ஈ-மெயில்: **(surname).unescap@un.org**
இன்டர்நெட்: **www.unescap.org**

## மேற்கு ஆசிய பொருளாதார, சமூக ஆணைக்குழு(ESCWA)

இது 1973 இல் அமைக்கப்பட்டது. மேற்கு ஆசிய நாடுகளுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் ஊக்குவிப்பதன் மூலம் பிராந்தியத்தின் பொருளாதார, சமூக மேம்பாட்டுக்கு வழிகோலுவதே இதன் நோக்கமாகும். இதில் 13 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்குள் இப் பிராந்தியத்திற்கான பிரதான பொருளாதார, சமூக அரங்காக ESCWA விளங்குகின்றது. பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, விவசாயம், கைத்தொழில், இயற்கை வளங்கள், சுற்றாடல், போக்குவரத்து, தொலைத்தொடர்பு போன்ற துறைகளில் இது கவனம் செலுத்துகின்றது.

நிறைவேற்றுச் செயலாளர்: **Ms. Merwat M. Tallawy (Egypt)**
முகவரி: **P.O. Box 11-8575, Riad el-solh Square, Beirut, Lebanon.**
தொலைபேசி: **(961) 198 1301**
ஃபெக்ஸ்: **(961) 198 1516**
ஈ-மெயில்: **unescwa@escwa.org.lb**
இன்டர்நெட்: **www.escwa.org.lb**

## சர்வதேச விசாரணை மன்றங்கள்

### முன்னாள் யூகோஸ்லாவியா தொடர்பான சர்வதேச குற்றவியல் விசாரணை மன்றம் (ICTY)

முன்னாள் யூகோஸ்லாவியாவில் 1991 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்திற்கு முரணாகப் புரியப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை விசாரிப்பதற்காக 1993 ஆம் ஆண்டு பாதுகாப்புச் சபையினால் அமைக்கப்பட்ட விசாரணை மன்றம் இதுவாகும். இதில் 14 நீதிபதிகளும் 1,011 ஊழியர்களும் பணியாற்றுகின்றனர். 2000 ஆம் ஆண்டிற்கான இதன் செலவுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 96 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்.

இதுவரை, 96 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2000 ஜுலையில் இருந்த நிலைமையின்படி, 38 பேர் விசாரணை மன்றத்தின் முன்னிலையில் விசாரணையில் பங்குபற்றிக்கொண்டிருந்தனர். 26 பேர் சமூகமளிக்கவில்லை. தண்டனை விதிக்கப்பட்டவர்களில் 2 பேர் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டிருந்தனர். 13 பேர் முதல் விசாரணையிலேயே குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். 4 பேர் மேன்முறையீட்டின் பின் தண்டனை பெற்றனர். 2 பேர் விடுதலை செய்யப்பட்டனர். ஒன்பது பேர் தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்தனர்.

தலைவர்: **Judge Claude Jorda (France)**
பிரதம வழக்குத் தொடுநர்: **Mrs. Carla Del Ponte (Switzerland)**
பதிவாளர்: **Mr. Henry Hans Holthuis (Netherlands)**
தலைமையகம்: **Churchillplein 1, 2517 JW, The Hague, The Netherlands.**
தொலைபேசி: **(31 70) 416 5233**
ஃபெக்ஸ்: **(31 70) 512 5355**
இன்டர்நெட்: **www.un.org/icty**

## ருவாண்டா தொடர்பான சர்வதேச குற்றவியல் விசாரணை மன்றம் (ICTR)

ருவாண்டாவில் 1994 ஆம் ஆண்டு புரியப்பட்ட இனக்கொலைகளுக்கும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்திற்கு முரணான ஏனைய பாரிய குற்றங்களுக்கும் பொறுப்பானவர்களை விசாரிப்பதற்காக 1994 ஆம் ஆண்டு பாதுகாப்புச் சபையினால் அமைக்கப்பட்ட விசாரணை மன்றம் இதுவாகும். இம் மன்றம் மும்மூன்று நீதிபதிகளைக் கொண்ட மூன்று விசாரணைச் சபைகளையும் ஐந்து நீதிபதிகளைக் கொண்ட மேன்முறையீட்டுச் சபை ஒன்றையும் கொண்டுள்ளது. இதில் 729 ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். 2000 ஆம் ஆண்டுக்கான அதன் செலவின ஒதுக்கீடு 79 மில்லியன் அமெரிக்க டொலராகும். 2000 ஆம் ஆண்டு வரை, 40க்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் பலருக்குத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

தலைவர்: **Judge Ms. Navanethem Pillay (South Africa)**
பிரதம வழக்குத் தொடுநர்: **Mrs. Carla Del Ponte (Switzerland)**
பதிவாளர்: **Adama Dieng (Senegal)**
தலைமையகம்: **P.O. Box 6016, Arusha, Tanzania**
தொலைபேசி: **(212) 963 2850 or (255) 27 50 43 69/72**
ஃபெக்ஸ்: **(212) 963 2848 or (255) 27 50 40 00 or 50 43 73**
இன்டர்நெட்: **www.ictr.un.org**

# ஐ.நா. நிகழ்ச்சித் திட்டங்களும் ஏனைய அமைப்புக்களும்

## ஐ.நா. வர்த்தக அபிவிருத்திப் பேரவை (UNCTAD)

அரசாங்கங்களுக்கு இடையிலான ஒரு நிரந்தர அமைப்பாக 1964 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஐ.நா. வர்த்தக அபிவிருத்திப் பேரவையே வர்த்தகம், அபிவிருத்தி ஆகிய துறைகளில் பொதுச்சபையின் பிரதான செயலுறுப்பாக விளங்குகின்றது. வர்த்தகத்தையும் பொருளாதார அபிவிருத்தியையும், குறிப்பாக வளர்முக நாடுகளில், துரிதப்படுத்தும் பொறுப்பு இதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வளர்முக நாடுகளில் வர்த்தகம், முதலீடு மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்களை உச்சநிலைக்கு அதிகரித்தல், உலகமயமாக்கலின் விளைவாக எதிர்நோக்கப்படும் சவால்களுக்கு முகங்கொடுக்க வளர்முக நாடுகளுக்கு உதவுதல், உலகப் பொருளாதார அமைப்பில் அந்த நாடுகளைச் சம அந்தஸ்துடன் ஒருங்கிணைத்தல் என்பன இப் பேரவையின் பிரதான குறிக்கோள்களாகும்.

UNCTAD அமைப்பில் 190 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அதன் கொள்கை வகுப்புச் சபை நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை கூடுகின்றது. 10 ஆவது மாநாடு 2000 ஆம் ஆண்டு பாங்கொக்கில் நடைபெற்றது. வர்த்தக, அபிவிருத்திச் சபையே இந்த அமைப்பின் நிறைவேற்று மன்றமாகும். UNCTAD செயற்பாட்டுச் செலவுக்காக வழமையான ஐ.நா. வரவு செலவுத் திட்டத்திலிருந்து வருடாந்தம் 50 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்படுகிறது. இதற்குப் புறம்பாக, தொழில்நுட்ப ஒத்துழைப்பு நடவடிக்கைகளுக்கென வேறு மூலங்களில் இருந்து சுமார் 24 மில்லியன் டொலர் பெறப்படுகின்றது. UNCTAD அலுவலர்களின் எண்ணிக்கை 394 ஆகும்.

செயலாளர் நாயகம்: **Mr. Rubens Ricupero (Brazil)**
தலைமையகம்: **Palais des Nations, CH-1211, Geneva 10, Switzerland.**
தொலைபேசி: **(41 22) 907 1234**
ஃபெக்ஸ்: **(41 22) 907 0043**
ஈ-மெயில்: **ers@unctad.org**
இன்டர்நெட்: **www.unctad.org**

## சர்வதேச வர்த்தக நிலையம் UNCTAD/WTO (ITC)

சர்வதேச வர்த்தக நிலையம் UNCTAD/WTO என்பது UNCTAD, உலக வர்த்தக தாபனம் (WTO) ஆகியவற்றின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு முகவராண்மையாகும். சர்வதேச வர்த்தக அபிவிருத்தியின் செயற்பாட்டு மற்றும் தொழில் முயற்சி சார்ந்த விடயங்களில் இது கவனம் செலுத்துகின்றது. வளர்முக நாடுகளும் பொருளாதார மாற்றத்திற்கு உள்ளாகிவரும் நாடுகளும் தமது ஏற்றுமதிகளை அதிகரித்து, இறக்குமதி நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கு ITC உதவுகின்றது.

இதன் தலைமையகச் செயற்பாடுகளுக்கான நிதியை ஐக்கிய நாடுகளும் உலக வர்த்தக தாபனமும் வழங்குகின்றன. தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டங்களுக்கான நிதி ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினாலும் அங்கத்துவ நாடுகளினால் சுயவிருப்பின் பேரில் வழங்கப்படும் பங்களிப்பினாலும் ஈடுசெய்யப்படுகின்றது. வருடாந்தச் செலவு சுமார் 33 மில்லியன் அமெரிக்க டொலராகும். சர்வதேச வர்த்தக நிலையத்தில் சுமார் 180 அலுவலர்கள் வேலை செய்கின்றனர்.

நிறைவேற்றுப் பணிப்பாளர்: **Mr. J. Denis Belisle (Canada)**
தலைமையகம்: **Palais des Nations, CH-1211, Geneva 10, Switzerland.**
தொலைபேசி: **(41 22) 730 01 11**
ஃபெக்ஸ்: **(41 22) 733 44 39**
ஈ-மெயில்: **itcre@intracen.org**
இன்டர்நெட்: **www.intracen.org**

## போதைப் பொருள் கட்டுப்பாட்டு, குற்றத் தடுப்பு அலுவலகம் (ODCCP)

ஒன்றுக்கொன்று தொடர்புடைய பிரச்சினைகளான போதைப் பொருள் கட்டுப்பாடு, பாரிய குற்றச்செயல் தடுப்பு, சர்வதேசப் பயங்கரவாதம் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்கு ஐக்கிய நாடுகளின் ஆற்றலை விரிவுபடுத்தும் நோக்குடன் இந்த அலுவலகம் 1997 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இது பின்வரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது:

- ஐக்கிய நாடுகளின் சர்வதேச போதைப் பொருள் கட்டுப்பாட்டுத் திட்டம் (UNDCP)
- சர்வதேச குற்றத் தடுப்பு நிலையம் (CICP)

UNDCP என்பது ஐக்கிய நாடுகளின் போதைப் பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து முன்னெடுத்துச் செல்லும் மத்திய அமைப்பாகும். இத் துறையில் தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் களஞ்சியமாக விளங்கும் UNDCP, போதைப் பொருள் கட்டுப்பாடு தொடர்பான விடயங்களில் அங்கத்துவ நாடுகளுக்கு ஆலோசனை வழங்குகின்றது. வெளிக்கள அலுவலக வலையமைப்பின் ஊடாக அதன் பணிகள் தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியில் நிறைவேற்றப்படுகின்றன.

CICP என்பது பாரிய குற்றச்செயல்களின் தடுப்பு மற்றும் குற்றவியல் நீதி தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மத்திய நிலையமாகும். தேச எல்லைகள் கடந்த திட்டமிட்ட குற்றச்செயல்கள், சட்டவிரோதமான ஆட்கடத்தல்கள், சர்வதேச நிதி மோசடிகள், சர்வதேச பயங்கரவாதம் போன்றவற்றில் இந்த நிலையம் கவனம் செலுத்துகின்றது.

2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 166.2 மில்லியன் அமெரிக்க டொலராகும். இதில் 154.9 மில்லியன் டொலர் UNDCPக்கும் 11.3 டொலர் CICPக்கும் வழங்கப்பட்டது. UNDCPக்கான ஒதுக்கீட்டில் 90 சதவீதமும் CICPக்கான ஒதுக்கீட்டில் 49 சதவீதமும் சுயவிருப்பின் பேரில் வழங்கப்பட்ட பங்களிப்புக்களாகும். எஞ்சிய தொகைகளே ஐ.நா.வின் வழமையான வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டன.

நிறைவேற்றுப் பணிப்பாளர்: Mr. Antonio Maria Costa (Italy)
தலைமையகம்: Vienna International Centre, Wagramerstrasse 5, P.O. Box 500, A-1400, Vienna, Austria.
தொலைபேசி: (43 1) 26060 0
ஃபெக்ஸ்: (43 1) 26060 5866
ஈ-மெயில்: odccp@odccp.org
இன்டர்நெட்: www.odccp.org

## ஐ.நா. சுற்றாடல் திட்டம் (UNEP)

ஐ.நா. சுற்றாடல் திட்டம் 1972 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. சுற்றாடல் பாதுகாப்பு முயற்சிகளுக்கான தலைமைத்துவத்தை வழங்கிக் கூட்டு முயற்சிகளை ஊக்குவிப்பதே அதன் நோக்கமாகும். தேசங்களும் மக்களும் வருங்காலச் சந்ததியினருக்கு இழப்பை ஏற்படுத்தா வண்ணம் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இத் திட்டம் வழிகாட்டுகின்றது.

சுற்றாடல் துறையில் இதுவே ஐக்கிய நாடுகளின் பிரதான அமைப்பாகும். உலகளாவிய சுற்றாடல் நெறிமுறைகளை வகுத்தல், ஐக்கிய நாடுகள் அமைப்பிற்குள் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி முயற்சிகளில் சுற்றாடல் பாதுகாப்பு விடயங்களைக் கவனித்தல், உலகச் சுற்றாடல் பாதுகாப்புக்காக பரிந்துரை செய்தல் என்பன இதன் பிரதான பணிகளாகும்.

இத் திட்டப் பிரிவின் ஆளுநர் சபையில் 58 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. சபை ஆண்டுக்கொரு தடவை கூடுகின்றது. நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நிதியானது சுற்றாடல் நிதியம், நன்கொடைகள், நம்பிக்கை நிதியங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்படுகின்றன. ஐ.நா.வின் வழமையான வரவு செலவுத் திட்டத்திலிருந்தும் ஒரு சிறு தொகை ஒதுக்கப்படுகிறது. 2000-2001 ஆண்டுக்கான மொத்தச் செலவின ஒதுக்கீடு 120 மில்லியன் டொலராகும். இத் திட்டப் பிரிவில் 680 அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

நிறைவேற்றுப் பணிப்பாளர்: Mr. Klaus Toepfer (Germany)
தலைமையகம்: United Nations Avenue, Gigiri, Nairobi, Kenya.
தொலைபேசி: (254 2) 621 234 or 520 602
ஃபெக்ஸ்: (254 2) 226 886 or 226 895
ஈ-மெயில்: cpiinfo@unep.org
இன்டர்நெட்: www.unep.org

## ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் (UNDP)

இதுவே ஐக்கிய நாடுகளினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் வேலைகளை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் பிரதான அமைப்பாகும். உலகளாவிய ரீதியில் செயற்படுவதாலும் வருடாந்தம் 2.3 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியைக் கையாளுவதாலும் இதுவே ஐக்கிய றாடுகள் அமைப்பினுள் மிகப்பெரிய அபிவிருத்தி உதவி வழங்கும் நிறுவனமாக விளங்குகின்றது. சமநிலையான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு, நிறுவன மற்றும் மனிதவள ஆற்றல் விருத்திக்கான உதவிகளையும் கொள்கை ஆலோசனைகளையும் அது வழங்குகின்றது. உலகமயமாக்கலின் விளைவான சவால்களையும் வாய்ப்புக்களையும் எதிர்கொள்வதற்கு உதவி வளங்களை இயன்றளவு சிறந்த முறையில் பயன்படுத்தும் பொருட்டு அது அரசாங்க மற்றும் தனியார் துறைப் பங்காளிகளுடன் இணைந்து செயற்படுகின்றது.

UNDPயின் ஆதரவில் செயற்படும் விசேட நிதியங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுள் பின்வருனவும் அடங்கும்:

- பெண்களுக்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் **(UNIFEM)**
- ஐக்கிய நாடுகள் தொண்டர் நிகழ்ச்சித் திட்டம் **(UNV)**
- ஐக்கிய நாடுகள் மூலதன அபிவிருத்தி நிதியம் **(UNCDF)**

வளர்முக மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளின் பிரதிநிதிகளான 36 பேரைக் கொண்ட நிறைவேற்றுச் சபையினால் **UNDP** நிர்வகிக்கப்படுகின்றது. **UNDP** வெளியிடும் முக்கிய பிரசுரங்களுள் மனித அபிவிருத்தி அறிக்கை ***(Human Development Report)*** என்ற வருடாந்தப் பிரசுரமும் ஒன்றாகும்.

நிர்வாகி: **Mr. Mark Malloch Brown (United Kingdom)**
தலைமையகம்: **1 UN Plaza, New York, NY 10017, USA.**
தொலைபேசி: **(1 212) 906 5000**
ஃபெக்ஸ்: **(1 212) 906 5001**
ஈ-மெயில்: **mark.malloch.brown@undp.org**
இன்டர்நெட்: **www.undp.org**

## பெண்களுக்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் (UNIFEM)

பெண்களின் உரிமைகளையும் ஆண்-பெண் சமத்துவத்தையும் ஊக்குவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு இதுவாகும். அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிடுவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் சகல மட்டங்களிலும் பெண்கள் பங்கேற்பதை உறுதிப்படுத்த இது பாடுபடுகின்றது. தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியிலான சகல முக்கிய பிரச்சினைகளிலும் பெண்களின் விசேட தேவைகள், அக்கறைகள் என்பவற்றில் கவனம் செலுத்த ஐக்கிய நாட்டு அமைப்பிற்குள் இந்த நிதியம் உந்துசக்தியாக விளங்குகிறது.

1976 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்த நிதியம், வளர்முக நாடுகளில் பெண்களின் அரசியல், பொருளாதார, சமூக மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கும் வேலைத்திட்டங்களுக்கும் உதவியளித்து வருகிறது. **UNDP**யின் ஆதரவில் சுயாதீனமாகச் செயற்படும் இந்த நிதியம் சகல பிராந்தியங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆலோசனைக் குழுவுக்கும் **UNDP**யின் நிறைவேற்றுச் சபைக்கும் அறிக்கை சமர்ப்பிக்கக் கடமைப்பட்டுள்ளது. பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் 12 நிகழ்ச்சித்திட்ட ஆலோசகர்கள் இந்த நிதியத்தைப் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள். நிதியத்தின் வருடாந்தச் செலவினம் சுமார் 20 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

பணிப்பாளர்: **Ms. Noeleen Heyzer (Singapore)**
தலைமையகம்: **304 East 45th Street, 6th floor, New York, NY 10017, USA.**
தொலைபேசி: **(1 212) 906 6400**
ஃபெக்ஸ்: **(1 212) 906 6705**
ஈ-மெயில்: **unifem@undp.org**
இன்டர்நெட்: **www.unifem.undp.org**

## ஐக்கிய நாட்டுத் தொண்டர்கள் (UNV)

ஐ.நா. தொண்டர்கள் அமைப்பு 1970 ஆம் ஆண்டில் பொதுச்சபையினால் ஏற்படுத்தப்பட்டது. அபிவிருத்தி ஒத்துழைப்புத் துறையில் ஒரு செயற்பாட்டுத் திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு ஐக்கிய நாடுகளின் உப உறுப்பாண்மைகளில் ஒன்றாகும். சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், மனிதாபிமான உதவித் திட்டங்கள், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக ஊக்குவிப்புத் திட்டங்கள் என்பவற்றிற்கு நடுத்தர மட்டத்திலுள்ள தொழில் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொடுப்பது இந்த அமைப்பின் பணியாகும். உலகெங்குமுள்ள UNDP அலுவலகங்கள் ஊடாகச் செயற்படும் இந்த அமைப்பு UNDP/UNFPA நிறைவேற்றுச் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கக் கடமைப்பட்டுள்ளது.

பொதுவாக, ஒவ்வொரு ஆண்டிலும் 140க்கு மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் 4000 ஐ.நா. தொண்டர்கள் தொழில் நிபுணர்களாகவும் வெளிக்கள உத்தியோகத்தர்களாகவும் ஆலோசகர்களாகவும் சேவையாற்றுகின்றனர். இவர்களில் மூன்றிலிரண்டு பங்கினர் வளர்முக நாடுகளைச் சேர்ந்தவர்கள். ஐ.நா. தொண்டர்கள் சேவை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இதுவரை 20,000க்கும் அதிகமானோர் இச் சேவையை வழங்கியுள்ளனர்.

ஐ.நா. தொண்டராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குப் பட்டப்படிப்புத் தகைமையும் பல வருட தொழில் அனுபவமும் அவசியம். வேலை ஒப்பந்த காலம் பொதுவாக இரண்டு வருடங்களாகும். ஐ.நா. தொண்டர்களுக்கு சுமாரான வாழ்க்கைச் செலவுப் படி ஒன்று மாதாந்தம் வழங்கப்படுகிறது. ஐ.நா. தொண்டர் சேவை அமைப்புக்கான நிதியை ஐ.நா. அபிவிருத்தித் திட்டமும் பங்காளி ஐ.நா. முகவராண்மைகளும் விசேட தொண்டர் நிதியத்திற்கு நன்கொடை செலுத்தும் நாடுகளும் வழங்குகின்றன.

நிறைவேற்று இணைப்பதிகாரி: **Dr. Sharon Capeling-Alakija (Canada)**
தலைமையகம்: **Postfach 260 111, D-53153 Bonn, Germany.**
தொலைபேசி: **(49 228) 815 2000**
ஃபெக்ஸ்: **(49 228) 815 2001**
ஈ-மெயில்: **enquiry@unv.org**
இன்டர்நெட்: **www.unv.org**

## ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (UNFPA)

பொதுச்சபையின் முயற்சியினால் 1969 ஆம் ஆண்டு செயற்படத் தொடங்கிய ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியமே வளர்முக நாடுகளுக்கும் பொருளாதார மாற்றத்திற்கு உள்ளாகிவரும் நாடுகளுக்கும் சனத்தொகை விவகாரங்களில் உதவி வழங்கும் மிகப்பெரிய சர்வதேச அமைப்பாகும். இனப்பெருக்கச் சௌக்கியம், குடும்பத் திட்டச் சேவைகள் ஆகியவற்றை முன்னேற்றுவதற்கும் அபிவிருத்திக்கு வழிகோலக்கூடிய சனத்தொகைக் கொள்கைகளை வகுப்பதற்கும் இந்த நிதியம் உதவுகின்றது. அந்தந்த நாடுகளின் வேண்டுதலுக்கு அமையவே இந்த உதவி வழங்கப்படுகின்றது. பொதுச்சபையின் உப உறுப்பாண்மைகளில் ஒன்றாகவே UNFPA செயற்படுகிறது. UNDPயின் ஆளுநர் சபையே அதன் ஆளுநர் சபையாகவும் விளங்குகின்றது.

இந்த அமைப்புக்கான நிதி முழுவதும் சுய விருப்பின் பேரில் நாடுகள் வழங்கும் பங்களிப்புக்கள் மூலமே பெறப்படுகின்றது. அவ்வாறு வருடாந்தம் கிடைக்கும் தொகை சுமார் 250 மில்லியன் அமெரிக்க டொலராகும். இனப்பெருக்கச் சௌக்கியத் துறை, குடும்பத் திட்ட நடவடிக்கைகள், பிரசவத் தாய்மாரின் உடல்நலம், HIV/AIDS எதிர்ப்பு நடவடிக்கைகள் முதலியவற்றிற்கே மூன்றிலிரண்டு பங்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. சனத்தொகையும் அபிவிருத்தியும் தொடர்புடைய தகவல்களைப் பரப்புரை செய்வதற்கும், சனத்தொகைக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளை ஊக்குவிப்பதற்கும் சனத்தொகை நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரை முயற்சிகளுக்கும் எஞ்சிய தொகை செலவிடப்படுகின்றது. UNFPA 905 அலுவலர்களைக் கொண்டுள்ளது.

நிறைவேற்றுப் பணிப்பாளர்: Ms. Thoraya Obaid (Saudi Arabia)
தலைமையகம்: 220 East 42nd Street, New York, NY 10017, USA.
தொலைபேசி: (1 212) 297 5000
ஃபெக்ஸ்: (1 212) 370 0201
ஈ-மெயில்: hq@unfpa.org
இன்டர்நெட்: www.unfpa.org

## அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் அலுவலகம் (UNHCR)

உலகளாவிய ரீதியில் அகதிகளைப் பாதுகாப்பதற்கும் அகதிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கும் சர்வதேச முயற்சிகளை ஒன்றுதிரட்டி முன்னெடுத்துச் செல்வதற்காக 1950 ஆம் ஆண்டில் பொதுச்சபையினால் ஏற்படுத்தப்பட்டதே இந்த அமைப்பாகும். இதுவரை, UNHCR சுமார் 50 மில்லியன் அகதிகளுக்கு உதவியுள்ளது. 1954 இலும் 1981 இலும் அதற்கு நொபேல் சமாதானப் பரிசுகள் வழங்கப்பட்டன.

UNITED NATIONS

# The UNITED

## PRINCIPAL ORGANS OF

### INTERNATIONAL COURT OF JUSTICE

### SECURITY COUNCIL

- Military Staff Committee
- Standing Committee and ad hoc bodies
- International Criminal Tribunal for the Former Yugoslavia
- International Criminal Tribunal for Rwanda
- UN Monitoring, Verification and Inspection Commission (Iraq)
- United Nations Compensation Commission
- Peacekeeping Operations and Missions

### GENERAL ASSEMBLY

- Main committees
- Other sessional committees
- Standing committees and ad hoc bodies
- Other subsidiary organs

## PROGRAMMES AND FUNDS

**UNCTAD**
United Nations Conference on Trade and Development

**ITC**
International Trade Centre (UNCTAD/WTO)

**UNDCP**
United Nations Drug Control Programme

**UNEP**
United Nations Environment Programme

**UNHSP**
United Nations Human Settlements Programme (UN-Habitat)

**UNDP**
United Nations Development Programme

**UNIFEM**
United Nations Development Fund for Women

**UNV**
United Nations Volunteers

**UNFPA**
United Nations Population Fund

**UNHCR**
Office of the United Nations High Commissioner for Refugees

**UNICEF**
United Nations Children's Fund

**WFP**
World Food Programme

**UNRWA** **
United Nations Relief and Works Agency for Palestine Refugees in the Near East

## OTHER UN ENTITIES

**OHCHR**
Office of the United Nations High Commissioner for Human Rights

**UNOPS**
United Nations Office for Project Services

**UNU**
United Nations University

**UNSSC**
United Nations System Staff College

## RESEARCH AND TRAINING INSTITUTES

**INSTRAW**
International Research and Training Institute for the Advancement of Womem

**UNITAR**
United Nations Institute for Training and Research

**UNIDIR** **
United Nations Institute for Disarmament Research

**UNICRI**
United Nations Interregional Crime and Justice Research Institute

**UNRISD**
United Nations Research Institute for Social Development

* Automous organizations working with the United Nations and each other through the coordi machinery of the Economic and Social Council.

**Report only to the General Assembly.

# NATIONS system

T H E U N I T E D N A T I O N S

## ECONOMIC AND SOCIAL COUNCIL

### FUNCTIONAL COMMISSIONS

Commission for Social Development
Commission on Human Rights
Commission on Narcotic Drugs
Commission on Crime Prevention and Criminal Justice
Commission on Science and Technology for Development
Commision on Sustainable Development
Commission on the Status of Women
Commissio on Population and Development
Statistical Commissin

### REGIONAL COMMISSIONS

Economic Commission for Africa (ECA)
Economic Commission for Europe (ECE)
Economic Commission for Latin America and the Caribbean (ECLAC)
Economic and Social Commission for Asia and the Pacific (ESCAP)
Economic and Social Commission for Western Asia (ESCWA)

United Nations Forum on Forests

Sessional and Standing Committees
Expert, ad hoc and related bodies

### RELATED ORGANIZATIONS

**IAEA**
International Atomic Energy Agency

**WTO (trade)**
World Trade Organization

**WTO (tourism)**
World Tourism Organization

**CTBTO Prep.com**
PrepCom for the Nuclear-Test-Ban-Treaty Organization

**OPCW**
Organization for the Prohibition of Chemical Weapons

ating

## TRUSTEESHIP COUNCIL

### SPECIALIZED AGENCIES*

**ILO**
International Labour Organization

**FAO**
Food and Agrivulture Organization of the United Nations

**UNESCO**
United Nations Educational, Scientific and Cultural Organization

**WHO**
World Health Organization

**WORLD BANK GROUP**

- **IBRD** International Bank for Reconstruction and Development
- **IDA** International Development Association
- **IFC** International Finance Corporation
- **MIGA** Multilateral Investment Guarantee Agency
- **ICSID** International Centre for Settlement of Investment Disputes

**IMF**
International Monetary Fund

**ICAO**
International Civil Aviation Organization

**IMO**
International Maritime Organization

**ITU**
International Telecommunication Union

**UPU**
Universal Postal Union

**WMO**
World Meteorological Organization

**WIPO**
World Intellectual Property Organization

**IFAD**
International Fund for Agricultural Development

**UNIDO**
United Nations Industrial Development Organization

## SECRETARIAT

**OSG**
Office of the Secretary-General

**OIOS**
Office of Internal Oversight Services

**OLA**
Office of Legal Affairs

**DPA**
Department of Political Affairs

**DDA**
Department for Disarmament Affairs

**DPKO**
Department of Peacekeeping Operations

**OCHA**
Office for the Coordiantion of Humanitarian Affairs

**DESA**
Department of Economic and Social Affairs

**DGAACS**
Department of General Assembly Affairs and Conference Services

**DPI**
Department of Public Information

**DM**
Department of Management

**OIP**
Office of the Iarq Programme

**UNSECOORD**
Office of the United Nations Security Coordinator

**ODCCP**
Office for Drug Control and Crime Prevention

**UNOG**
UN Office at Geneva

**UNOV**
UN Office at Nienna

**UNON**
UN Office at Nairobi

புகலிடம் கோருவதற்கான உரிமை உட்பட அகதிகளுக்கு உள்ள சகல உரிமைகளையும் உறுதிப்படுத்துதல், எவரேனும் ஒருவர் ஏதேனுமொரு நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் பட்சத்தில் துன்புறுத்தலை எதிர்நோக்க நேரிடும் என்று கருதினால் அவர் அந்த நாட்டுக்கு வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்பப்படாதிருப்பதை உறுதிப்படுத்துதல் என்பனவே **UNHCR**இன் அதிமுக்கிய கடமைப் பொறுப்பாகும். இது "சர்வதேசப் பாதுகாப்பு" என்று பொதுவாக அழைக்கப்படும்.

அகதிகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகளை ஊக்குவித்தல், சர்வதேச சட்டங்களை அரசாங்கங்கள் எந்த அளவுக்கு மதித்து நடக்கின்றன என்பதை அவதானித்தல், தப்பியோடும் அகதிகளுக்கு உணவு, நீர், இருப்பிடம், மருத்துவ வசதி முதலிய உதவிகளை வழங்குதல் என்பனவும் இந்த அமைப்பு ஆற்றும் பணிகளாகும்.

தற்போது, 121 நாடுகளில் 281 அலுவலகங்களைக் கொண்டுள்ள இந்த அமைப்பில் 5,000க்கு அதிகமானோர் வேலை செய்கின்றனர். தாய்நாட்டை விட்டு வெளியேறியவர்கள், மீளக்குடியமர்த்தப்பட்டவர்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் என்ற வகையில் உலகெங்கும் 21.6 மில்லியன் மக்கள் **UNHCR**இன் கவனிப்பைப் பெற்றுவருகின்றனர். இந்த அமைப்பின் செயற்பாடுகளுக்கு 544 அரசாங்கச் சார்பற்ற அமைப்புக்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றன.

உயர் ஆணையாளரின் திட்டங்கள் யாவும் **UNHCR** நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்றன. இக் குழுவில் 57 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நிதியானது பெரும்பாலும் அரசாங்க மற்றும் தனியார் துறை நன்கொடைகள் மூலமே பெறப்படுகின்றது. மொத்தத் தொகையில் சுமார் 2% மட்டுமே வழமையான ஐ.நா. வரவு செலவுத் திட்டத்திலிருந்து வழங்கப்படுகிறது. இது நிர்வாகச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. 2000 ஆம் ஆண்டில் இந்த அமைப்பின் மொத்தச் செலவின ஒதுக்கீடு 965.2 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

அகதிகள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் கொள்கைகளையும் இடம்பெயர்ந்த ஏனைய மக்களையும் பற்றி எடுத்துக்கூறும் ***The State of the World's Refugees*** என்ற பிரசுரம் இரு ஆண்டுகளுக்கு ஒரு தடவை வெளியிடப்படுகிறது.

உயர் ஆணையாளர்: **Mr. Ruud Lubbers (The Netherland)**
தலைமையகம்: **94 Rue Montbrillant, Geneva, Switzerland.**
தொலைபேசி: **(41 22) 739 85 02**
ஃபெக்ஸ்: **(41 22) 739 73 14**
ஈ-மெயில்: **hqpi00@unhcr.ch**
இன்டர்நெட்: **www.unhcr.ch**

## ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF)

சிறுவர்களின் நல்வாழ்வுக்கு உகந்த இடமாக உலகை மாற்ற அரசாங்கங்கள், சமுதாயங்கள் மற்றும் குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு 1946 ஆம் ஆண்டில் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் மாத்திரம் சேவையாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரேயொரு ஐ.நா. அமைப்பு இதுவாகும். சிறுவர்களின் (18 வயதிற்கு உட்பட்டவர்கள்) உரிமைகளுக்காக பரிந்துரை செய்யும் பொறுப்பு அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்டச் சகல நாடுகளினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள *சிறுவர் உரிமைகள் ஒப்பந்தத்திற்கு* அமையவே UNICEF செயற்படுகின்றது.

161 நாடுகளிலும் பிரதேசங்களிலும் செயலாற்றும் UNICEF, சிறுவர்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான பலதரப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. சிறுபராய நோய்களையும் மரணத்தையும் தடுக்க உதவுதல், கர்ப்பம் தரித்தலையும் பிள்ளைப்பேற்றையும் பாதுகாப்பானதாக ஆக்க உதவுதல், பாரபட்சங்களை எதிர்த்துப் போராடுதல், சிறுவர் சிறுமியர் சமத்துவ அடிப்படையில் பாடசாலைக்குச் செல்வதை உறுதிப்படுத்துதல், இளவயதினரின் தொழில் ஆற்றல்களை விருத்திசெய்ய உதவுதல் முதலியன இந்த நடவடிக்கைகளுள் அடங்கும். அவசரகால வேளைகளில் பாடசாலைகளை மீளத் திறக்க உதவுதல், சிறுவர்களுக்கப் பாதுகாப்பான இடவசதியை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற காரியங்களிலும் UNICEF ஈடுபடுகின்றது.

UNICEF நிறைவேற்றுச் சபை 36 அங்கத்தவர்களைக் கொண்டது. கொள்கைகளை வகுத்தல், நிகழ்ச்சித் திட்டங்களை மீளாய்வு செய்தல், வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரித்தல் முதலியன அதன் பணிகளாகும். 1999 இல் ஊழியர்களின் எண்ணிக்கை சுமார் 5,600 ஆகவிருந்தது. இவர்களில் 86 சதவீதமானோர் வெளிக்கள அலுவலர்கள்.

அரசாங்க மற்றும் அரசாங்கச் சார்பற்ற துறைகளின் நன்கொடைகள் மூலமே UNICEF அமைப்புக்கான நிதி பெறப்படுகின்றது. 1999 இல் 1 பில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கப்பெற்றது. இதில் 36% அரசாங்கச் சார்பற்ற தனியார் துறை அமைப்புக்களிடம் இருந்து பெறப்பட்டதாகும். UNICEF அதன் மொத்தச் செலவினத்தில் 91 சதவீதத்தை உடல்நலம், கல்வி, போஷாக்கு, நீர் மற்றும் சுகாதார வசதிகள் தொடர்பான வேலைத் திட்டங்களுக்குச் செலவிடுகின்றது.

*The State of the World's Children, The Progress of Nations* என்பன UNICEFஇன் பிரதான வெளியீடுகளில் இரண்டாகும்.

1965 இல் UNICEFக்கு நோபேல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது.

நிறைவேற்றுப் பணிப்பாளர்: Ms. Carol Bellamy (USA)
தலைமையகம்: UNICEF House, United Nations, New York, NY 10017, USA.
தொலைபேசி: (1 212) 326 7000
ஃபெக்ஸ்: (1 212) 888 7465
ஈ-மெயில்: webmaster@unicef.org
இன்டர்நெட்: www.unicef.org

## உலக உணவுத் திட்டம் (WFP)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உணவு உதவிப் பிரிவான இது 1963 இல் ஏற்படுத்தப்பட்டது. வருடாந்தம் சுமார் 3 மில்லியன் மெட்ரிக் தொன் உணவு உதவியை விநியோகிக்கும் இதுவே உலகின் மிகப்பெரிய சர்வதேச உணவு உதவி அமைப்பாகும். வறுமையையும் பட்டினியையும் ஒழிக்க முயற்சி செய்வதன் மூலம் வளர்முக நாடுகளிலுள்ள வறிய மக்களுக்கு உதவும் பொறுப்பு இதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. யுத்தம் அல்லது இயற்கை அழிவுகளினால் மக்கள் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு அவசர உணவு உதவிகளை WFP வழங்குகிறது. இத்தகைய அவசரகால நிவாரண உதவிகளுக்கே அதன் மூலவளங்களில் 80 சதவீதம் பயன்படுத்தப்படுகின்றது.

WFP 5,000க்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டுள்ளது. இவர்களில் அரைவாசிக்கு அதிகமானோர் தற்காலிக அடிப்படையில் பணிபுரிகின்றனர். 1999 ஆம் ஆண்டில் 82 நாடுகளில் 89 மில்லியன் மக்களுக்கு 3.4 மில்லியன் மெட்ரிக் தொன் உணவு விநியோகிக்கப்பட்டது. இதற்கான மொத்தச் செலவினம் 1.5 பில்லியன் அமெரிக்க டொலராகும்.

உதவித் திட்டத்திற்குத் தேவைப்படும் உணவில் பெரும்பகுதி நன்கொடை வழங்கும் நாடுகளிடமிருந்து பெறப்படுகின்றன. எஞ்சியவை கொள்வனவு செய்யப்படுகின்றன. WFP அமைப்பே மற்றெந்த ஐ.நா. அமைப்பையும் விட அதிகமான பண்டங்களையும் சேவைகளையும் வளர்முக நாடுகளிடமிருந்து கொள்வனவு செய்கிறது. 1999 இன் கொள்வனவு 122 மில்லியன் டொலர் ஆகும்.

உணவு உதவிக் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்குமான 42 அங்கத்தவர் குழுவின் மூலமே WFP நிர்வகிக்கப்படுகின்றது. அங்கத்தவர்களில் அரைப்பங்கினர் ECOSOC அமைப்பினாலும் மற்றைய அரைப்பங்கினர் FAO அமைப்பினாலும் நியமிக்கப்படுகின்றனர். குழு ஆண்டுக்கு இரு தடவைகள் கூடுகின்றது.

நிறைவேற்றுப் பணிப்பாளர்: Mr. James T. Morris (USA)
தலைமையகம்: Via Cesare Giulio Viola, 68/70, 00148 Rome, Italy.
தொலைபேசி: (39 06) 6513-1
ஃபெக்ஸ்: (39 06) 6590-632 / 637
ஈ-மெயில்: wpinfo@wfp.org
இன்டர்நெட்: www.wfp.org

## மத்திய கிழக்கிலுள்ள பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிவாரண மற்றும் வேலைகள் முகவராண்மை (UNRWA)

பலஸ்தீன அகதிகளுக்கான நிவாரண வேலைகளை மேற்கொள்ளும் பொருட்டு இந்த அமைப்பு 1949 ஆம் ஆண்டு பொதுச்சபையினால் ஏற்படுத்தப்பட்டது. பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படாத காரணத்தால், இவ்வமைப்பின் அதிகாரம் காலத்திற்குக் காலம் புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.

1948 ஆம் வருடம் இடம்பெற்ற அரபு-இஸ்ரேலிய யுத்தத்தின் விளைவாக வசிப்பிடங்களையும் தொழில்களையும் இழந்த சுமார் 750,000 பலஸ்தீன அகதிகளுக்கு அவசர நிவாரணம் வழங்கியமை UNRWA அமைப்பின் முதலாவது பெரும் பணியாகும். 2000 ஆம் ஆண்டு வரை, 3.7 மில்லியன் பதிவுசெய்யப்பட்ட பலஸ்தீன அகதிகளுக்கு சுகாதாரம், கல்வி, சமூக சேவை போன்ற துறைகளில் அத்தியாவசிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. சுமார் 1.2 மில்லியன் அகதிகள் ஜோர்தான், லெபனான். சிரியா ஆகிய நாடுகளிலும் மேற்குக்கரை மற்றும் காஸா பிரதேசங்களிலும் UNRWA அமைப்பின் ஆதரவுடன் நடத்தப்படும் 59 அகதி முகாம்களில் தங்கியுள்ளனர்.

UNRWA அதன் பிரதான அலுவலகங்களை காஸாவிலும் அம்மானிலும் கொண்டுள்ளது. UNRWA ஆணையாளர் நாயகம் நேரடியாகப் பொதுச்சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கிறார். அவருக்கு உதவியாகச் செயற்படும் ஆலோசனைக் குழுவில் பெல்ஜியம், எகிப்து, பிரான்ஸ், ஜப்பான், ஜோர்தான், லெபனான், சிரியா, துருக்கி, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

UNRWA 22,000க்கு அதிகமான பிரதேச ஊழியர்களைக் கொண்டுள்ளது. இவர்களில் அநேகமானோர் பலஸ்தீன அகதிகள். முக்கிய பதவிகளை வகிக்கும் சர்வதேச அலுவலர்கள் 98 பேர் உள்ளனர். வழமையான மற்றும் அவசரகாலச் செயற்பாடுகளுக்கான நிதி முழுவதும் நன்கொடைகளில் இருந்தே பெறப்படுகின்றது. வழமையான வரவு செலவுத் திட்டத் தொகை 2000 ஆம் ஆண்டில் 360 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. செலவினத்தில் 74 சதவீதம் கல்வி, சுகாதாரம், நிவாரணம் மற்றும் சமூக சேவை நடவடிக்கைகளுக்கே ஒதுக்கப்பட்டது.

ஆணையாளர் நாயகம்: Mr. Peter Hansen (Denmark)
தலைமையகம் (காஸா): Gamal Abdul Nasser Street, Gaza City.
தொலைபேசி: (972 7) 677 7333
ஃபெக்ஸ்: (972 7) 677 7555
தலைமையகம் (அம்மான்): Bayader Wadi Seer, P.O. Box 140157, Amman 11814, Jordan.
தொலைபேசி: (962 6) 582 6171/6
ஃபெக்ஸ்: (962 6) 582 6177
இன்டர்நெட்: www.unrwa.org

## மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஆணையாளரின் அலுவலகம் (OHCHR)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரியாகச் செயற்படும் பொருட்டு, மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஆணையாளர் என்ற ஒரு பதவியைப் பொதுச்சபை 1993 ஆம் ஆண்டில் ஏற்படுத்தியது. சகல மக்களினதும் சிவில், கலாசார, பொருளாதார, அரசியல் மற்றும் சமூக உரிமைகளை பாதுகாத்து ஊக்குவிக்கும் பொறுப்பு உயர் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர் இந்தப் பணியை OHCHR அலுவலகத்தின் மூலம் நிறைவேற்றுகிறார்.

இந்த அலுவலகம் பொதுச்சபை மற்றும் ஏனைய கொள்கை வகுப்பு அமைப்புக்களின் வேண்டுதலுக்கமைய மனித உரிமைகள் தொடர்பான அறிக்கைகளைத் தயாரிப்பதுடன் ஆய்வுகளையும் மேற்கொள்கிறது. மனித உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அது அரசாங்கங்களுடனும் சர்வதேச, பிராந்திய மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுடனும் ஒத்துழைக்கின்றது. மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா. நடவடிக்கைகளுக்கான செயலகமாகவும் அது விளங்குகின்றது.

இந்த அலுவலகம் சுமார் 200 அலுவலர்களைக் கொண்டிருப்பதுடன் மூன்று பிரிவுகளாகச் செயற்படுகின்றது. அவையாவன:

- *ஆய்வு மற்றும் அபிவிருத்தி உரிமைப் பிரிவு* - இது மனித உரிமைப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வுகளை நடத்துவதுடன் அபிவிருத்திக்கான உரிமையைப் பெற்றுக்கொடுக்கும் உபாயங்களை வகுத்து மேற்பார்வை செய்கின்றது.
- *நடவடிக்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவு* - இது மனித உரிமை விவகாரங்களில் நாடுகளுக்குத் தொழில்நுட்ப உதவி வழங்குவதுடன் உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான வசதிகளை (விசேட தொடர்பாளர்கள், செயற்குழுக்கள்) செய்து கொடுக்கின்றது. மனித உரிமைகள் சம்பந்தமான வெளிக்கள நடவடிக்கைகளுக்கான பயிற்சியையும் இது வழங்குகின்றது.

* *ஆதாரச் சேவைகள் பிரிவு* - இது மனித உரிமைகள் ஆணைக்குழு, உடன்படிக்கை அமைப்புக்கள் போன்ற ஐ.நா. மனித உரிமை அமைப்புக்களுக்கு உதவி வழங்குகின்றது.

உயர் ஆணையாளர்: Mrs. Mary Robinson (Ireland)
தலைமையகம்: Palais Wilson, 1211 Geneva 10, Switzerland.
தொலைபேசி: (41 22) 917 3134
ஃபெக்ஸ்: (41 22) 917 02 45
ஈ-மெயில்: Secrt.hchr@unog.ch
இன்டர்நெட்: www.unhchr.ch

## மனித குடியிருப்புக்களுக்கான ஐ.நா. நிலையம் (HABITAT)

நிலைத்திருக்கக்கூடிய மனித குடியிருப்புக்களின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதே இந் நிலையத்தின் நோக்கமாகும். பரிந்துரை செய்தல், கொள்கை வகுத்தல், வசதிகளைக் கட்டியெழுப்புதல், அறிவூட்டுதல், அரசாங்கங்களுக்கும் சிவில் சமூகங்களுக்கும் இடையே ஒத்துழைப்பைப் பலப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இந்தப் பணி செய்யப்படுகின்றது.

1978 இல் ஏற்படுத்தப்பட்ட இந்த நிலையமே மனித குடியிருப்புக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பிரதான ஐ.நா. அமைப்பாகும். இது இரண்டு முக்கிய விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது. அவையாவன:

* சகலருக்கும் முறையான இருப்பிட வசதி
* நிலைத்திருக்கக்கூடிய நகர அபிவிருத்தி

HABITAT நிலையம் அரசாங்கங்களுக்கு மட்டுமன்றி உள்ளூராட்சி மன்றங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், தனியார்துறை அமைப்புக்கள் ஆகியவற்றுக்கும் உதவி வழங்குகிறது அல்லது அவற்றுடன் இணைந்து செயற்படுகிறது. அதன் தொழில்நுட்ப வேலைத்திட்டங்கள் நகர்ப்புறச் சுற்றாடல் பாதுகாப்பு, நகர்ப்புற வறுமை ஒழிப்பு, அழிவுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் புனரமைப்பு, நீர் முகாமை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்தவையாகும்.

உலகரீதியாக மனித குடியிருப்புக்களின் நிலைமையை எடுத்துக்கூறும் *Global Report on Human Settlements* என்ற அறிக்கையை HABITAT வெளியிடுகின்றது.

இந்த நிலையத்தை நிர்வகிக்கும் 58 அங்கத்தவர்களைக் கொண்ட மனித குடியிருப்புக்கள் ஆணைக்குழு இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை கூடுகின்றது. HABITAT நிலையத்தில் 240 பேர் வேலை செய்கின்றனர். 1998-1999 ஆண்டுகாலப்பகுதியில் இந் நிலையத்தின் செலவினம் சுமார் 160 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

நிறைவேற்றுப் பணிப்பாளர்: Ms.Anna Kajumulo Tibaijuka (Tanzania)
தலைமையகம்: United Nations Avenue, Gigiri, Nairobi, Kenya.
தொலைபேசி: (254 2) 621 234
ஃபெக்ஸ்: (254 2) 624 266/7
ஈ-மெயில்: habitat@unchs.org
இன்டர்நெட்: www.unchs.org

## வேலைத்திட்டச் சேவைகளுக்கான ஐ.நா. அலுவலகம் (UNOPS)

வளர்முக நாடுகளும் பொருளாதார மாற்றத்திற்கு உள்ளாகிவரும் நாடுகளும் சமாதானம், சமூக உறுதிப்பாடு, பொருளாதார வளர்ச்சி, தொடர்ச்சியான அபிவிருத்தி முதலியவற்றிற்காக மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு உதவும் பொருட்டு வேலைத்திட்ட மூலவளங்களை நெறிப்படுத்துவது இந்த அலுவலகத்தின் கடமையாகும்.

ஒட்டுமொத்தமான வேலைத்திட்ட முகாமை தொடக்கம் தனியொரு விடயம் சார்ந்த ஆலோசனை ஈறாக பல்வேறு வழிகளில் UNOPS தனது சேவையை சர்வதேச சமூகத்திற்கு வழங்குகிறது. வெவ்வேறு நாடுகளின் வெவ்வேறு தேவைகளுக்கேற்ப முகாமைச் சேவைகளை வழங்குவது அதன் சிறப்பியல்பாகும். UNOPS பல்வேறு ஐ.நா. அமைப்புக்களுடனும் வளர்முக நாடுகள், உதவி வழங்கும் நாடுகள், சர்வதேச மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற அமைப்புக்கள் முதலியவற்றுடன் இணைந்து பணியாற்றுகிறது. வழங்கப்படும் சேவைகளுக்கான கட்டணத்தைக் கொண்டே அதன் செயற்பாட்டுச் செலவினம் ஈடுசெய்யப்படுகின்றது. வேலைத்திட்ட ஆளணியினர் உட்பட 1,100 ஊழியர்களை இந்த அமைப்பு கொண்டுள்ளது.

நிறைவேற்றுப் பணிப்பாளர்: Mr. Reinhart Helmke (Germany)
தலைமையகம்: 405 Lexington Avenue, New York, NY 10174, USA.
தொலைபேசி: (1 212) 457 4000
ஃபெக்ஸ்: (1 212) 457 4001
ஈ-மெயில்: unops.newyork@unops.org
இன்டர்நெட்: www.unops.org

## ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம் (UNU)

சமாதானம், முன்னேற்றம் ஆகிய ஐக்கிய நாட்டு இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக ஆராய்ச்சி, பட்டப் பின்படிப்புப் பயிற்சி, அறிவுப் பரப்புரை போன்றவற்றில் ஈடுபடும் சர்வதேசக் கல்விமான்களின் அமைப்பே ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம் ஆகும். பல்கலைக்கழகச் சாசனம் 1973 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1975 ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகம் செயற்படத் தொடங்கியது.

இப் பல்கலைக்கழகம் உலகின் பல்வேறு பகுதிகளிலும் 13 ஆராய்ச்சி, பயிற்சி நிலையங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கொண்டுள்ளது.

அரசாங்கங்கள், முகவராண்மைகள், நிறுவகங்கள் மற்றும் தனிப்பட்டவர்களின் நன்கொடைகளைக் கொண்டே இப் பல்கலைக்கழகம் இயங்குகின்றது. ஐ.நா. வரவு செலவுத் திட்டத்திலிருந்து எதுவித நிதியையும் இது பெறுவதில்லை. UNU 211 அலுவலர்களைக் கொண்டுள்ளது. 2000 ஆம் ஆண்டிற்கான அதன் செலவின ஒதுக்கீடு 35.9 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

ஆளுநர் சபை 24 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. அது வருடாந்தம் கூடுகின்றது.

வேந்தர்: Prof. Hans van Ginkel (The Netherlands)
தலைமையகம்: 53-70 Jingumae 5-Chome, Shibuka-Ku, Tokyo 150-8925, Japan.
தொலைபேசி: (81 3) 3499-2811
ஃபெக்ஸ்: (81 3) 3499-2828
ஈ-மெயில்: mbox@hq.unu.edu
இன்டர்நெட்: www.unu.edu

## பெண்களின் முன்னேற்றத்திற்கான சர்வதேச ஆராய்ச்சி, பயிற்சி நிலையம் (INSTRAW)

பெண்கள் தொடர்பான முதலாவது உலக மாநாட்டின் சிபாரிசுக்கு அமைய இந்த நிலையம் 1976இல் ஏற்படுத்தப்பட்டது. பெண்களின் முன்னேற்றத்திற்காக சர்வதேச மட்டத்தில் கொள்கை ஆய்வு மற்றும் பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளுதலும் ஊக்குவித்தலும், அபிவிருத்தித் திட்டங்களில் பெண்கள் தீவிரமாகவும் சம அடிப்படையிலும் பங்குகொள்வதை ஊக்குவித்தல், ஆண்-பெண் சமத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், ஆண்-பெண் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக உலகளாவிய அமைப்புக்களை ஏற்படுத்துதல் என்பன இந்த நிலையத்தின் பணிகளாகும்.

INSTRAW ஐ.நா.வின் சுயாதீன அமைப்புக்களில் ஒன்றாகும். இதன் நிர்வாகத்தை ஐ.நா. பொருளாதார-சமூகநலச் சபையினால் நியமிக்கப்படும் 11 அங்கத்தவர் கொண்ட நம்பிக்கைப் பொறுப்புச் சபை கவனிக்கின்றது. அங்கத்துவ நாடுகள், அரசாங்கங்களுக்கிடையிலான அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனியார் துறையின் நன்கொடைகள் மூலமே நிதி பெறப்படுகின்றது. 1998-1999 காலப்பகுதிக்கான அதன் செலவின ஒதுக்கீடு 4.01 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

பணிப்பாளர்: Ms. Eleni Stamiris (Greece)
தலைமையகம்: Cesar Nicolas Penson 02-A, Santo Domingo, Dominican Republic.
தொலைபேசி: (1 809) 685-2111
ஃபெக்ஸ்: (1 809) 685 2117
ஈ-மெயில்: instraw.hq.sd@codetel.net.do
இன்டர்நெட்: www.un-instraw-gains.org

## ஐக்கிய நாடுகளின் பிராந்தியங்களுக்கு இடையிலான குற்றவியல் மற்றும் நீதி ஆராய்ச்சி நிலையம் (UNICRI)

குற்றவியல் மற்றும் நீதித் துறைகளில் ஆராய்ச்சி, பயிற்சி, தகவல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்த நிலையம் 1968 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. அதன் பணிகள் பின்வருமாறு:

- திட்டமிட்ட பாரிய குற்றச்செயல்கள் தொடர்பாக நம்பத்தக்க தகவல் அமைப்பை ஏற்படுத்தும் பொருட்டு, சம்பந்தப்பட்ட நாடுகளின் ஒத்துழைப்புடன் ஆய்வுகளை ஊக்குவித்தலும் ஆதரித்தலும்.
- சமூக-பொருளாதார அபிவிருத்தி, மனித உரிமைகளின் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு பங்களிப்புச் செய்யும் வகையில் குற்றத்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு உபாயங்களை வகுத்தல். கொள்கை வகுப்பு, அமுலாக்கம், மதிப்பீடு ஆகியவற்றிற்கு உதவியளித்தல்.
- பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் பயிற்சித் திட்டங்களை வகுத்து அமுல்செய்தல்.
- சர்வதேச குற்றவியல் ஆவண நிலையத்தின் ஊடாக தகவல் பரிவர்த்தனையை ஊக்குவித்தல்.

UNICRI நிலையத்திற்கான நிதியானது அங்கத்துவ நாடுகள், அரசாங்க மற்றும் அரசாங்கச் சார்பற்ற அமைப்புக்கள், கல்வித்துறை சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றின் நன்கொடைகளிலிருந்து பெறப்படுகின்றது.

பணிப்பாளர்: Mr. Alberto Bradanini (Italy)
தலைமையகம்: Viale Maestri del Lavoro 10, 10127 Turin, Italy.
தொலைபேசி: (39 011) 653 7111
ஃபெக்ஸ்: (39 011) 631 3368
ஈ-மெயில்: unicri@unicri.it
இன்டர்நெட்: www.unicri.it

## ஆராய்ச்சி, பயிற்சிக்கான ஐக்கிய நாடுகள் நிலையம் (UNITAR)

ஐக்கிய நாடுகளின் சுயாதீன அமைப்பான இது 1965 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. பயிற்சி மற்றும் ஆராய்ச்சிகள் மூலம் ஐக்கிய நாடுகளின் செயற்றிறனையும் பயன்விளைவையும் அதிகரிப்பதே இதன் நோக்கமாகும். 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ள நாடுகளுக்கு உதவும் வகையில் பயிற்சி அளித்தல், புதிய பயிற்சி முறைகளையிட்டு ஆய்வுகளை நடத்துதல், ஏனைய ஐ.நா. அமைப்புக்களுடனும் அரசாங்கங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுடனும் இணைந்து பயிற்சித் திட்டங்களையும் ஆற்றல் விருத்தித் திட்டங்களையும் வகுத்து நடைமுறைப்படுத்துதல் என்பன இதன் பணிகளுள் அடங்கும்.

**UNITAR** நம்பிக்கைப் பொறுப்புச் சபை ஒன்றினால் நிர்வகிக்கப்படுகின்றது. இதற்கான நிதியை அரசாங்கங்களும், அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களும் வழங்குகின்றன. இதன் இரு வருட வரவு செலவுத் திட்டத் தொகை 12.5. மில்லியன் அமெரிக்க டொலராகும். ஜெனீவாவில் உள்ள தலைமை அலுவலகமும் நியூயோர்க்கிலுள்ள அலுவலகமும் நடவடிக்கைகளை நெறிப்படுத்துகின்றன. மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 45 ஆகும்.

நிறைவேற்றுப் பணிப்பாளர்: **Mr. Marcel Boisard (Switzerland)**
தலைமையகம்: **International Environment House, Chemin des Anemones 11-13 1219 Chatelaine-Geneva, Switzerland.**
தொலைபேசி: **(41 22) 917 1234**
ஃபெக்ஸ்: **(41 22) 917 8047**
ஈ-மெயில்: **info@unitar.org**
இன்டர்நெட்: **www.unitar.org**

## சமூக அபிவிருத்திக்கான ஐ.நா. ஆராய்ச்சி நிலையம் (UNRISD)

அபிவிருத்தியைப் பாதிக்கும் பிரச்சினைகளின் சமூகத் தாற்பரியங்களை ஆராய்வதற்காக ஐக்கிய நாடுகளின் சுயாதீன அமைப்புக்களில் ஒன்றாக இந் நிலையம் 1963இல் ஏற்படுத்தப்பட்டது. அபிவிருத்திக் கொள்கைகளும் பொருளாதார, சமூக, சுற்றாடல் மாற்றங்களும் வெவ்வேறு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதையிட்டு அரசாங்கங்கள், அபிவிருத்தி முகவராண்மைகள், சமூக அடிமட்டத்திலுள்ள அமைப்புக்கள் ஆகியவற்றிற்கும் கல்விமான்களுக்கும் **UNRISD** தகவல் வழங்குகின்றது.

நன்கொடைகளைக் கொண்டே இந்த நிலையம் இயங்குகின்றது. 1999இல் டென்மார்க், பின்லாந்து, மெக்ஸிக்கோ, நெதர்லாந்து, நோர்வே, சுவீடன், சுவிற்சர்லாந்து, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளிடமிருந்து 2 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைத்தது.

இதனைத் தவிர, குறிப்பிட்ட வேலைத்திட்டங்களுக்கென வேறு அமைப்புக்களிடமிருந்தும் நன்கொடைகள் கிடைக்கின்றன. வரவு செலவுத் திட்டமும் ஆராய்ச்சித் திட்டங்களும் 11 அங்கத்தவர்களைக் கொண்ட சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றன.

பணிப்பாளர்: Mr. Thandika Mkandawire (Sweden)
தலைமையகம்: Palais des Nations, CH- 1211 Geneva 10, Switzerland.
தொலைபேசி: (41 22) 917 3020
ஃபெக்ஸ்: (41 22) 917 0650
ஈ-மெயில்: info@unrisd.org
இன்டர்நெட்: www.unrisd.org

## ஆயுதபரிகரண ஆராய்ச்சிக்கான ஐ. நா. நிலையம் (UNIDIR)

ஆயுதபரிகரணமும் அது தொடர்பான சர்வதேச பாதுகாப்புப் பிரச்சினைகளும் பற்றிச் சுயாதீன ஆய்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு 1980இல் ஏற்படுத்தப்பட்ட இந் நிலையம் தற்போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துகிறது:

ஆபிரிக்காவில் அமைதிகாக்கும் நடவடிக்கை, மேற்கு ஆபிரிக்காவில் சமாதானத்தை ஏற்படுத்துவதும் சிறிய ஆயுதங்கள் தொடர்பான பிரச்சினையும், லத்தின் அமெரிக்காவில் சிறிய ஆயுதங்கள், சிறிய ஆயுதங்கள் தொடர்பான கருத்தரங்குகள், மத்திய ஆசியாவில் சிறிய ஆயுதங்கள், அணுசக்தி உபாய ஆயுதங்கள், அணுப்பிளவு மூலகங்கள், ஆயுதக்கட்டுப்பாடு தொடர்பான கைந்நூல்.

**UNIDIR** சிறுதொகை நிரந்தர அலுவலர்களையே கொண்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்திற்காக குறுகியகால அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்படும் உத்தியோகத்தர்களிலேயே அது பெரும்பாலும் தங்கியுள்ளது. அரசாங்கங்களும் அரசாங்க மற்றும் தனியார் தாபனங்களும் அதற்கான நிதியை வழங்குகின்றன. வருடாந்த செலவின ஒதுக்கீடு சுமார் 1.1 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

பணிப்பாளர்: Dr. Patricia Lewis (United Kingdom)
தலைமையகம்: Palais des Nations, CH- 1211 Geneva 10, Switzerland.
தொலைபேசி: (41 22) 917 3186 or 917 4263
ஃபெக்ஸ்: (41 22) 917 0176
ஈ-மெயில்: plewis@unog.ch
இன்டர்நெட்: www.unog.ch/unidir

# விசேட முகவராண்மைகளும் ஏனைய அமைப்புக்களும்

## சர்வதேச தொழில் தாபனம் (ILO)

சர்வதேச தொழில் தாபனம் என்பது சமூக நீதியையும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித மற்றும் தொழில் உரிமைகளையும் பாதுகாத்து ஊக்குவிக்கின்ற விசேட முகவராண்மையாகும். 1919 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இது 1946 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் முதலாவது விசேட முகவராண்மையானது.

தொழில் மற்றும் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கு உதவக்கூடிய சர்வதேச கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்தல், இக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் தேசிய அதிகாரிகளுக்கு வழிகாட்டும் முகமாக சர்வதேச தொழில் தராதர நியமங்களை உருவாக்குதல், இத் துறையில் அரசாங்கங்களுக்குத் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல், பயிற்சி மற்றும் ஆராயச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பன சர்வதேச தொழில் தாபனத்தின் பிரதான பணிகளாகும்.

ILO ஒரு தனித்துவமான உலக அமைப்பாகும். ஏனெனில், அது தனது கொள்கைகளை வகுக்கும்போது அரசாங்கங்களின் கருத்துக்களுக்கு மட்டுமன்றி தொழிலாளர்கள் மற்றும் வேலைகொள்வோரின் கருத்துக்களுக்கும் சம அடிப்படையில் செவிமடுக்கிறது. ILO பின்வரும் மூன்று அமைப்புக்களைக் கொண்டுள்ளது:

- *சர்வதேச தொழில் பேரவை* - அங்கத்துவ நாடுகளின் அரசாங்கங்கள், வேலைகொள்வோர், தொழிலாளர்கள் ஆகிய முத்தரப்பினரின் பிரதிநிதிகளையும் கொண்ட இப் பேரவை ஒவ்வொரு வருடமும் கூடுகின்றது. சர்வதேச தொழில் தராதரங்களை நிர்ணயிப்பதும் முக்கிய தொழில் பிரச்சினைகளை ஆராய்வதும் இப் பேரவையே.
- *ஆளுநர் சபை*- இது ஆண்டுக்கு இரு தடவைகள் கூடுகின்றது. செயற்பாடுகளை நெறிப்படுத்துதல், நிகழ்ச்சித் திட்டங்களையும் வரவு செலவுத் திட்டத்தையும் தயாரித்தல், ILO நியமங்கள் அனுசரிக்கப்படாத சந்தர்ப்பங்களையிட்டு விசாரணை நடத்துதல் என்பன இதன் பணிகளாகும்.
- *சர்வதேச தொழில் அலுவலகம்* - இதுவே ILO அமைப்பின் நிரந்தர செயலகமாகும்.

இத்தாலி, ரியூரின் நகரிலுள்ள சர்வதேச பயிற்சி நிலையத்தில் கல்வி மற்றும் பயிற்சிக்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. தொழில் ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம் ஒன்றையும் ILO நடத்துகின்றது.

ILO 50 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய 1969 ஆம் ஆண்டில் அதற்கு நொபேல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது.
ILO தலைமை அலுவலகத்திலும் உலகெங்குமுள்ள அதன் 40 வெளிக்கள அலுவலகங்களிலும் மொத்தம் 2,250 பேர் வரையில் வேலை செய்கின்றனர். 2000-2001 காலப்பகுதிக்கான அதன் வரவு செலவுத் திட்டத் தொகை சுமார் 467 அமெரிக்க டொலராகும்.

பணிப்பாளர் நாயகம்: Mr. Juan Somavia (Chile)
தலைமையகம்: 4, route des Morillons, CH- 1211 Geneva, Switzerland.
தொலைபேசி: (41 22) 799 61 11
ஃபெக்ஸ்: (41 22) 798 86 85
ஈ-மெயில்: webinfo@hql.ilo.ch
இன்டர்நெட்: www.ilo.org

## உணவு விவசாய தாபனம் (FAO)

இதுவே கிராம அபிவிருத்தி சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் அமைப்பினுள் செயற்பட்டுவரும் பிரதான தாபனமாகும். விவசாய அபிவிருத்தியை ஊக்குவித்தல், போஷாக்கு நிலையை மேம்படுத்துதல், சகலருக்கும் சகல வேளைகளிலும் ஆரோக்கிய வாழ்வுக்கு அவசியமான உணவு கிடைப்பதை உறுதிப்படுத்த முயற்சி செய்தல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் வறுமையையும் பசியையும் போக்குவதற்கு அது பாடுபடுகின்றது. கியுபெக் நகரில் 1945 ஒக்டோபர் 15 ஆம் திகதி நடைபெற்ற மாநாடு ஒன்றிலேயே FAO ஏற்படுத்தப்பட்டது. அதன் காரணமாக அத் திகதி உலக உணவு தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

அரசாங்கங்களுக்கு அபிவிருத்தி உதவிகளையும் கொள்கை மற்றும் திட்டமிடல் சார்ந்த ஆலோசனைகளையும் வழங்குதல், தகவல்களைச் சேகரித்துப் பகுப்பாய்வு செய்து வழங்குதல், உணவு மற்றும் விவசாயம் தொடர்பான பிரச்சினைகளை விவாதிப்பதற்கான அரங்கமாக விளங்குதல் என்பன FAO ஆற்றும் பிரதான பணிகளாகும். அவசர நெருக்கடி வேளைகளுக்கு முகங்கொடுப்பதற்காக, விசேட நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அது உணவு உதவிகளை வழங்குகிறது. எந்தவொரு வேளையிலும் சராசரியாக 1,800 வெளிக்கள வேலைத்திட்டங்களில் அது ஈடுபட்டுள்ளது. இத்தகைய வேலைத்திட்டங்களுக்கென நன்கொடை வழங்கும் நாடுகளிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் ஆண்டுதோறும் 300 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமான தொகை பெறப்படுகின்றது.

அங்கத்துவ நாடுகளின் பேரவை உணவு விவசாய தாபனத்தை நெறிப்படுத்துகின்றது. இப் பேரவை இரு வருடங்களுக்கு ஒரு தடவை கூடுகின்றது. பேரவையினால் தெரிவுசெய்யப்படும் 49 அங்கத்தவர்களைக் கொண்ட ஆளுநர் சபையே பேரவையின் அமர்வுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நிர்வாகத்தைக் கவனிக்கின்றது.

2000-2001 காலப்பகுதிக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு 650 மில்லியன் அமெரிக்க டொலராகும். FAO தலைமை அலுவலகத்திலும் உலகெங்குமுள்ள அதன் வெளிக்கள அலுவலகங்களிலும் மொத்தம் 4,034 பேர் வேலை செய்கின்றனர்.

பணிப்பாளர் நாயகம்: Dr. Jacques Diouf (Senegal)
தலைமையகம்: Viale delle Terme di Caracalla, 00100 Rome, Italy.
தொலைபேசி: (39 06) 57051
ஃபெக்ஸ்: (39 06) 5705 3152
ஈ-மெயில்: gii-registry@fao.org
இன்டர்நெட்: www.fao.org

## ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார தாபனம் (UNESCO)

மனிதகுலத்தின் கல்வியறிவு மற்றும் ஒழுக்கநெறி ஒருமைப்பாட்டின் அடிப்படையில் நிலையான உலக சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் இந்த அமைப்பு 1946 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

சமாதான கலாசாரம், மனிதப் பண்பின் அபிவிருத்தி, நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி என்பனவே UNESCO நிகழ்ச்சித் திட்டங்களின் குறிக்கோள்களாகும். அனைவருக்கும் கல்வி என்ற இலக்கை அடைதல், சர்வதேச விஞ்ஞானத் திட்டங்கள் மூலம் சுற்றாடல் ஆய்வுகளை ஊக்குவித்தல், வெவ்வேறு கலாசாரங்களின் வெளிப்பாடுகளை ஆதரித்தல், உலகிலுள்ள இயற்கை மற்றும் கலாசாரச் சின்னங்களைப் பேணிப் பாதுகாத்தல், சுதந்திரமான தகவல் பரிவர்த்தனையையும் பத்திரிகைச் சுதந்திரத்தையும் ஊக்குவித்தல், வளர்முக நாடுகளின் தொடர்புத்துறை வசதிகளை விருத்திசெய்தல் என்பவற்றில் கவனம் செலுத்தப்படுகின்றது. UNESCOக்கு ஆதரவாக உலகெங்கும் 178 தேசிய ஆணைக்குழுக்கள், சுமார் 5,000 சங்கங்கள், நிலையங்கள், கழகங்கள் என்பன இயங்கி வருகின்றன. 588க்கு மேற்பட்ட அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் நிறுவகங்களுடனும் சர்வதேச மற்றும் பிராந்திய வலையமைப்புக்களுடனும் UNESCO ஒத்துழைப்பை மேற்கொண்டு வருகிறது.

UNESCOவின் ஆளுநர் சபை சகல ஐ.நா. அங்கத்துவ நாடுகளும் இடம்பெறும் பொதுப் பேரவையாகும். அது இரு வருடங்களுக்கு ஒரு தடவை கூடுகின்றது. பேரவையினால் தெரிவுசெய்யப்படும் 58 உறுப்பினர்களைக் கொண்ட நிறைவேற்றுச் சபையே நிகழ்ச்சித் திட்டங்களை மேற்பார்வை செய்கின்றது.

UNESCO 2,000 ஊழியர்களைக் கொண்டுள்ளது. 2000-2001 காலப்பகுதிக்கான அதன் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு 544 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

பணிப்பாளர்நாயகம்: Mr. Koichiro Matsuura (Japan)
தலைமையகம்: 7 Palace de Fontenoy, 75352 Paris 07-SP, France.
தொலைபேசி: (33 1) 4568-1000
ஃபெக்ஸ்: (33 1) 4567-1690
ஈ-மெயில்: info@unesco.org
இன்டர்நெட்: www.unesco.org

## உலக சுகாதார தாபனம் (WHO)

உடல்நலத் துறையில் நாடுகளுக்கிடையே தொழில்நுட்ப ஒத்துழைப்பை வளர்ப்பதற்காகவும் நோய்க் கட்டுப்பாடு மற்றும் நோய் ஒழிப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்காகவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காகவும் உலக சுகாதார தாபனம் 1948இல் ஏற்படுத்தப்பட்டது. இதன் பணிகள் பின்வருமாறு:

- குறிப்பாக வறிய மற்றும் வசதி குறைந்த மக்கள் மத்தியில் மரண விகிதம், நோய்கள், இயலாமை முதலியவற்றைக் குறைக்கப் பாடுபடுதல்.
- சுற்றாடல், பொருளாதார, சமூக மற்றும் பழக்கவழக்க காரணங்களினால் ஏற்படும் நோய் இடர்களைக் குறைத்து ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவித்தல்.
- மக்களின் தேவைக்கேற்ற மருத்துவ வசதிகளை நியாயமான கட்டணத்தில் வழங்கக்கூடிய சமத்துவமான, பயனுள்ள சுகாதார அமைப்பு முறைகளை விருத்திசெய்தல்.
- உடல்நலத்துறைக் கொள்கைகளையும் நிறுவன ரீதியான சூழலையும் உருவாக்குதல். சமூக, பொருளாதார, சுற்றாடல் மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளில் உடல்நல அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

உலக சுகாதாரப் பேரவையே இதன் ஆளுநர் சபையாகும். 191 அங்கத்துவ நாடுகளும் இடம்பெறும் இப் பேரவை வருடாந்தம் கூடுகின்றது. பேரவையின் கொள்கைகளும் தீர்மானங்களும் அரசாங்கங்களினால் நியமிக்கப்படும் 32 சுகாதார நிபுணர்களைக் கொண்ட நிறைவேற்றுச் சபையினால் அமுல்செய்யப்படுகின்றன. இச் சபை வருடத்திற்கு இரு தடவைகள் கூடுகின்றது.

WHO பிராந்திய அலுவலகங்கள் பிறஸவீல், கொங்கோ (தற்காலிகமாக ஹறாரே, ஸிம்பாப்வேயில்); வொஷிங்டன் DC, ஐக்கிய அமெரிக்கா; கைரோ, எகிப்து; கொப்பன்ஹேகன், டென்மார்க்; புதுடில்லி, இந்தியா; மனிலா, பிலிப்பீன்ஸ் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

உலக சுகாதார தாபனம் சுமார் 3,800 ஊழியர்களைக் கொண்டுள்ளது. 2000-2001 காலப்பகுதிக்கான அதன் நிதி ஒதுக்கீடு 842 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

பணிப்பாளர்நாயகம்: Dr. Gro Harlem Brundtland (Norway)
தலைமையகம்: 20 Avenue Appia, CH-1211 Geneva 27, Switzerland.
தொலைபேசி: (41 22) 791 2111
ஃபெக்ஸ்: (41 22) 791 3111
ஈ-மெயில்: inf@who.int
இன்டர்நெட்: www.who.int

## உலக வங்கிக் குழு

உலக வங்கி என்பது ஐந்து நிறுவனங்கள் அடங்கிய குழுவாகும். *புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி* (இது 1945இல் அமைக்கப்பட்டது), *சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம்* (1956), *சர்வதேச அபிவிருத்திச் சங்கம்* (1960), *பல்தரப்பு முதலீட்டு உத்தரவாத முகவராண்மை* (1988), *முதலீட்டுப் பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கான சர்வதேச நிலையம்* (1966) என்பனவே இந்த நிறுவனங்களாகும்.

வறிய நாடுகளின் பொருளாதார நிலையைப் பலப்படுத்துவதன் மூலம் உலகில் வறுமையைத் தணிப்பதே இந்த நிறுவனங்கள் அனைத்தினதும் குறிக்கோளாகும். பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஊக்குவித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற அவை முயல்கின்றன.

உலக வங்கியின் ஆளுனர் சபையில் சகல அங்கத்துவ நாடுகளும் இடம்பெறுகின்றன. பொதுவான நடவடிக்கைகளின் நிர்வாகம் நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் சபை என்ற ஒரு சிறிய குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வங்கியின் தலைவரே இச் சபையின் தவிசாளராகவும் கடைமையாற்றுகிறார்.

உலக வங்கி சுமார் 11,000 ஊழியர்களைக் கொண்டுள்ளது. அதன் வருடாந்த நிர்வாகச் செலவின ஒதுக்கீடு சுமார் 1.4 பில்லியன் அமெரிக்க டொலராகும்.

உலக வங்கியின் பிரசுரங்களுள் *World Development Report* என்ற வருடாந்தப் வெளியீடு முக்கியமானது.

தலைவர்: Mr. James D. Wolfensohn (USA)
தலைமையகம்: 1818 H street NW, Washington, D.C. 204 33, USA.
தொலைபேசி: (1 202) 477 1234
ஃபெக்ஸ்: (1 202) 477 6391
ஈ-மெயில்: feedback@worldbank.org
இன்டர்நெட்: www.worldbank.org

## புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி (IBRD)

IBRDக்கான அமைப்பு விதிகள் 1944 ஆம் ஆண்டு பிறெட்டன் வூட்ஸ் மாநாட்டில் வரையப்பட்டன. 1946இல் வங்கி செயற்படத் தொடங்கியது. இந்த வங்கி நடுத்தர வருமானமுடைய நாடுகளுக்கும் கடனைத் திருப்பிச் செலுத்த வல்லமையுள்ள வறிய நாடுகளுக்கும் கடன் மற்றும் அபிவிருத்தி சார்ந்த உதவிகளை வழங்குகின்றது. வங்கி அலுவல்களில் ஒவ்வொரு அங்கத்துவ நாட்டினதும் வாக்களிப்புப் பலம் அந்த நாட்டின் மூலதனப் பங்களிப்பில், அதாவது நாட்டின் பொருளாதார வலிமையில், தங்கியுள்ளது.

சர்வதேச மூலதனச் சந்தைகளில் பிணைப் பத்திரங்களை விற்பதன் மூலமே வங்கிக்குத் தேவையான நிதியில் 90% பெறப்படுகின்றது. 1999 ஆம் நிதியாண்டில் வங்கி 29 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது. இதில் நிறுவன அமைப்பு, நிர்வாகம், பொருளியல் கொள்கை, சமூகப் பாதுகாப்பு என்பன உள்ளிட்ட சீராக்கல் கடன் 15.3 பில்லியன் டொலராகும். அரைவாசிக்கு மேற்பட்ட தொகை வறுமை ஒழிப்பு மற்றும் சமூகநலத்துறை நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்டது.

கல்வி, சுகாதாரம், போஷாக்கு, சமூகப் பாதுகாப்புப் போன்ற மனித அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட உதவி 7.3 பில்லியன் அமெரிக்க டொலராகும். இது மொத்தக் கடன் வழங்கலில் 25% ஆகும். மிக்சக்தி, எண்ணெய்யும் வாயுவும், கைத்தொழில், அகழ்வுத் தொழில், போக்குவரத்து, நகர அபிவிருத்தி, நீரும் பொதுச் சுகாதாரமும், நிதித்துறை ஆகியவற்றிலேயே கடன்கள் முதலீடு செய்யப்பட்டன.

## சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA)

IBRD வங்கியிடமிருந்து கடன் பெற முடியாத உலகின் மிக வறிய நாடுகளுக்கு IDA சலுகை அடிப்படையில் நிதியுதவி வழங்குகிறது. இதன் நிர்வாகத்திற்கு IBRD பொறுப்பாக உள்ளது.

IDA வழங்கும் கடன்கள் “கிறெடிற்ஸ்” எனப்படும். வருடாந்த தனிநபர் வருமானம் 895 அமெரிக்க டொலருக்குக் குறைவாகவுள்ள நாடுகளுக்கே இக் கடன் வழங்கப்படுகிறது. இக் கடனுக்கு வட்டி கிடையாது. நிர்வாகச் செலவுக்காக ஒரு சிறிய தொகை மட்டுமே அறவிடப்படும். கடனைத் திருப்பிச் செலுத்த 35 முதல் 40 ஆண்டுகால அவகாசம் வழங்கப்படுகிறது. முதல் பத்து வருடங்களில் மூலத்தொகையைத் திருப்பிச் செலுத்தத் தேவையில்லை.

IDA அமைப்புக்கான நிதியின் பெரும்பகுதியை அதன் அங்கத்தவர்களான செல்வந்த நாடுகளே வழங்குகின்றன. IBRD கடனைப் பெறும் சில நாடுகளும் நன்கொடைகளை வழங்குகின்றன.

மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை நிதியத்தை மீள்நிரப்பும்படி நன்கொடை வழங்கும் நாடுகள் கேட்கப்படுகின்றன. இதுவரை 12 தடவைகள் நிதியத்தின் மூலவளம் மீள்நிரப்பப்பட்டுள்ளது.

IDA வருடாந்தம் சுமார் 5 அல்லது 6 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்குகிறது. ஆரம்பக் கல்வி, அடிப்படைச் சுகாதார சேவைகள், நீர் விநியோகம் போன்ற வேலைத்திட்டங்களுக்காகவே இந்த உதவி பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது.

## சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC)

வளர்முக நாடுகளில் தனியார்துறை வேலைத்திட்டங்களுக்கு கடனும் நிதியுதவியும் வழங்கும் மிகப்பெரிய பல்தரப்பு அமைப்பு இதுவாகும். வளர்முக நாடுகளில் தனியார்துறை முதலீட்டாளர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களுக்கு நிதியும் ஆலோசனையும் வழங்குதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தனியார் முதலீடுகளுக்கும் சேமிப்புக்களுக்கும் உகந்த சூழலை ஏற்படுத்த அரசாங்கங்களுக்கு உதவுதல் என்பன இதன் பிரதான பணிகளாகும்.

அங்கத்துவ நாடுகளில் உற்பத்தித்துறை நிறுவனங்களின் வளர்ச்சியையும் செயற்றிறன் வாய்ந்த மூலதனச் சந்தைகளையும் இது ஊக்குவிக்கின்றது. சந்தை முதலீட்டாளர்களின் செயற்பாடுகளுக்கு ஏதேனும் விசேட பங்களிப்பை செலுத்த முடியுமென்று கருதும் பட்சத்தில் மாத்திரமே IFC முதலீட்டுத் திட்டத்தில் பங்கேற்கின்றது.

உலக வங்கிக் குழுவில் IFC ஒரு தனியான அமைப்பாகும். அதன் நிதிவளம் IBRDயின் நிதியிலிருந்து வேறுபட்டது. 1999 ஆம் நிதியாண்டில் 5.3 பில்லியன் அமெரிக்க டொலருக்கான 255 புதிய வேலைத்திட்டங்கள் IFC பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டன.

## பல்தரப்பு முதலீட்டு உத்தரவாத முகவராண்மை (MIGA)

வளர்முக நாடுகளில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பது இந்த அமைப்பின் நோக்கமாகும். நாணயப் பரிமாற்றம், சுவீகரிப்பு, யுத்தம், உள்நாட்டுக் கலகம் போன்ற வர்த்தகத்துறை சாராத இடர்களினால் வெளிநாட்டுத் தனியார் முதலீடுகளுக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களுக்கு எதிராகக் காப்புறுதி (உத்தரவாதம்) வழங்குவதன் மூலம் MIGA இதனைச் செய்கிறது. முதலீட்டு வாய்ப்புக்கள் பற்றி பிரசாரம் செய்ய விரும்பும் நாடுகளுக்கு அதற்கான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படுகின்றன.

MIGA முகவராண்மைக்கு அதன் 151 நாடுகளும் வழங்கும் மூலதனப் பங்களிப்பு 1 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாகும்.

1999 ஆம் ஆண்டில் சுமார் 850 மில்லியன் டொலர் மூலதன அதிகரிப்பை ஆளுநர் சபை அங்கீகரித்தது. செயற்பாட்டு மூலதனமாக மேலும் 150 மில்லியன் டொலரை உலக வங்கி வழங்கியது. MIGA வழங்கிய உத்தரவாதங்களின் பயனாக 69 வளர்முக நாடுகளிலும் இடைநிலை நாடுகளிலும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளாக 33 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## முதலீட்டுப் பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கான சர்வதேச நிலையம் (ICSID)

அரசாங்கங்களுக்கும் வெளிநாட்டுத் தனியார்துறை முதலீட்டாளர்களுக்கும் இடையே ஏதேனும் பிணக்குகள் தோன்றும்போது நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் அல்லது விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதன் மூலம் அப் பிணக்குகளுக்குத் தீர்வுகாண ICSID உதவி செய்கிறது. *அரசுகளுக்கும் வெளிநாட்டுப் பிரஜைகளுக்குமிடையிலான முதலீட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுதல் சம்பந்தமான 1966 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்திற்கு* அமையவே இந்த நிலையம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வொப்பந்தத்தை 131 நாடுகள் அங்கீகரித்துள்ளன. நிலையத்தின் உதவியை நாடுவது அவரவர் விருப்பமாகும். ஆனால், இருதரப்பினரும் பிரச்சினையை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் பொறுப்பை நிலையத்திடம் ஒப்படைத்த பின்னர் அதிலிருந்து வாபஸ் பெற முடியாது.

சுயாதீனமாகச் செயற்படும் இந் நிலையம் உலக வங்கியுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளது. வங்கியின் அங்கத்துவ நாடுகளே இதிலும் அங்கம் வகிக்கின்றன. இதன் நிர்வாக சபைக்கு உலக வங்கியின் தலைவரே தலைமை தாங்குகிறார். ஒப்பந்தத்தை அங்கீகரித்த சகல நாடுகளின் பிரதிநிதிகளும் சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

## சர்வதேச நாணய நிதியம் (IMF)

1944 ஆம் ஆண்டு பிறெட்டன் வூட்ஸ் மாநாட்டில் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச நாணய நிதியம் பின்வரும் பணிகளை ஆற்றுகின்றது:

- சர்வதேச நாணயத்துறை ஒத்துழைப்புக்களுக்கு வசதியளிக்கிறது.
- நாணயப் பரிவர்த்தனை விகிதத்தில் உறுதிநிலையையும் ஒழுங்கான பரிவர்த்தனை ஏற்பாடுகளையும் ஊக்குவிக்கின்றது.
- பல்தரப்புக் கொடுப்பனவு ஏற்பாடுகளைச் செய்துகொள்ளவும் வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாடுகளைப் போக்கவும் உதவுகின்றது.
- செல்மதி நிலுவைப் பிரச்சினையைச் சீர்செய்ய நிதியுதவி தேவைப்படும் நாடுகளுக்குத் தற்காலிக நிதியுதவி வழங்குதல்.
- IMF தனக்குத் தேவையான நிதியை 182 அங்கத்துவ நாடுகளின் பங்களிப்புக்களில் ("கோட்டாக்கள்") இருந்து பெற்றுக்கொள்கிறது.

தற்சமயம் அத் தொகை 210 "விசேட கடன் பெறும் உரிமைகள்" (அல்லது சுமார் 300 பில்லியன் அமெரிக்க டொலர்) ஆகவுள்ளது. நாடுகளின் பங்களிப்புக் "கோட்டாக்கள்" அவற்றின் பொருளாதார நிலைக்கேற்பத் தீர்மானிக்கப்படுகின்றன. அங்கத்துவ நாடுகளுக்கு "விசேட கடன் பெறும் உரிமைகள்" என்ற வகையில் சர்வதேச நிதிக் கையிருப்புக்களை ஒதுக்கீடு செய்ய IMFக்கு அதிகாரமுண்டு.

செல்மதி நிலுவைப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் நாடுகளுக்கு தற்காலிக கடன் வழங்குவதே IMF ஆற்றும் பிரதான நிதிச் சேவையாகும். இதற்குப் பிரதியுபகாரமாக, கடனைப் பெறும் அரசாங்கங்கள் தத்தமது நாடுகளில் பொருளாதாரப் பிரச்சினைக்குக் காரணமான துறைகளில் கொள்கைச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள இணங்குகின்றன. அங்கத்துவ நாடுகள் பெறக்கூடிய கடன் தொகை அவற்றின் "கோட்டா" அளவுக்களுக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. குறைந்த வருமானமுள்ள அங்கத்துவ நாடுகளுக்கு சலுகை அடிப்படையிலான உதவிகளையும் IMF வழங்குகின்றது.

ஆளுநர் சபையில் சகல அங்கத்துவ நாடுகளும் இடம்பெறுகின்றன. சபை வருடாந்தம் கூடுகின்றது. நிர்வாக அலுவல்கள் 24 உறுப்பினர்களைக் கொண்ட நிறைவேற்றுச் சபை ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. IMF சார்பில் 123 நாடுகளைச் சேர்ந்த சுமார் 2,700 பேர் பணியாற்றுகிறார்கள். இவர்களுக்குத் தலைமை தாங்கும் முகாமைப் பணிப்பாளரை நிறைவேற்றுச் சபை தெரிவுசெய்கின்றது. IMF நிர்வாகத்திற்கான வருடாந்த நிதி ஒதுக்கீடு சுமார் 650 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

*World Economic Outlook, International Capital Markets Report* போன்ற பிரசுரங்களை IMF வெளியிடுகிறது.

முகாமைப் பணிப்பாளர்: Mr. Horst Koehler (Germany)
தலைமையகம்: 700 19th Street NW, Washington, D.C. 20431, USA.
தொலைபேசி: (1 202) 623 7000
ஃபெக்ஸ்: (1 202) 623 4661
ஈ-மெயில்: publicaffairs@imf.org
இன்டர்நெட்: www.imf.int

## சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து தாபனம் (ICAO)

1944 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்த அமைப்பு விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பு, செயற்றிறன், ஒழுங்கமைவு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான சர்வதேச நியமங்களையும் பிரமாணங்களையும் வகுப்பதோடு, சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் அதன் 185 அங்கத்துவ நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான ஓர் ஊடகமாகவும் செயற்பட்டு வருகிறது.

சகல அங்கத்துவ நாடுகளுக்கும் இடம்பெறும் ஒரு பேரவையையும் அப் பேரவையினால் தெரிவுசெய்யப்படும் 33 அங்கத்தவர்கள் அடங்கிய ஒரு நிர்வாக சபையையும் ICAO கொண்டுள்ளது. பேரவையின் கூட்டம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவையாவது நடத்தப்படும். கொள்கை விடயங்களை அது தீர்மானிக்கிறது. பேரவையின் தீர்மானங்கள் நிர்வாக சபையினால் அமுல்செய்யப்படுகின்றன.

ICAO 793 ஊழியர்களைக் கொண்டுள்ளது. 2000 ஆம் ஆண்டுக்கான அதன் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு 52.6 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

சபையின் தலைவர்: Dr. Assad Kotaite (Lebanon)
செயலாளர் நாயகம்: Mr. R.C. Costa Pereira (Brazil)
தலைமையகம்: 999 University Street, Montreal, Quebec H3C 5H7, Canada.
தொலைபேசி: (1) (514) 954 8219
ஃபெக்ஸ்: (1) (514) 954 6077
ஈ-மெயில்: icaohq@icao.org
இன்டர்நெட்: www.icao.int

## சர்வதேச கடற்றுறை தாபனம் (IMO)

1959 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்த அமைப்பு சர்வதேச வர்த்தகக் கப்பற்போக்குவரத்தில் பாதுகாப்பை மேம்படுத்துவதிலும் கப்பல்களினால் சமுத்திரங்கள் மாசுபடுத்தப்படுவதைத் தடுப்பதிலும் ஈடுபட்டுள்ளது.

சர்வதேச கப்பற்போக்குவரத்துத் தொடர்பான தொழில்நுட்ப விடயங்களில் பிரமாணங்களையும் நடைமுறைகளையும் வகுத்துக்கொள்வதில் அரசாங்கங்களுக்கிடையிலான ஒத்துழைப்புக்கு உதவுதல், கப்பற்போக்குவரத்துத் தொடர்பாக மிகவுயர்ந்த பாதுகாப்பு நியமங்கள் உருவாக்கப்படுவதற்கு வசதியளித்தல், கப்பல்களினால் கடற் சூழல் மாசடைவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல் என்பன இந்த அமைப்பின் பிரதான பணிகளாகும். தற்சமயம் இத் துறையில் சுமார் 40 ஒப்பந்தங்களும் சுமார் 800 நெறிமுறை விதிகள், சிபாரிசுகள் என்பனவும் உலகளாவிய ரீதியில் நடைமுறையில் உள்ளன.

IMO 1983 ஆம் ஆண்டில் உலக கடற்றுறைப் பல்கலைக்கழகத்தை சுவீடன் நாட்டின் மல்மோ நகரில் ஏற்படுத்தியது. கப்பற்போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டுள்ள சிரேஷ்ட அதிகாரிகளுக்கு அங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 1989 ஆம் ஆண்டு மோல்டாவின் வலேற்றா நகரில் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச கடற்றுறைச் சட்ட நிலையம் சர்வதேச கடற்றுறைச் சட்டங்களில் சட்டத்தரணிகளுக்குப் பயிற்சி அளிக்கிறது.

அவ்வாறே, 1989 ஆம் ஆண்டு இத்தாலியின் ட்ரியெஸ்தே நகரில் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச கடற்றுறை கல்வி நிலையமும் விசேட குறுகியகாலப் பயிற்சிநெறிகளை நடத்துகின்றது.

சகல அங்கத்துவ நாடுகளுக்கும் இடம்பெறும் ஒரு பேரவையையும் அப் பேரவையினால் தெரிவுசெய்யப்படும் 32 அங்கத்தவர்கள் அடங்கிய ஒரு நிறைவேற்றுச் சபையையும் IMO கொண்டுள்ளது. பேரவை இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவையும் நிறைவேற்றுச் சபை ஆண்டுக்கு இரு தடவைகளும் கூடுகின்றன. IMO சுமார் 300 ஊழியர்களைக் கொண்டுள்ளது. 2000-2001 காலப்பகுதிக்கான அதன் நிதி ஒதுக்கீடு 56.3 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

செயலாளர் நாயகம்: **Mr. William A. O'Neil (Canada)**
தலைமையகம்: **4 Albert Embarkment, London SE1 7SR, England.**
தொலைபேசி: **(44 207) 735 76 11**
∴பெக்ஸ்: **(44 207) 587 32 10**
ஈ-மெயில்: **info@imo.org**
இன்டர்நெட்: **www.imo.org**

## சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU)

அரசாங்க மற்றும் தனியார்துறை நிறுவனங்களினால் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் தொலைத்தொடர்பு வலையமைப்புக்களுக்கும் சேவைகளுக்கும் இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் சர்வதேச அமைப்பு இதுவாகும். 1865 ஆம் ஆண்டு பரிஸ் நகரில் சர்வதேச தந்திச் சேவை ஒன்றியம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு 1934 ஆம் ஆண்டு பெயர் மாற்றத்தைப் பெற்றது. 1947இல் இது ஐ.நா. விசேட முகவராண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ITU** பின்வரும் மூன்று துறைகளில் கவனம் செலுத்துகின்றது:

- *தொழில்நுட்பத் துறை*- பொதுமக்களுக்குச் சிறந்த தொலைத்தொடர்பு சேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக, செயற்றிறன் மிக்க நவீன தொலைத்தொடர்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படுவதை ஊக்குவித்தல்.
- *கொள்கைத் துறை*- உலகளாவிய தகவல், பொருளாதார, சமூக விவகாரங்களில் எதிர்நோக்கப்படும் தொலைத்தொடர்புப் பிரச்சினைகள் பரந்த கண்ணோட்டத்தில் அணுகப்படுவதை ஊக்குவித்தல்.
- *அபிவிருத்தித் துறை*- தொலைத்தொடர்புகளை விருத்திசெய்வதற்காக வளர்முக நாடுகளுக்குத் தொழில்நுட்ப உதவி வழங்குதலும் நிதி மற்றும் நிபுணத்துவ வளங்களைத் திரட்ட உதவுதலும். தொலைத்தொடர்பின் நவீன தொழில்நுட்பங்களினால் எல்லா நாடுகளிலுள்ள மக்களும் நன்மை பெறுவதை ஊக்குவித்தல்.

189 அங்கத்துவ நாடுகளையும் சுமார் 600 ஏனைய அங்கத்தவர்களையும் (விஞ்ஞான மற்றும் கைத்தொழில் கம்பனிகள், தொலைத்தொடர்புச் சேவைகளை நடத்தும் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள், ஒலிபரப்பாளர்கள், பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புக்கள்) கொண்டுள்ளது. அதன் ஆளுநர் சபையான முழு அதிகாரமும் கொண்ட பேரவை நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை கூடுகின்றது. அதனால் தெரிவுசெய்யப்படும் 46 அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாக சபையின் கூட்டங்கள் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன.

**ITU** 740 ஊழியர்களைக் கொண்டுள்ளது. 2000-2001 காலப்பகுதிக்கான அதன் நிதி ஒதுக்கீடு 23 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

செயலாளர் நாயகம்: **Mr. Yoshio Utsumi (Japan)**
தலைமையகம்: **Palais des Nations, CH-1211 Geneva 20, Switzerland.**
தொலைபேசி: **(41 22) 730 5111**
ஃபெக்ஸ்: **(41 22) 733 7256**
ஈ-மெயில்: **itumail@itu.int**
இன்டர்நெட்: **www.itu.int**

## அனைத்துலக தபால் ஒன்றியம் (UPU)

இது சர்வதேச தபால் சேவைகளை ஒழுங்குநெறிப்படுத்தும் விசேட அமைப்பாகும். 1874 ஆம் ஆண்டு பேர்ண் உடன்படிக்கைக்கு அமைய ஏற்படுத்தப்பட்ட இது 1948 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் விசேட முகவராண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில் 189 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. தபால் சேவைகளின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் இவ்வமைப்பு, அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்புக்கு ஓர் ஊடகமாக விளங்குகிறது. அனைத்துலக தபால் சேவையை ஊக்குவித்தல், நவீன தபால் வசதிகளை வழங்குவதன் மூலம் தபால்களின் அதிகரிப்புக்கு வழிகோலுதல், சேவைத் தரத்தை முன்னேற்றுதல், இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் உலகெங்குமுள்ள மக்களுக்கிடையே தொடர்புகளை விருத்திசெய்தல் என்பன இதன் பிரதான குறிக்கோள்களாகும்.

அனைத்துலக தபால் காங்கிரஸ் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை கூடுகின்றது. 23 ஆவது காங்கிரஸ் 2004 ஆம் ஆண்டு ஐவரி கோஸ்டின் அபிஜான் நகரில் நடைபெறவிருக்கின்றது.

**UPU** 151 ஊழியர்களைக் கொண்டுள்ளது. 2000 ஆம் ஆண்டில் அதன் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு 22.5 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

பணிப்பாளர் நாயகம்: Mr. Thomas E. Leavey (USA)
தலைமையகம்: Weltpoststrasse 4, Case Postale 3000, Berne 15, Switzerland.
தொலைபேசி: (41 31) 350 31 11
ஃபெக்ஸ்: (41 31) 350 31 10
ஈ-மெயில்: info@upu.int
இன்டர்நெட்: www.upu.int

## உலக வளிமண்டலவியல் தாபனம் (WMO)

1951 ஆம் ஆண்டு தொடக்கம் ஐ.நா. விசேட முகவராண்மைகளில் ஒன்றாகச் செயற்பட்டுவரும் இந்த அமைப்பு வளிமண்டலச் சூழல், உலகின் நன்னீர் வளங்கள், காலநிலை என்பன சம்பந்தமாக அதிகாரபூர்வமான விஞ்ஞானத் தகவல்களை வழங்குகின்றது. வானிலை எதிர்வுகூறல் நுட்பங்களை விருத்திசெய்தல், சர்வதேச ஒத்துழைப்புடன் உலகக் காலநிலை மாற்றங்களைப் பதிவுசெய்தல், வானிலைத் தகவல்களைத் துரிதமாகப் பரிமாறிக்கொள்ள உதவுதல், நீரியல் தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவித்தல் என்பன அதன் முக்கிய பணிகளாகும்.

வளிமண்டலம், காலநிலை, சுற்றாடல், நீர் வளங்கள் என்பன தொடர்பான பல பிரதான நிகழ்ச்சித் திட்டங்களை WMO மேற்கொள்கிறது. சூறாவளி, வெள்ளப்பெருக்கு, வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களையிட்டு முன்கூட்டியே எச்சரிக்கையாக இருக்க இத்தகைய திட்டங்கள் உதவுகின்றன. வளிமண்டலத்தில் ஓஸோன் படையின் அழிவு, புவி வெப்பமடைதல், நீர் வளங்கள் அருகிவருதல் போன்ற பிரச்சினைகளிலும் WMO முக்கிய கவனம் செலுத்துகின்றது.

WMO 179 நாடுகளையும் 6 பிரதேசங்களையும் உள்ளடக்கிய 185 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. சகல அங்கத்தவர்களும் தத்தமது பிரதேசத்தில் வளிமண்டலவியல் மற்றும் நீரியல் சேவைப் பிரிவுகளைக் கொண்டுள்ளன. ஆளுநர் சபையான உலக வளிமண்டலவியல் காங்கிரஸ் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை கூடுகின்றது. 36 அங்கத்தவர்களைக் கொண்ட நிறைவேற்றுச் சபை வருடாந்தம் கூடுகின்றது. WMO சார்பில் 246 பேர் பணியாற்றுகின்றனர். 2000-2003 காலப்பகுதிக்கான அதன் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு 152 மில்லியன் டொலராகும்.

செயலாளர் நாயகம்: Dr. G.O.P. Obasi (Nigeria)
தலைமையகம்: 7 bis, Avenue de la Paix, CH- 1211 Geneva 2, Switzerland.
தொலைபேசி: (41 22) 730 8111
ஃபெக்ஸ்: (41 22) 730 8181
ஈ-மெயில்: ipa@gateway.wmo.ch
இன்டர்நெட்: www.wmo.ch

## உலக அறிவாற்றல் சொத்து தாபனம் (WIPO)

1970 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இத் தாபனம் 1974இல் ஐக்கிய நாடுகளின் விசேட முகவராண்மையானது. அதன் 175 அங்கத்துவ நாடுகளின் ஒத்துழைப்புடன் உலகெங்கும் அறிவாற்றல் சொத்தைப் பாதுகாக்க உதவுவதும் அறிவாற்றல் சொத்தைப் பாதுகாக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள ஒன்றியங்களுக்கிடைய நிர்வாக ஒத்துழைப்பை உறுதிப்படுத்துவதும் இந்த அமைப்பின் நோக்கங்களாகும்.
பிரதான ஒன்றியங்கள் பின்வருமாறு:

- *பரிஸ் ஒன்றியம்-* இதுவே கைத்தொழில் சொத்தைப் பாதுகாப்பதற்கான உத்தியோகபூர்வ சர்வதேச ஒன்றியமாகும்.
- *பேர்ண் ஒன்றியம்-* இதுவே இலக்கியம் மற்றும் கலைத்துறையில் ஆக்கியோனுரிமையைப் பாதுகாப்பதற்கான உத்தியோகபூர்வ சர்வதேச ஒன்றியமாகும்.

அறிவாற்றல் சொத்து இரு பிரதான பிரிவுகளைக் கொண்டது. முதலாவது, கைத்தொழில் சொத்து. இப் பிரிவில் புதிய கண்டுபிடிப்புக்கள், வர்த்தகச் சின்னங்கள், கைத்தொழில் வடிவங்கள் முதலியன அடங்கும். இரண்டாவது, ஆக்கியோனுரிமை சம்பந்தப்பட்டது. இலக்கியம், இசை, ஓவியம், புகைப்படக்கலை மற்றும் இது போன்ற கலைத்துறைகள் இப் பிரிவில் அடங்கும். WIPO 21 சர்வதேச உடன்படிக்கைகளை அமுல்செய்கிறது. இவற்றுள் 15 உடன்படிக்கைகள் கைத்தொழில் சொத்துத் தொடர்பானவை. எஞ்சிய ஆறும் ஆக்கியோனுரிமை சம்பந்தப்பட்டவை.

WIPO மூன்று சபைகளைக் கொண்டுள்ளது. அவையாவன:
(1) பரிஸ் அல்லது பேர்ண் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் WIPO அங்கத்தவர்களைக் கொண்ட *பொதுச்சபை.* இது இரு வருடங்களுக்கு ஒரு தடவை கூடுகின்றது. (2) சகல அங்கத்துவ நாடுகளையும் உள்ளடக்கிய *பேரவை.* இதுவும் இரு வருடங்களுக்கு ஒரு தடவை கூடுகின்றது. (3) 72 உறுப்பினர்களைக் கொண்ட *இணைப்புக் குழு.* இது வருடாந்தக் கூட்டங்களை நடத்துகின்றது. WIPO 765 ஊழியர்களைக் கொண்டுள்ளது. 2000-2001 காலப்பகுதிக்கான அதன் நிதி ஒதுக்கீடு 248 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

செயலாளர் நாயகம்: **Dr. Kamil Idris (Sudan)**
தலைமையகம்: **34 Chemin des Colombettes, 1211 Geneva 20, Switzerland.**
தொலைபேசி: **(41 22) 338 91 11**
ஃபெக்ஸ்: **(41 22) 733 54 28**
ஈ-மெயில்: **PUBLICINF.mail@wipo.int**
இன்டர்நெட்: **www.wipo.int**

## விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD)

இந்த அமைப்பு 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக உணவு மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய 1977 ஆம் ஆண்டில் ஒரு பல்தேசிய நிதி நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டது. வளர்முக நாடுகளில் பட்டினியையும் கிராமப்புற வறுமையையும் போக்குவது இதன் நோக்கமாகும்.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் வளர்முக நாடுகளின் பின்தங்கிய கிராமப்புறங்களிலுள்ள மிக வறிய மக்களுக்குச் சிறந்த போஷாக்கை வழங்குவதற்கும் மூலவளங்களை ஒன்றுதிரட்டுவதில் நிதியம் கவனம் செலுத்துகிறது.

IFAD கடன்கள், நன்கொடைகள் மூலம் நேரடி நிதியுதவி வழங்குவதோடு அதன் வேலைத்திட்டங்கள் வாயிலாகவும் மேலதிக வளங்களைத் திரட்டிக் கொடுக்கின்றது. கடனுக்கான நிபந்தனைகள் அந்தந்த நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியைப் பொறுத்து வேறுபடுகின்றது. உலக வங்கி, பிராந்திய அபிவிருத்தி வங்கிகள், ஏனைய பிராந்திய நிதி நிறுவனங்கள், பல்வேறு ஐ.நா. முகவராண்மைகள் என்பன IFAD நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன.

தனக்குரிய நிதியை அரசாங்கங்களின் சுயாதீன பங்களிப்புக்கள், விசேட பங்களிப்புக்கள், கடன் மீள்கொடுப்பனவு, முதலீட்டு வருமானம் முதலிய வழிகளில் பெற்றுக்கொள்கிறது. புதிய வேலைத்திட்டங்களுக்கும் நன்கொடைகளுக்குமென வருடாந்தம் பயன்படுத்தப்படும் தொகை சுமார் 450 மில்லியன் அமெரிக்க டொலராகும். நிதியம் 266 ஊழியர்களைக் கொண்டுள்ளது.

சகல அங்கத்துவ நாடுகளும் இடம்பெறும் ஆளுநர் சபை வருடாந்தம் கூடுகின்றது. 18 அங்கத்தவர்களையும் 18 மாற்று அங்கத்தவர்களையும் கொண்ட நிறைவேற்றுச் சபையே நிதியத்தின் செயற்பாடுகளைக் கவனிக்கிறது. கடன்கள், நன்கொடைகளை அங்கீகரிப்பதும் அதுவே.

தலைவர்: Mr. Lennart Bage (Sweden)
தலைமையகம்: Via del Serafico 107, 00142 Rome, Italy.
தொலைபேசி: (39 06) 54 591
ஃபெக்ஸ்: (39 06) 504 3463
ஈ-மெயில்: ifad@ifad.org
இன்டர்நெட்: www.ifad.o

## ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி தாபனம் (UNIDO)

கைத்தொழில் அபிவிருத்தியையும் ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பதற்காக 1966 ஆம் ஆண்டு பொதுச்சபையினால் ஏற்படுத்தப்பட்ட இத் தாபனம் 1985 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் விசேட முகவராண்மைகளில் ஒன்றாகியது.

வளர்முக நாடுகளிலும் பொருளாதார மாற்றத்திற்கு உள்ளாகிவரும் நாடுகளிலும் நிலைத்து நீடிக்கக்கூடிய கைத்தொழில் அபிவிருத்திக்கான வசதிகளைச் செய்துகொடுப்பதன் மூலம் உலகளாவிய ரீதியில் சுபீட்சத்தை ஏற்படுத்துவதும் மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதும் இதன் குறிக்கோளாகும். கைத்தொழில் துறையின் உலகமயமாக்கலினால் தோன்றியுள்ள புதிய சவால்களுக்கு முகங்கொடுக்கும் ஆற்றலைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு அரசாங்கங்கள், தொழிற்றுறைச் சங்கங்கள் மற்றும் தனியார் கைத்தொழிற்றுறை ஆகியவற்றுடன் அது ஒத்துழைப்பை மேற்கொள்கிறது. UNIDO தனது சேவைகளை ஆற்றுவதற்கு உதவியாக பொறியியலாளர்கள், பொருளியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், சுற்றாடற்றுறை நிபுணர்கள் ஆகியோரை வியன்னாவில் கொண்டுள்ளது. ஏனைய தொழில்சார் நிபுணர்கள் உலகெங்குமுள்ள அதன் முதலீட்டு ஊக்குவிப்புச் சேவை அலுவலகங்களிலும் வெளிக்கள அலுவலகங்களிலும் பணியாற்றுகின்றனர். வெளிக்கள அலுவலகங்களுக்கு UNIDO பிராந்திய மற்றும் நாட்டுப் பிரதிநிதிகள் தலைமை தாங்குகின்றனர்.

168 அங்கத்தவர்களைக் கொண்ட UNIDO பொதுப் பேரவை இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை கூடுகின்றது. வரவு செலவுத் திட்டம், செயற்றிட்டங்கள் என்பவற்றை அதுவே அங்கீகரிக்கின்றது. இத் திட்டங்களின் தயாரிப்பு மற்றும் அமுலாக்கம் தொடர்பாக சிபாரிசுகளை வழங்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் 53 அங்கத்தவர்கள் இடம்பெறுகின்றனர்.

UNIDO தலைமை அலுவலகத்தில் சுமார் 650 ஊழியர்கள் உள்ளனர். அதனால் நியமிக்கப்பட்டு உலகெங்கும் பணியாற்றும் நிபுணர்களின் எண்ணிக்கை 1999 ஆம் ஆண்டில் சுமார் 1.830 ஆகவிருந்தது. 200-2001 காலப்பகுதிக்கான அதன் நிதி ஒதுக்கீடு 133 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

பணிப்பாளர் நாயகம்: **Mr. Carlos Magarinos (Argentina)**
தலைமையகம்: **Vienna International Centre, A-1400 Vienna, Austria.**
தொலைபேசி: **(43 1) 26026/0**
ஃபெக்ஸ்: **(43 1) 269 2669**
ஈ-மெயில்: **unido-pinfo@unido.org**
இன்டர்நெட்: **www.unido.org**

## சர்வதேச அணுச்சக்தி நிலையம் (IAEA)

அணுச்சக்தியைச் சமாதான நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதில் விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேற்கொள்ள அரசாங்கங்களுக்கு வசதியளிக்கும் ஓர் உலக அமைப்பாகவும் அணுச்சக்தி இடர்க்காப்பு மற்றும் ஊர்ஜிதப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான சர்வதேச கண்காணிப்புப் பிரிவாகவும் இது விளங்குகின்றது. இது 1957இல் ஐக்கிய நாடுகளின் ஆதரவிலான ஒரு சுயாதீன நிலையமாக ஏற்படுத்தப்பட்டது.

இந் நிலையம் அதன் 131 அங்கத்துவ நாடுகளுக்கும் சுயதேவைக்கான அணுச்சக்தி விஞ்ஞானத் திட்டங்களை மேற்கொள்ள தொழில்நுட்ப உதவி வழங்குகிறது. உணவும் விவசாயம், மருத்துவம், கைத்தொழில், நீரியல், சுற்றாடல் பாதுகாப்பு முதலிய துறைகளில் பயன்படுத்தக்கூடிய அணுச்சக்தி நிகழ்ச்சித் திட்டங்களிலேயே IAEA முக்கிய கவனத்தைச் செலுத்துகின்றது.

அணுச்சக்திப் பொருள்கள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகளுக்கு நாடுகள் பணிந்து நடக்கின்றனவா என்பதை ஊர்ஜிதம்செய்ய IAEA உதவுகின்றது. IAEA இடர்க்காப்புத் திட்டத்தின் கீழ், சுமார் 200 பரிசோதகர்கள் உலகெங்குமுள்ள 1,000க்கு மேற்பட்ட அணுச்சக்தி உலைக்கூடங்களைக் கண்காணித்து வருகின்றனர்.

சகல அங்கத்துவ நாடுகளும் இடம்பெறும் IAEA பொதுப் பேரவை வருடாந்தம் கூடுகின்றது. ஆளுநர் சபையில் 35 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

IAEA 2,133 ஊழியர்களைக் கொண்டுள்ளது. 2000 ஆம் ஆண்டுக்கான அதன் வழமையான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு 224 அமெரிக்க டொலராகும். இதைவிட சுமார் 80 மில்லியன் மேலதிக பங்களிப்பாக ஒதுக்கப்பட்டது.

பணிப்பாளர் நாயகம்: Mr. Mohamed El Baradei (Egypt)
தலைமையகம்: Vienna International Centre, Wagramerstrasse 5, P.O. Box 100, A-1400 Vienna, Austria.
தொலைபேசி: (43 1) 2600-0
ஃபெக்ஸ்: (43 1) 2600-7
ஈ-மெயில்: official.mail@iaea.org
இன்டர்நெட்: www.iaea.org

## முழுமையான அணுவாயுதப் பரிசோதனைத் தடை உடன்படிக்கைக்கான ஆயத்த ஆணைக்குழு (CTBTO)

முழுமையான அணுவாயுதப் பரிசோதனைத் தடை உடன்படிக்கையில் ஒப்பமிட்ட நாடுகள் 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி நியூயோர்க்கில் நடத்திய கூட்டம் ஒன்றிலேயே இந்த ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. இது இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது: ஒன்று, கையொப்பமிட்ட சகல நாடுகளும் இடம்பெறும் முழுமையான சபையாகும். மற்றது, தற்காலிகத் தொழில்நுட்பச் செயலகமாகும்.

உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உலகளாவிய ஊர்ஜிதப்படுத்தல் அதிகாரமன்றத்தை, உடன்படிக்கை நடைமுறைக்கு வரும்போது செயற்படத்தக்கதாக, ஏற்படுத்துவதே ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பொறுப்பாகும்.

நிறைவேற்றுச் செயலாளர்: Mr. Wolfgang Hoffmann (Germany)
தலைமையகம்: Vienna International Centre, P.O. Box 1200,
A-1400 Vienna, Austria.
தொலைபேசி: (43 1) 26030 6159
ஃபெக்ஸ்: (43 1) 26030 55877
ஈ-மெயில்: info@ctbto.org
இன்டர்நெட்: www.ctbto.org

## இரசாயன ஆயுதங்களின் தடைக்கான தாபனம் (OPCW)

இரசாயன ஆயுதங்களின் உருவாக்கம், உற்பத்தி, சேமிப்பு, உபயோகம் முதலியவற்றைத் தடைசெய்வதற்கும் அவற்றை ஒழித்துவிடுவதற்குமான ஒப்பந்தத்தை அமுலாக்குவதே இந்த அமைப்பின் பிரதான பணியாகும். இந்த ஒப்பந்தம் 1997 ஏப்பிரல் 29 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்டது. பேரழிவை உண்டுபண்ணும் ஒரு குறிப்பிட்ட வகை ஆயுதங்களை முற்றாக ஒழித்துவிடும் ஏற்பாட்டைக் கொண்ட முதலாவது சர்வதேச ஆயுதபரிகரண ஒப்பந்தம் இதுவாகும்.

சகல அங்கத்துவ நாடுகளும் இடம்பெறும் பேரவை வருடாந்தம் கூடுகின்றது. 41 அங்கத்தவர்களைக் கொண்ட நிறைவேற்றுச் சபை அன்றாட நடவடிக்கைகளை மேற்பார்வை செய்கிறது. இது இரு வருட பதவிக்காலத்திற்குத் தெரிவுசெய்யப்படுகின்றது. இவற்றைத் தவிர, தொழில்நுட்பச் செயலகம், விஞ்ஞான ஆலோசனைச் சபை என்பனவும் உண்டு. OPCW சுமார் 500 ஊழியர்களைக் கொண்டுள்ளது. அதன் வருடாந்த வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு 56 அமெரிக்க டொலராகும்.

பணிப்பாளர் நாயகம்: Dr. Jose Mauricio Bustani (Brazil)
தலைமையகம்: Johan de Wittlaan 32¬ 2517 The Hague, The Netherlands
தொலைபேசி: (31 70) 416 3300
ஃபெக்ஸ்: (31 70) 306 3535
ஈ-மெயில்: webmaster@opcw.org
இன்டர்நெட்: www.opcw.org

## உலக சுற்றுலாத்துறை தாபனம் (WTO)

1925 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டுவரும் இத் தாபனமே பயணம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் ஈடுபாடு காட்டும் பிரதான சர்வதேச அமைப்பாகும். சுற்றுலாத்துறை சார்ந்த கொள்கைகளை வகுப்பதற்கான ஓர் அரங்கமாகவும் சுற்றுலாத்துறை சார்ந்த அறிவு மற்றும் தகவல்களின் களஞ்சியமாகவும் அது விளங்குகின்றது. 138 நாடுகளும் பிரதேசங்களும் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. அவற்றைத் தவிர, 350க்கு மேற்பட்ட உள்ளூராட்சி அமைப்புக்கள், சுற்றுலாத்துறைச் சங்கங்கள், விமான சேவை நிறுவனங்கள், ஹொட்டேல்கள், சுற்றுலா ஏற்பாட்டு நிறுவனங்கள் என்பனவும் இந்த அமைப்பில் துணை அங்கத்துவம் பெற்றுள்ளன.

சுற்றுலாத்துறையை விருத்திசெய்யும் பொறுப்பு ஐக்கிய நாடுகளினால் இந்த அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. WTO அமைப்பு 1977இல் ஐக்கிய நாடுகளுடன் ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டது. சுற்றுலாத்துறை மூலம் பொருளாதார வளர்ச்சி, தொழில் வாய்ப்புக்கள் முதலியவற்றை ஊக்குவிப்பதும் சுற்றாடல் மற்றும் கலாசார மரபுகளின் பாதுகாப்புக்கு ஊக்கமளிப்பதும் பல்வேறு நாட்டு மக்களுக்கிடையே புரிந்துணர்வை வளர்ப்பதும் WTO அமைப்பின் குறிக்கோள்களாகும்.

பூரண மற்றும் துணை அங்கத்தவர்கள் இடம்பெறும் WTO பொதுச்சபை இரு வருடங்களுக்கு ஒரு தடவை கூடி, வரவு செலவுத் திட்டத்தையும் செயற்றிட்டங்களையும் அங்கீகரிக்கின்றது. சுற்றுலாத்துறை சார்ந்த பிரச்சினைகளும் விவாதிக்கப்படுகின்றன. 26 உறுப்பினர்களைக் கொண்ட நிறைவேற்றுச் சபை ஆண்டுக்கு இரு தடவைகள் கூடுகின்றது. ஆபிரிக்கா, அமெரிக்காக்கள், கிழக்காசியாவும் பசுபிக்கும், ஐரோப்பா, மத்திய கிழக்கும் தெற்காசியாவும் ஆகிய ஆறு பிராந்தியங்களுக்கான ஆறு ஆணைக்குழுக்களையும் WTO கொண்டுள்ளது. அவ்வப் பிராந்திய அங்கத்ததுவ நாடுகள் இடம்பெறும் இந்த ஆணைக்குழுக்கள் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு தடவையாவது கூட்டத்தை நடத்துகின்றன.

WTO 80 ஊழியர்களைக் கொண்டுள்ளது. அதன் இருவருட வரவு செலவுத் திட்டநிதி ஒதுக்கீடு 18 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

செயலாளர் நாயகம்: **Francesco Frangialli (France)**
தலைமையகம்: **Capitan Haya 42, 28020 Madrid, Spain.**
தொலைபேசி: **(34) 91 567 81 00**
ஃபெக்ஸ்: **(34) 91 571 37 33**
ஈ-மெயில்: **omt@world-tourism.org**
இன்டர்நெட்: **www.world-tourism.org**

## உலக வர்த்தக தாபனம் (WTO)

வர்த்தகமும் தீர்வைகளும் சம்பந்தமான பொது உடன்படிக்கை அமைப்புக்குப் பதிலாக 1995 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட உலக வர்த்தக தாபனமே உலக நாடுகளுக்கு இடையிலான வர்த்தக உறவுகளை நெறிப்படுத்தும் விதிகள் தொடர்பான ஒரேயொரு சர்வதேச அமைப்பாகும். இது ஒரு ஐக்கிய நாட்டு விசேட முகவராண்மை அல்ல. ஆயினும், ஐக்கிய நாடுகளுடன் ஒத்துழைக்கும் ஏற்பாடுகளையும் நடைமுறைகளையும் கொண்டுள்ளது.

விதிமுறைகளின் அடிப்படையில் சீரான வர்த்தகம் நடைபெற உதவுதல், அரசாங்கங்களுக்கு இடையிலான வர்த்தகப் பிணக்குகளுக்குத் தீர்வு காணுதல், வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்தல் என்பன இதன் பணிகளாகும். சர்வதேச வர்த்தக, வாணிபக் கொள்கைகள் தொடர்பான விதிகளை உள்ளடக்கிய சுமார் 60 ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே WTO செயற்படுகிறது. இந்த ஒப்பந்தங்கள் பின்வரும் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டவை:
(1) பாரபட்சமின்மை ("அதிசலுகைக்குரிய நாடு" என்ற சரத்து)
(2) சுதந்திரமான வர்த்தகம் (3) வர்த்தகப் போட்டிகளை ஊக்குவித்தல்
(4) வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கான மேலதிக ஏற்பாடுகள்.

வர்த்தகத் தற்காப்பு நடவடிக்கைகளைக் குறைத்தல் உலக வர்த்தக தாபனத்தின் குறிக்கோள்களில் ஒன்றாகும்.

தொலைத்தொடர்புச் சேவை, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், நிதிச் சேவைகள் ஆகிய துறைகளில் திறந்த சந்தைகளை ஏற்படுத்த WTO ஆதரவிலான பேச்சுவார்த்தைகள் உதவியுள்ளன. WTO 190க்கு மேற்பட்ட வர்த்தகப் பிணக்குகளுக்குத் தீர்வுகாண உதவியுள்ளது. 1986-1994 காலப்பகுதியில் உருகுவாயில் நடைபெற்ற உலக வர்த்தகப் பேச்சுக்களின் பயனாக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் அமுலாக்கத்தை அது மேற்பார்வை செய்கிறது. WTO 135 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. அதன் ஆளுநர் சபையான அமைச்சர்கள் பேரவை இரு வருடங்களுக்கு ஒரு தடவை கூடுகின்றது. அன்றாட அலுவல்கள் பொதுச் சபை ஒன்றினால் கவனிக்கப்படுகின்றன.

WTO 500 ஊழியர்களைக் கொண்டுள்ளது. 2000 ஆம் ஆண்டுக்கான அதன் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு 77.1 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

பணிப்பாளர் நாயகம்: Mr. Mike Moore (New Zealand)
தலைமையகம்: Centre William Rappard, 154 Rue de Lausanne,
CH-1211 Geneva 21, Switzerland.
தொலைபேசி: (41 22) 739 51 11
ஃபெக்ஸ்: (41 22) 731 42 06
ஈ-மெயில்: enquiries@wto.org
இன்டர்நெட்: www.wto.org

# ஐ.நா. அங்கத்துவ நாடுகள்

(2000 டிசெம்பரில் இருந்தவாறு)

| அங்கத்துவ நாடு | சேர்ந்த திகதி | 2000க்கான நிதிப் பங்களிப்பு (சத வீதம்) | சனத்தொகை (அண்ணளவில்) |
|---|---|---|---|
| ஆப்கானிஸ்தான் | 1946 நவம்பர் 19 | 0.003 | 18,797,000 |
| அல்பேனியா | 1955 டிசெம்பர் 14 | 0.003 | 3,791,000 |
| அல்ஜீரியா | 1962 ஒக்டோபர் 8 | 0.086 | 29,800,000 |
| அன்டோரா | 1993 ஜூலை 28 | 0.004 | 72,000 |
| அங்கோலா | 1976 டிசெம்பர் 1 | 0.010 | 12,092,000 |
| அன்ரிகுவா அன்ட் பார்புடா | 1981 நவம்பர் 11 | 0.002 | 67,000 |
| ஆர்ஜன்ரீனா | 1945 ஒக்டோபர் 24 | 1.103 | 36,125,000 |
| ஆர்மேனியா | 1992 மார்ச் 2 | 0.006 | 3,536,000 |
| அவுஸ்திரேலியா | 1945 நவம்பர் 1 | 1.483 | 18,750,000 |
| ஒஸ்திரியா | 1955 டிசெம்பர் 14 | 0.942 | 8,077,000 |
| அஸர்பைஜான் | 1992 மார்ச் 2 | 0.011 | 7,953,000 |
| பஹமாஸ் | 1973 செப்டெம்பர் 18 | 0.015 | 298,000 |
| பாரெயின் | 1971 செப்டெம்பர் 21 | 0.017 | 642,000 |
| பங்களாதேஷ் | 1974 செப்டெம்பர் 17 | 0.010 | 124,774,000 |
| பார்பேடோஸ் | 1966 டிசெம்பர் 9 | 0.008 | 266,000 |
| பெலாருஸ் | 1945 ஒக்டோபர் 24 | 0.057 | 10,190,000 |
| பெல்ஜியம் | 1945 டிசெம்பர் 27 | 1.104 | 10,213,000 |
| பெலீஸ் | 1981 செப்டெம்பர் 25 | 0.001 | 238,000 |
| பெனின் | 1960 செப்டெம்பர் 20 | 0.002 | 6,044,000 |
| பூட்டான் | 1971 செப்டெம்பர் 21 | 0.001 | 2,004,000 |
| பொலீவியா | 1945 நவம்பர் 14 | 0.007 | 7,949,000 |
| பொஸ்னியா-ஹெறர்ஸகோவினா | 1992 மே 22 | 0.005 | 4,211,000 |
| பொட்ஸ்வானா | 1966 ஒக்டோபர் 17 | 0.010 | 1,571,000 |
| பிறேசில் | 1945 ஒக்டோபர் 24 | 1.471 | 161,790,000 |
| புருனை தாருஸ்ஸலாம் | 1984 செப்டெம்பர் 21 | 0.020 | 315,000 |
| பல்கேரியா | 1955 டிசெம்பர் 14 | 0.011 | 8,256,000 |
| புர்கின பாஸோ | 1960 செப்டெம்பர் 20 | 0.002 | 10,682,000 |
| புருண்டி | 1962 செப்டெம்பர் 18 | 0.001 | 6,300,000 |
| கம்போடியா | 1955 டிசெம்பர் 14 | 0.001 | 11,426,00 |
| கமரூன் | 1960 செப்டெம்பர் 20 | 0.013 | 14,305,000 |
| கனடா | 1945 நவம்பர் 9 | 2.732 | 30,301,000 |
| கேப் வேர்டி | 1975 செப்டெம்பர் 16 | 0.001 | 417,000 |
| மத்திய ஆபிரிக்கக் குடியரசு | 1960 செப்டெம்பர் 20 | 0.001 | 3,485,000 |
| சாட் | 1960 செப்டெம்பர் 20 | 0.001 | 7,270,000 |
| சிலி | 1945 ஒக்டோபர் 24 | 0.136 | 14,821,000 |
| சீனா | 1945 ஒக்டோபர் 24 | 0.995 | 1,255,698,000 |
| கொலம்பியா | 1945 நவம்பர் 5 | 0.109 | 40,826,000 |
| கொமரோஸ் | 1975 நவம்பர் 12 | 0.001 | 658,000 |
| கொங்கோ | 1960 செப்டெம்பர் 20 | 0.003 | 2,785,000 |

| | | | |
|---|---|---|---|
| கோஸ்டா ரீக்கா | 1945 நவம்பர் 2 | 0.016 | 3,340,000 |
| கோட் டி ஐவோர் | 1960 செப்டெம்பர் 20 | 0.009 | 14,292,000 |
| குறோவேசியா | 1992 மே 22 | 0.030 | 4,572,000 |
| கியூபா | 1945 ஒக்டோபர் 24 | 0.024 | 11,116,000 |
| சைப்பிரஸ் | 1960 செப்டெம்பர் 20 | 0.034 | 749,000 |
| செக் குடியரசு | 1993 ஜனவரி 19 | 0.107 | 10,294,000 |
| கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு | 1991 செப்டெம்பர் 17 | 0.015 | 23,348,000 |
| கொங்கோ ஜனநாயகக் குடியரசு | 1960 செப்டெம்பர் 20 | 0.007 | 46,812,000 |
| டென்மார்க் | 1945 ஒக்டோபர் 24 | 0.692 | 5,301,000 |
| ஜிபூட்டி | 1977 செப்டெம்பர் 20 | 0.001 | 623,000 |
| டொமினிக்கா | 1978 டிசெம்பர் 18 | 0.001 | 71,000 |
| டொமினிக்கன் குடியரசு | 1945 ஒக்டோபர் 24 | 0.015 | 9,327,000 |
| ஈக்குவடோர் | 1945 டிசெம்பர் 21 | 0.020 | 12,174,000 |
| எகிப்து | 1945 ஒக்டோபர் 24 | 0.065 | 65,978,000 |
| எல் சல்வதோர் | 1945 ஒக்டோபர் 24 | 0.012 | 6,031,000 |
| ஈக்வடோரியல் கினி | 1968 நவம்பர் 12 | 0.001 | 431,000 |
| எரிட்ரியா | 1993 மே 28 | 0.001 | 3,577,000 |
| எஸ்தோனியா | 1991 செப்டெம்பர் 17 | 0.012 | 1,429,000 |
| எதியோப்பியா | 1945 நவம்பர் 13 | 0.006 | 59,882,000 |
| மைக்குரோனேசியா சமஷ்டி மாநிலங்கள் | 1991 செப்டெம்பர் 17 | 0.004 | 114,000 |
| பீஜி | 1970 ஒக்டோபர் 13 | 0.004 | 796,000 |
| பின்லாந்து | 1955 டிசெம்பர் 14 | 0.543 | 5,154,000 |
| பிரான்ஸ் | 1945 ஒக்டோபர் 24 | 6.545 | 58,846,000 |
| கபோன் | 1960 செப்டெம்பர் 20 | 0.015 | 1,188,000 |
| கம்பியா | 1965 செப்டெம்பர் 21 | 0.001 | 1,229,000 |
| ஜோர்ஜியா | 1992 ஜூலை 31 | 0.007 | 5,059,000 |
| ஜேர்மனி | 1973 செப்டெம்பர் 18 | 9.857 | 82,024,000 |
| கானா | 1957 மார்ச் 8 | 0.007 | 19,162,000 |
| கிரேக்கம் | 1945 ஒக்டோபர் 24 | 0.351 | 10,515,000 |
| கிரெனேடா | 1974 செப்டெம்பர் 14 | 0.001 | 93,000 |
| குவாத்தமாலா | 1945 நவம்பர் 21 | 0.018 | 10,799,000 |
| கினி | 1958 டிசெம்பர் 12 | 0.003 | 7,337,000 |
| கினி-பிஸோ | 1974 செப்டெம்பர் 17 | 0.001 | 1,161,000 |
| கயானா | 1966 செப்டெம்பர் 20 | 0.001 | 850,000 |
| ஹெயிற்றி | 1945 ஒக்டோபர் 24 | 0.002 | 7,647,000 |
| ஹொண்டூராஸ் | 1945 டிசெம்பர் 17 | 0.003 | 6,179,000 |
| ஹங்கேரி | 1955 டிசெம்பர் 14 | 0.120 | 10,113,000 |
| ஐஸ்லாந்து | 1946 நவம்பர் 19 | 0.032 | 273,000 |
| இந்தியா | 1945 ஒக்டோபர் 30 | 0.299 | 970,933,000 |
| இந்தோனேசியா | 1950 செப்டெம்பர் 28 | 0.188 | 204,392,000 |
| ஈரான் | 1945 ஒக்டோபர் 24 | 0.161 | 61,626,000 |
| ஈராக் | 1945 டிசெம்பர் 21 | 0.032 | 21,800,000 |
| அயர்லாந்து | 1955 டிசெம்பர் 14 | 0.224 | 3,705,000 |
| இஸ்ரேல் | 1949 மே 11 | 0.350 | 5,963,000 |
| இத்தாலி | 1955 டிசெம்பர் 14 | 5.437 | 57,588,000 |

| | | | |
|---|---|---|---|
| ஜமெய்க்கா | 1962 செப்டெம்பர் 18 | 0.006 | 2,576,000 |
| ஜப்பான் | 1956 டிசெம்பர் 18 | 20.573 | 126,410,000 |
| ஜோர்தான் | 1955 டிசெம்பர் 14 | 0.006 | 6,304,000 |
| கஸகஸ்தான் | 1992 மார்ச் 2 | 0.048 | 15,049,000 |
| கென்யா | 1963 டிசெம்பர் 16 | 0.007 | 29,008,000 |
| கிரிபாஸ் | 1999 செப்டெம்பர் 14 | 0.001 | 81,000 |
| குவைத் | 1963 மே 14 | 0.128 | 2,027,000 |
| கிர்கிஸ்தான் | 1992 மார்ச் 2 | 0.006 | 4,699,000 |
| லாவோஸ் | 1955 டிசெம்பர் 14 | 0.001 | 5,163,000 |
| லத்வியா | 1991 செப்டெம்பர் 17 | 0.017 | 2,449,000 |
| லெபனான் | 1945 ஒக்டோபர் 24 | 0.016 | 3,191,000 |
| லெசோத்தோ | 1966 ஒக்டோபர் 17 | 0.002 | 2,062,000 |
| லைபீரியா | 1945 நவம்பர் 2 | 0.002 | 2,062,000 |
| லிபியா | 1955 டிசெம்பர் 14 | 0.124 | 5,339,000 |
| லீச்டென்ஸ்ரீன் | 1990 செப்டெம்பர் 18 | 0.006 | 32,000 |
| லித்துவேனியா | 1991 செப்டெம்பர் 17 | 0.015 | 3,072,000 |
| லக்ஸம்பேர்க் | 1945 ஒக்டோபர் 24 | 0.068 | 426,000 |
| மடகாஸ்கர் | 1960 செப்டெம்பர் 20 | 0.003 | 15,057,000 |
| மாலாவி | 1964 டிசெம்பர் 1 | 0.002 | 10,346,000 |
| மலேசியா | 1957 செப்டெம்பர் 17 | 0.183 | 22,179,000 |
| மாலைதீவு | 1965 செப்டெம்பர் 21 | 0.001 | 271.000 |
| மாலி | 1960 செப்டெம்பர் 28 | 0.002 | 10,694,000 |
| மோல்டா | 1964 டிசெம்பர் 1 | 0.014 | 377,000 |
| மார்ஷல் தீவுகள் | 1991 செப்டெம்பர் 17 | 0.001 | 63,000 |
| மொரிட்டானியா | 1961 ஒக்டோபர் 27 | 0.001 | 2,529,000 |
| மொறீஷியஸ் | 1968 ஏப்பிரல் 24 | 0.009 | 1,159,000 |
| மெக்ஸிக்கோ | 1945 நவம்பர் 7 | 0.995 | 95,831,000 |
| மொனாக்கோ | 19993 மே 28 | 0.004 | 33,000 |
| மொங்கோலியா | 1961 ஒக்டோபர் 27 | 0.002 | 2,403,000 |
| மொறாக்கோ | 1956 நவம்பர் 12 | 0.041 | 27,775,000 |
| மொஸாம்பிக் | 1975 செப்டெம்பர் 16 | 0.001 | 16,916,000 |
| மியன்மார் | 1948 ஏப்பிரல் 19 | 0.008 | 44,497,000 |
| நமீபியா | 1990 ஏப்பிரல் 23 | 0.007 | 1,666,000 |
| நாவுரு | 1999 செப்டெம்பர் 14 | 0.001 | 11,000 |
| நேபாளம் | 1955 டிசெம்பர் 14 | 0.004 | 21,843,000 |
| நெதர்லாந்து | 1945 டிசெம்பர் 10 | 1.632 | 15,707,000 |
| நியூசிலாந்து | 1945 ஒக்டோபர் 24 | 0.221 | 3,790,000 |
| நிக்கராகுவா | 1945 ஒக்டோபர் 24 | 0.001 | 4,807,000 |
| நிஜேர் | 1960 செப்டெம்பர் 20 | 0.002 | 10,078,000 |
| நைஜீரியா | 1960 ஒக்டோபர் 7 | 0.032 | 106,409,000 |
| நோர்வே | 1945 நவம்பர் 27 | 0.610 | 4,431,000 |
| ஓமான் | 1971 ஒக்டோபர் 7 | 0.051 | 2,287,000 |
| பாகிஸ்தான் | 1947 செப்டெம்பர் 30 | 0.059 | 148,166,000 |
| பாலாவு | 1994 டிசெம்பர் 15 | 0.001 | 19,000 |
| பனாமா | 1945 நவம்பர் 13 | 0.013 | 2,763,000 |
| பப்புவா நியூகினி | 1975 ஒக்டோபர் 10 | 0.007 | 4,600,000 |
| பரகுவாய் | 1945 ஒக்டோபர் 24 | 0.014 | 5,218,000 |

| | | | |
|---|---|---|---|
| பெரு | 1945 ஒக்டோபர் 31 | 0.099 | 24,800,000 |
| பிலிப்பீன்ஸ் | 1945 ஒக்டோபர் 24 | 0.081 | 75,154,000 |
| போலாந்து | 1945 ஒக்டோபர் 24 | 0.196 | 38,671,000 |
| போர்த்துக்கல் | 1955 டிசெம்பர் 14 | 0.431 | 9,957,000 |
| கட்டார் | 1971 செப்டெம்பர் 21 | 0.033 | 543,000 |
| கொரிய குடியரசு | 1991 செப்டெம்பர் 17 | 1.006 | 46,429,000 |
| மொல்தோவா குடியரசு | 1992 மார்ச் 2 | 0.010 | 3,652,000 |
| ரொமேனியா | 1955 டிசெம்பர் 14 | 0.056 | 22,502,000 |
| ரஷ்ய சம்மேளனம் | 1945 ஒக்டோபர் 24 | 1.077 | 147.739,000 |
| ருவாண்டா | 1962 செப்டெம்பர் 18 | 0.001 | 6,604,000 |
| சென். கிற்ஸ் அன்ட் நேவிஸ் | 1983 செப்டெம்பர் 23 | 0.001 | 39,000 |
| சென். லூசியா | 1979 செப்டெம்பர் 18 | 0.001 | 151,000 |
| சென். வின்சன்ற் அன்ட் த கிரெனாடின்ஸ் | 1980 செப்டெம்பர் 16 | 0.001 | 112,000 |
| சமோவா | 1976 டிசெம்பர் 15 | 0.001 | 168,000 |
| சான் மரீனோ | 1992 மார்ச் 2 | 0.002 | 26,000 |
| சாவோ தோமே அன்ட் பிரின்சிப்பே | 1975 செப்டெம்பர் 16 | 0.001 | 141,000 |
| சவுதி அரேபியா | 1945 ஒக்டோபர் 24 | 0.562 | 20,181,000 |
| செனிகல் | 1960 செப்டெம்பர் 28 | 0.006 | 9,037,000 |
| சிஷெல்ஸ் | 1976 செப்டெம்பர் 21 | 0.002 | 78,000 |
| சியரா லியோன் | 1961 செப்டெம்பர் 27 | 0.001 | 4,568,000 |
| சிங்கப்பூர் | 1965 செப்டெம்பர் 21 | 0.179 | 3,865,000 |
| ஸ்லொவாக்கியா | 1993 ஜனவரி 19 | 0.035 | 5,390,000 |
| ஸ்லொவேனியா | 1992 மே 22 | 0.061 | 1,983,000 |
| சொலமன் தீவுகள் | 1978 செப்டெம்பர் 19 | 0.001 | 417,000 |
| சோமாலியா | 1960 செப்டெம்பர் 20 | 0.001 | 9,237,000 |
| தென்னாபிரிக்கா | 1945 நவம்பர் 7 | 0.366 | 39,357,000 |
| ஸ்பெயின் | 1955 டிசெம்பர் 14 | 2.591 | 39,371,000 |
| இலங்கை | 1955 டிசெம்பர் 14 | 0.012 | 18,774,000 |
| சூடான் | 1956 நவம்பர் 12 | 0.007 | 28,292,000 |
| சூரினாம் | 1975 டிசெம்பர் 4 | 0.004 | 414,000 |
| சுவாஸிலாந்து | 1968 செப்டெம்பர் 24 | 0.002 | 952,000 |
| சுவிடன் | 1946 நவம்பர் 19 | 1.079 | 8,854,000 |
| சிரியா | 1945 ஒக்டோபர் 24 | 0.064 | 15,597,000 |
| தஜிகிஸ்தான் | 1992 மார்ச் 2 | 0.004 | 6,103,000 |
| தாய்லாந்து | 1946 டிசெம்பர் 16 | 0.170 | 61,201,000 |
| மசிடோனியா | 1993 ஏப்பிரல் 8 | 0.004 | 1,999,000 |
| டோகோ | 1960 செப்டெம்பர் 20 | 0.001 | 4,397,000 |
| டொங்கா | 1999 செப்டெம்பர் 14 | 0.001 | 98,000 |
| ட்ரினிடாட் அன்ட டொபேகோ | 1962 செப்டெம்பர் 18 | 0.016 | 1,283,000 |
| ரியுனீசியா | 1956 நவம்பர் 12 | 0.028 | 9,332,000 |
| துருக்கி | 1945 ஒக்டோபர் 24 | 0.440 | 63,451,000 |
| துர்க்மேனிஸ்தான் | 1992 மார்ச் 2 | 0.006 | 4,858,000 |
| துவாலு | 2000 செப்டெம்பர் 5 | | 10,000 |

| | | | |
|---|---|---|---|
| யுகண்டா | 1962 ஒக்டோபர் 25 | 0.004 | 21,029,000 |
| உக்ரெயின் | 1945 ஒக்டோபர் 24 | 0.190 | 50,499,000 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | 1971 டிசெம்பர் 9 | 0.178 | 2,724,000 |
| ஐக்கிய இராச்சியம் | 1945 ஒக்டோபர் 24 | 5.092 | 58,649,000 |
| தன்சேனியா | 1961 டிசெம்பர் 14 | 0.003 | 32,102,000 |
| ஐக்கிய அமெரிக்கா | 1945 ஒக்டோபர் 24 | 25.000 | 270,561,000 |
| உருகுவாய் | 1945 டிசெம்பர் 18 | 0.048 | 3,289,000 |
| உஸ்பெக்கிஸ்தான் | 1992 மார்ச் 2 | 0.025 | 24,050,000 |
| வனுவாட்டு | 1981 செப்டெம்பர் 15 | 0.001 | 182,000 |
| வெனிசுவேலா | 1945 நவம்பர் 15 | 0.160 | 23,436,000 |
| வியட்நாம் | 1977 செப்டெம்பர் 20 | 0.007 | 76,325,000 |
| யெமென் | 1947 செப்டெம்பர் 30 | 0.010 | 17,071,000 |
| யூகோஸ்லாவியா | 2000 நவம்பர் 1 | 0.026 | 10,615,000 |
| ஸம்பியா | 1964 டிசெம்பர் 1 | 0.002 | 8,781,000 |
| ஸிம்பாப்வே | 1980 ஓகஸ்ட் 25 | 0.009 | 12,684,000 |

ஐக்கிய நாடுகளில் அங்கத்துவம் வகிக்காவிட்டாலும் அதன் நடவடிக்கைகள் சிலவற்றில் பங்குபற்றும் நாடுகள் பின்வரும் விகிதாசார அடிப்படையில் ஐ.நா. தாபனத்தின் செலவுகளுக்குப் பங்களிப்புச் செய்யும்படி கேட்கப்படலாம்:

| | |
|---|---|
| வத்திக்கான் | 0.001% |
| சுவிற்சர்லாந்து | 1.215% |

## அமைதிகாக்கும் செயற்பாடுகள்: முன்னையவையும் தற்போதயவையும்
### (2000 டிசெம்பரில் இருந்தவாறு)

***UNTSO**
ஐக்கிய நாடுகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு அமைப்பு (ஜெரூசலம்)
1948 ஜூன்

***UNMOGIP**
இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஐக்கிய நாடுகள் அவதானிப்புக் குழு
1949 ஜனவரி

**UNEFI**
முதலாவது ஐக்கிய நாடுகள் அவசரகாலப் படை (காஸா)
1956 நவம்பர் - 1967 ஜூன்

**UNOGIL**
லெபனானில் ஐக்கிய நாடுகள் அவதானிப்புக் குழு
1958 ஜூன் - டிசெம்பர்

**ONUC**
கொங்கோவில் ஐக்கிய நாடுகள் செயற்பாடு
1960 ஜூலை - 1964 ஜூன்

**UNSF**
மேற்கு நியூ கினியில் (மேற்கு ஐரியன்) ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் படை
1962 ஒக்டோபர் - 1963 ஏப்பிரல்

**UNYOM**
ஐக்கிய நாடுகள் யெமென் அவதானிப்புப் பணி
1963 ஜூலை - 1964 செப்டெம்பர்

***UNFICYP**
சைப்பிரஸில் ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படை
1964 மார்ச்

**DOMREP**
டொமினிக்கன் குடியரசில் செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியின் தூதுப் பணி
1965 மே - 1966 ஒக்டோபர்

**UNIPOM**
ஐக்கிய நாடுகள் இந்திய-பாகிஸ்தான் அவதானிப்புப் பணி
1965 செப்டெம்பர் - 1966 மார்ச்

**UNEF II**
இரண்டாவது ஐக்கிய நாடுகள் அவசரகாலப் படை (சுயெஸ் கால்வாய், சைனாய் குடாநாடு)
1973 ஒக்டோபர் - 1979 ஜூலை

***UNDOF**
ஐக்கிய நாடுகள் படைவிலக்கல் அவதானிப்புப் படை (சிரியாவின் கோலான் குன்றுகள்)
1974 ஜூன்

***UNIFIL**
லெபனானில் ஐக்கிய நாடுகள் இடைக்காலப் படை
1978 மார்ச்

**UNGOMAP**
ஆப்கானிஸ்தானிலும் பாகிஸ்தானிலும் ஐக்கிய நாடுகள் நல்லெண்ணத் தூது
1988 மே - 1990 மார்ச்

**UNIIMOG**
ஐக்கிய நாடுகள் ஈரான்-ஈராக் இராணுவ அவதானிப்புக் குழு
1988 ஓகஸ்ட் - 1991 பெப்ரவரி

**UNAVEM I**
அங்கோலாவில் ஐக்கிய நாடுகளின் ஊர்ஜிதப்படுத்தல் தூது 1
1989 ஜனவரி - 1991 ஜூன்

**UNTAG**
ஐக்கிய நாடுகள் இடைக்கால உதவிக் குழு (நமீபியா, அங்கோலா)
1989 ஏப்பிரல் - 1990 மார்ச்

**ONUCA**
மத்திய அமெரிக்காவில் ஐக்கிய நாடுகள் அவதானிப்புக் குழு
1989 நவம்பர் - 1992 ஜனவரி

***UNIKOM**
ஐக்கிய நாடுகள் ஈரான்-குவைத் அவதானிப்புத் தூதுக்குழு
1991 ஏப்பிரல்

**UNAVEM II**
அங்கோலாவில் ஐக்கிய நாடுகளின் ஊர்ஜிதப்படுத்தல் தூது 2
1991 ஜூன் - 1995 பெப்ரவரி

**ONUSAL**
எல் சல்வதோரில் ஐக்கிய நாடுகள் அவதானிப்புப் பணி
1991 ஜூலை - 1995 ஏப்பிரல்

***MINURSO**
மேற்கு சகாராவில் சர்வஜன வாக்கெடுப்பிற்கான ஐக்கிய நாடுகள் அவதானிப்புப் பணி
1991 ஏப்பிரல்

**UNAMIC**
கம்போடியாவில் ஐக்கிய நாடுகள் முன்னோடித் தூதுக்குழு
1991 ஒக்டோபர் - 1992 மார்ச்

**UNPROFOR**
ஐக்கிய நாடுகள் பாதுகாவல் படை (முன்னாள் யூகோஸ்லாவியாவில்)
1992 மார்ச் - 1995 டிசெம்பர்

**UNTAC**
கம்போடியாவில் ஐக்கிய நாடுகள் இடைக்கால அதிகாரசபை
1992 மார்ச் - 1993 செப்டெம்பர்

**UNOSOM I**
சோமாலியாவில் ஐக்கிய நாடுகள் செயற்பாடு 1
1992 ஏப்பிரல் - 1993 மார்ச்

**ONUMOZ**
மொஸாம்பிக்கில் ஐக்கிய நாடுகள் செயற்பாடு
1992 டிசெம்பர் - 1994 டிசெம்பர்

**UNOSOM II**
சோமாலியாவில் ஐக்கிய நாடுகள் செயற்பாடு 2
1993 மார்ச் - 1995 மார்ச்

**UNOMUR**
யுகண்டா-ருவாண்டாவில் ஐக்கிய நாடுகள் அவதானிப்புப் பணி
1993 ஜூன் - 1994 செப்டெம்பர்

***UNOMIG**
ஜோர்ஜியாவில் ஐக்கிய நாடுகள் அவதானிப்புப் பணி
1993 ஓகஸ்ட்

**UNOMIL**
லைபீரியாவில் ஐக்கிய நாடுகள் அவதானிப்புப் பணி
1993 செப்டெம்பர் - 1997 செப்டெம்பர்

**UNMIH**
ஹைத்தியில் ஐக்கிய நாடுகள் தூதுக்குழு
1993 செப்டெம்பர் - 1996 ஜூன்

**UNAMIR**
ருவாண்டாவுக்கான ஐக்கிய நாடுகள் உதவித் தூதுக்குழு
1993 ஒக்டோபர் - 1996 மார்ச்

**UNASOG**
ஐக்கிய நாடுகள் ஔசௌ ஸ்ட்ரிப் அவதானிப்புக் குழு (சாட்/லிபியா)
1994 மே - ஜூன்

**UNMOT**
தஜிகிஸ்தானில் ஐக்கிய நாட்டு அவதானிகளின் தூது
1994 டிசெம்பர் - 2000 மே

**UNAVEM III**
அங்கோலாவில் ஐக்கிய நாடுகளின் ஊர்ஜிதப்படுத்தல் தூது 3
1995 பெப்ரவரி - 1997 ஜூன்

**UNCRO**
குறோவேசியாவில் நம்பிக்கையை மீள ஏற்படுத்தும் ஐக்கிய நாடுகள் செயற்பாடு
1995 மார்ச் - 1996 ஜனவரி

**UNPREDEP**
ஐக்கிய நாடுகளின் முன்னெச்சரிக்கைப் படை (முன்னாள் யூகோஸ்லாவியக் குடியரசான மசிடோனியாவில்)
1995 மார்ச் - 1999 பெப்ரவரி

***UNMIBH**
பொஸ்னியா-ஹெர்ஸகோவினாவில் ஐக்கிய நாடுகளின் தூது
1995 டிசெம்பர்

**UNTAES**
கிழக்கு ஸ்லவோனியா, பரஞ்சா, மேற்கு சிர்மியம் (குறோவேசியா) ஆகியவற்றிற்கான ஐக்கிய நாடுகள்
இடைக்கால நிர்வாகம்
1996 ஜனவரி - 1998 ஜனவரி

***UNMOP**
பிரிவ்லக்காவில் ஐக்கிய நாட்டு அவதானிகளின் தூது
1996 ஜனவரி

**UNSMIH**
ஹைத்தியில் ஐக்கிய நாடுகள் உதவிப் பணி
1996 ஜூலை - 1997 ஜூலை

**MINUGUA**
குவாத்தமாலாவில் ஐக்கிய நாடுகளின் ஊர்ஜிதப்படுத்தல் தூது
1997 ஜனவரி - மே

**MONUA**
அங்கோலாவில் ஐக்கிய நாடுகளின் அவதானிப்புப் பணி
1997 ஜூலை - 1999 பெப்ரவரி

**UNTMIH**
ஹைத்தியில் ஐக்கிய நாடுகளின் இடைக்காலத் தூதுக்குழு
1997 ஓகஸ்ட் - நவம்பர்

**MIPONUH**
ஹைத்தியில் ஐக்கிய நாடுகளின் சிவிலியன் காவற்படைப் பணி
1997 டிசெம்பர் - 2000 மார்ச்

**UNPSG**
குறோவேசியாவில் ஐக்கிய நாடுகள் சிவிலியன் காவற்படை உதவிக் குழு
1998 ஜனவரி - ஒக்டோபர்

**MINURCA**
மத்திய ஆபிரிக்கக் குடியரசில் ஐக்கிய நாடுகளின் பணி
1998 ஏப்பிரல் - 2000 பெப்ரவரி

**UNOMSIL**
சியரா லியோனில் ஐக்கிய நாடுகளின் அவதானிப்புப் பணி
1998 ஜூலை - 1999 ஒக்டோபர்

***UNMIK**
கொசோவாவில் ஐக்கிய நாடுகளின் இடைக்கால நிர்வாகப் பணி
1999 ஜூன்

***UNAMSIL**
சியரா லியோனில் ஐக்கிய நாடுகளின் தூதுப் பணி
1999 ஒக்டோபர்

***UNTAET**
கிழக்கு ரீமோரில் ஐக்கிய நாடுகளின் இடைக்கால நிர்வாகம்
1999 ஒக்டோபர்

***MONUC**
கொங்கோ ஜனநாயகக் குடியரசில் ஐக்கிய நாடுகளின் அவதானிப்புப் பணி
1999 டிசெம்பர்

***UNMEE**
எதியோப்பியாவிலும் எரிட்ரியாவிலும் ஐக்கிய நாடுகளின் தூதுப் பணி
2000 ஜூலை

---

* 2000 டிசெம்பரில் நடைமுறையிலிருந்த செயற்பாடுகள்.

# ஐக்கிய நாடுகளின் விசேட அனுஷ்டானங்கள்

## சர்வதேச தசாப்தங்களும் ஆண்டுகளும்

| | |
|---|---|
| 1993-2002 | ஆபிரிக்காவுக்கான இரண்டாவது கைத்தொழில் அபிவிருத்தித் தசாப்தம் |
| 1993-2002 | வலது குறைந்தோருக்கான ஆசிய-பசுபிக் தசாப்தம் |
| 1993-2003 | இனவாதம், இனப் பாரபட்சத்திற்கு எதிரான மூன்றாவது தசாப்தம் |
| 1994-2004 | உலகின் ஆதிவாசிகளுக்கான சர்வதேச தசாப்தம் |
| 1995-2004 | மனித உரிமைகள் கல்விக்கான ஐக்கிய நாடுகள் தசாப்தம் |
| 1997-2006 | வறுமை ஒழிப்பிற்கான ஐக்கிய நாடுகள் தசாப்தம் |
| 2001-2010 | காலனித்துவ ஒழிப்பிற்கான இரண்டாவது சர்வதேச தசாப்தம் |
| 2001-2010 | உலகச் சிறுவர்களுக்கென சமாதான, சாத்வீகக் கலாசாரத்தை வளர்ப்பதற்கான சர்வதேச தசாப்தம் |
| 2001 | தொண்டர்களுக்கான சர்வதேச ஆண்டு |
| 2001 | நாகரிகங்களுக்கிடையே நல்லுறவை வளர்ப்பதற்கான ஐக்கிய நாடுகள் ஆண்டு |
| 2001 | இனவாதம், இனப் பாரபட்சம், அந்நியர் வெறுப்பு மற்றும் வெறுப்புணர்வுகளுக்கு எதிராக மக்கள் ஆதரவைத் திரட்டும் சர்வதேச ஆண்டு |
| 2002 | மலைகள் தொடர்பான சர்வதேச ஆண்டு |
| 2002 | சூழல்சார் சுற்றுலா தொடர்பான சர்வதேச ஆண்டு |
| 2003 | தூய நீர் தொடர்பான சர்வதேச ஆண்டு |
| 2005 | சிறுகடன் தொடர்பான சர்வதேச ஆண்டு |

## வருடாந்த தினங்களும் வாரங்களும்

| | |
|---|---|
| மார்ச் 8 | பெண்களின் உரிமைகளுக்கும் சர்வதேச சமாதானத்திற்குமான ஐக்கிய நாடுகள் தினம் |
| மார்ச் 21 | இனப் பாரபட்சங்களின் ஒழிப்புக்கான சர்வதேச தினம் |
| மார்ச் 21 தொடக்கம் | இனவாதத்திற்கும் இனப் பாரபட்சத்திற்கும் எதிராகப் போராடும் மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வாரம் |
| மார்ச் 22 | உலக நீர்வளங்கள் தினம் |
| மே 3 | உலக பத்திரிகைச் சுதந்திர தினம் |
| மே 15 | குடும்பங்கள் தொடர்பான சர்வதேச தினம் |
| மே 22 | உயிரினங்களின் பல்வகைத் தன்மை தொடர்பான சர்வதேச தினம் |

| | |
|---|---|
| மே 25 | |
| தொடக்கம் | சுயாட்சி இல்லாத பிரதேசங்களின் மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வாரம் |
| ஜூன் 4 | வன்முறைகளுக்கு இலக்காகும் அப்பாவிச் சிறுவர்களுக்கான சர்வதேச தினம் |
| ஜூன் 5 | உலக சுற்றாடல் தினம் |
| ஜூன் 17 | காடுகளின் அழிவையும் வறட்சியையும் தடுப்பதற்கான உலக தினம் |
| ஜூன் 20 | உலக அகதிகள் தினம் |
| ஜூன் 26 | போதைப் பொருள்களின் துஷ்பிரயோகத்திற்கும் வியாபாரத்திற்கும் எதிரான சர்வதேச தினம் |
| ஜூன் 26 | சித்திரவதைக்குள்ளான மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் சர்வதேச தினம் |
| ஜூலையின் முதற் சனி | சர்வதேச கூட்டுறவு தினம் |
| ஜூலை 11 | உலக சனத்தொகை தினம் |
| ஓகஸ்ட் 9 | உலகின் ஆதிவாசிகளுக்கான சர்வதேச தினம் |
| ஓகஸ்ட் 12 | சர்வதேச இளைஞர் தினம் |
| செப்டெம்பர் 16 | ஓஸோன் வாயுப் படையைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் |
| செப்டெம்பர் | சர்வதேச சமாதான தினம் (பொதுச்சபையின் வருடாந்தக் கூட்டத்தொடர் ஆரம்பமாகும் தினம்) |
| ஒக்டோபர் 1 | வயோதிபர்களுக்கான சர்வதேச தினம் |
| ஒக்டோபரின் முதற் திங்கள் | உலக வசிப்பிட தினம் |
| ஒக்டோபரின் இரண்டாவது புதன் | இயற்கை அழிவுகளைக் குறைப்பதற்கான சர்வதேச தினம் |

| | |
|---|---|
| ஒக்டோபர் 4-10 | உலக விண்வெளி வாரம் |
| ஒக்டோபர் 16 | உலக உணவு தினம் |
| ஒக்டோபர் 17 | வறுமை ஒழிப்பிற்கான சர்வதேச தினம் |
| ஒக்டோபர் 24 | ஐக்கிய நாடுகள் தினம் |
| ஒக்டோபர் 24-30 | ஆயுதபரிகரண வாரம் |
| நவம்பர் 16 | சர்வதேச சகிப்புத்தன்மை தினம் |
| நவம்பர் 20 | ஆபிரிக்கக் கைத்தொழில்மயமாக்கல் தினம் |
| நவம்பர் 21 | உலக தொலைக்காட்சி தினம் |
| நவம்பர் 25 | பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் |

| | |
|---|---|
| நவம்பர் 29 | பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பதற்கான சர்வதேச தினம் |
| டிசெம்பர் 1 | சர்வதேச எயிட்ஸ் தினம் |
| டிசெம்பர் 2 | அடிமைத்தன ஒழிப்புக்கான சர்வதேச தினம் |
| டிசெம்பர் 3 | வலது குறைந்தோருக்கான சர்வதேச தினம் |
| டிசெம்பர் 10 | மனித உரிமைகள் தினம் |
| டிசெம்பர் 18 | சர்வதேச குடிபெயர்வோர் தினம் |

## ஏனைய சர்வதேச தினங்கள்

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அனுஷ்டிக்கப்படும் ஏனைய சர்வதேச தினங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| பெப்ரவரி 21 | சர்வதேச தாய்மொழி தினம் |
| மார்ச் 23 | உலக வளிமண்டலவியல் தினம் |
| ஏப்பிரல் 7 | உலக சுகாதார தினம் |
| ஏப்பிரல் 23 | உலக புத்தக மற்றும் ஆக்கியோனுரிமை தினம் |
| மே 17 | உலக தொலைத்தொடர்பு தினம் |
| மே 31 | உலக புகையிலை தவிர்ப்பு தினம் |
| ஓகஸ்ட் 23 | அடிமை வர்த்தகத்தை நினைவுகூருவதற்கும் அதனை ஒழிப்பதற்குமான சர்வதேச தினம் |
| செப்டெம்பர் 8 | சர்வதேச படிப்பறிவு தினம் |
| செப்டெம்பர் இறுதி வாரம் | உலக கடற்றுறை தினம் |
| ஒக்டோபர் 5 | உலக ஆசிரியர்கள் தினம் |
| ஒக்டோபர் 9 | உலக தபால் தினம் |
| ஒக்டோபர் 10 | உலக மனநல தினம் |
| ஒக்டோபர் 24 | உலக அபிவிருத்தித் தகவல் தினம் |
| நவம்பர் 20, (வேறுபடலாம்) | அனைத்துலகச் சிறுவர் தினம் |
| டிசெம்பர் 5 | பொருளாதார, சமூக அபிவிருத்திக்கான சர்வதேச தொண்டர் தினம் |